408

...ங்கள்

THE REGISTRAR
17 JUL 1939
MADRAS

408
2435



டி. என். ராஜரத்னம்

# தமிழரசு

ஒவ்வொரு தமிழ் மாதம் முதல் தேதியும் வெளி வரும்.

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, சிலோன் உள்நாட்டிற்கு | 1—0—0 |
| | பர்மா, பினங்கு சிங்கப்பூர், தென் ஆப்ரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு | 2—0—0 |
| | ஜீவிய சந்தா | 20—0—0 |
| | தனிப் பிரதி விலை | 0—1—0 |
| | மலாய் நாட்டுக்கு 10 காசு அல்லது | 0---2---0 |

## சந்தா நேயர்களுக்கு

1. சந்தாத் தொகை முன் பணமாகவே மணியாடர் செய்ய வேண்டும். வீண் செலவு அதிகமாகிறபடியால் வி. பி. யில் அனுப்ப முடியாது.

2. விலாசம் மாறும் சந்தாதாரர்கள் புதிய விலாசத்தையும் சந்தா நம்பரையும் பத்திரிகை வெளியாவதற்கு ஒரு வாரம் முன்னதாகவே எழுத வேண்டும்.

3. பதிலுக்கு ரிப்ளை கார்டோ, தபால் தலையோ அனுப்ப வேண்டும்.

## கட்டுரை எழுதுவோருக்கு

1. கருத்தமைந்த கட்டுரைகள், ஹாஸ்ய வியாசங்கள், சிறு கதைகள் எளிய - இனிய நடையிலுள்ள பழைய - புதிய கவிதைகள், கலைகள் சம்பந்தமான கட்டுரைகள், நல்ல மொழி பெயர்ப்புகள், ஏற்றுக் கொள்ளப்படும்.

2. விஷயங்கள், நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதப்பட வேண்டும். சுருக்கமான விஷயங்கள் முன்னர் கவனிக்கப்படும்.

3. அனுப்பும் எல்லா விஷயங்களுக்கும் காப்பி வைத்துக் கொண்டே அனுப்ப வேண்டும். பிரசுரமாகாத விஷயங்களைத் திருப்பி அனுப்ப வேண்டுமானல் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

4. மதிப்புரைக்கு நூல்களும், மாற்றுப் பத்திரிகைகளும், வெளியிட வியாசங்களும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்ப வேண்டும்.

ஆசிரியர்,
'தமிழரசு'
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

சென்னை-600 008

சென்னை

## டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரவர்களுக்கு சிவப்பிரகாச சுவாமிகளால் அருளப்பெற்ற வரப்பிரசாதங்கள்.

17 JUL 1939

பர்மாவில் சகலராலும் புகழ்ந்து கொண்டாடப்படும் நவரத்தினங்கள்.

## இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசியின்றிக் கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, வீக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல், சுரம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பீடிக்கப்பட் டிருந்தாலும்,

# இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்



புத்திர உற்பத்தியை யளிக்கும்

என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வரவழைத்து உபயோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனிபோல் நீங்கி விடும்.

சென்னை-600 008

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போகும் போது தூள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டு வரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும்; இரத்த விருத்தி யுண்டாகும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்து வஸ்துக்களுடன் விதை திறாசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதி கரிக்கச் செய்வதோடு, இரு பாலர்களின் இச்சையையும் பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள் குழந்தையில்லாத தம்பதிகளுக்குப் புத்திரசந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சுரத்தையும் 10 நாளில் குறைத்து விடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும், சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற் றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப்போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராள மாக அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

## இன்பசார மாத்திரையைப்பற்றிய சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

### ஓர் அரிய சஞ்சீவி

14 வயதுள்ள பெண் குழந்தைக்குச் சன்னிபாத சுரமும், கப வாத சுரமும், அதிகரித்து அபாய நிலைமையில் இருக்கும்போது டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரிடத்தில் காண்பித்ததில் அபாய கரமான நிலையாயினும் இன்பசார மாத்திரையால் குணமடையும் என்று மூன்று மாத்திரை கொடுத்தார். முதல் மாத்திரை கொடுத்த அரைமணி நேரத்திற்கெல்லாம் 105 டிக்கிரி இருந்த சுரம் 102-க்கு இறங்கி விட்டது. மற்ற இரண்டு மாத்திரை கொடுத்ததும் 99-டிக் கிரிக்கு இறங்கி விட்டது. மீண்டும் சுரம் அதிகரிக்கவில்லை. பிறகு டாக்டர் காஞ்சீபுரம் உற்சவத்திற்குச் சென்றார். இப்போது குழந்தை சௌக்கியமாய் இருக்கின்றது. இன்பசாரம் என்னும் மாத்திரை ஓர் அரிய சஞ்சீவி எனவே சொல்லலாம்.

சாமி. வேங்கடேச பெருமாள் செட்டி.

## க்ஷயரோகம் நீங்கிற்று

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

என்னுடைய நாயகிக்கு ஏற்பட்டிருந்த க்ஷயரோகம் காரணமாய் அதிகமாய்க் காய்ந்துகொண் டிருந்த சுரமும், இருமலும் தங்கள் இன்பசாரம் என்னும் மாத்திரைகளில் சில புட்டி சாப்பிட்டவுடன் நீங்கிவிட்டது. இப்போது நிறையிலும் அதிகப்பட்டிருக்கின்றது. இருமலும், சுரமும் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டன. தங்களுடைய இன்பசார மாத்திரை ஆச்சரியகரமான மருந்து என்பதில் சந்தேகமில்லை. இதை க்ஷயரோகத்தால் துன்பப்படும் என்னுடைய சிநேகிதர்களுக்கும் சொல்லி வருகின்றேன்.

வி. ராமநாத ஐயர்,

7—5—32. கார்ட்டன் வூட்ராம் கம்பெனி, மதராஸ்.

## குழந்தை பிறந்தது

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குச் சென்று, பல தானங்களைச் செய்தும் எனக்குப் புத்திர சந்தான மில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் புத்திர உற்பத்தி யுண்டானால் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வாக்களித்தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை என்னென்று புகழ்வேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பதாயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணங் கிடையாது. வேண்டுமானால் கிருஷ்ண அண்டு கம்பெனியாரையும், கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பி யிருக்கிறேன். பெற்றுக் கொண்டு என்னை மன்னிக்கவும்.

தங்கள் அன்புள்ள,

தேவரப்பட்டு அப்பய்ய செட்டியார்.

கவனிப்பு:—இன்னும் அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் இடமில்லாமையால் சில மாத்திரம் இங்குக் குறிப்பிட்டோம்.

ஒரு மாதம் சாப்பிடக் கூடிய

**30 மாத்திரைகள் அடங்கிய புட்டி விலை ரூபா 5.**

# சகல மேக சித்தாதி எண்ணெய்

இந்த எண்ணெயைக் காலையில் ஒரு தேக்கரண்டி அல்லது அரை அவுன்சு எடுத்துக்கொண்டு ஆழாக்கு பசும்பாலில் கலந்து சாப்பிட வேண்டும். இரண்டு மூன்று தரம் மலம் தள்ளும். மேக வாய்வு, கைகால் பிடிப்பு, உடம்பு வலி நீங்கும். வயிற்றில் தங்கிய வாய்வையும் வெளிப்படுத்துவதுடன், பெண்களுக்குண்டாகும் சூதக வாய்வு, சூதக வலி, பித்த குன்மம், வெள்ளை வியாதி, மூலம், பவுத்திரம், குஷ்டம் இவைகளைப் போக்கும். வயிற்றிலுள்ள இரணங்களை ஆற்றும்.

இந்த எண்ணெய் சாப்பிடும்போது தயிர் சாதம் அல்லது மோர் சாதம் சாப்பிட வேண்டும். எண்ணெயை இரண்டு நாளைக்கு ஒரு முறை சாப்பிட வேண்டும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்ணெய். வாத சரீரம் இளைத்துவிடும்.

## சில அபிப்பிராயங்கள்

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் ஒரு வருட காலமாய்ப் பல வைத்தியர்களிடம் எண்ணெய்களும், லேகியங்களும், ஆங்கில மருந்துகளும், இன்ஜெக்ஷன்களும் கொடுத்து என் மனைவிக்குச் சிகிச்சை செய்து ஒன்றும் பயன் படவில்லை. கடைசியில் சென்னைக் கோபாலாசாரியார் உங்களைப் பற்றிக் கூறினார். அவர் வார்த்தைக் கிணங்கி தங்களிடம் வந்து சகல மேக சித்தாதி எண்ணெயை வாங்கிக்கொண்டுபோய் 5-நாள் கொடுத்தேன். முதல் நாளிலேயே கணுக்களில் இருந்த மேக நீரி லுண்டான வீக்கங்கள் நீங்கிவிட்டன. மூன்றாம் நாள் சம்பூரண சுகத்தைத் தந்தது. நீங்கள் கூறியபடி 3-ஆம் நாள் எண்ணெய் சாப்பிடும் வரையில் தயிரன்னத்தை இரவு பகலாகக் கொடுத்து வந்தோம். இப்போது என் மனைவி உலாவி வருகின்றாள். இனி என்ன மருந்து கொடுக்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

சென்னை
15—5—30

இப்படிக்கு,
அண்ணாவையங்கார்.

---

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் ஒண்ணுக்குப் போகும்போது நீர்துவாரத்திலிருந்து இரத்தம் விழுந்து வந்தது. அதற்குத் தங்கள் சகலமேக சித்தாதி எண்ணெய் 3 வேளை சாப்பிட்டதில் பூரா குணம்பெற்றேன்.

இப்படிக்கு,
இராஜரத்தினம் செட்டி.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தங்கள் முன்னம் அனுப்பிய சகல மேக சித்தாதி எண்ணெயைச் சாப்பிட்டு என் வியாதி சௌக்கியமாய் நீங்கிவிட்டதற்காக நான் தங்களுக்கு மிகவும் நன்றியுள்ளவனு யிருக்கிறேன். இப்பவும் நமக்கு வேண்டியவர்களின் தேவைக்காக என் விலாசத்துக்கு சகல மேக சித்தாதி எண்ணெய் புட்டி 1 வி. பி. யில் அனுப்பி வைப்பதுடன் அனுபான பத்திய விவரமடங்கிய டைரக்ஷன் நோட்டீசும் அனுப்பி வைக்கவும்.

தங்களன்புள்ள,

கிருஷ்ணசாமி நாயகர்,

2—7—34. பாங்கி குமாஸ்தா, மேட்டுத்தெரு, ஆத்தூர்

சேலம் ஜில்லா.

இத்தகைய இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிகள் பெற்ற

சகல மேக சித்தாதி எண்ணெய் புட்டி 1-க்கு விலை ரூ. 5.

# தைலாமிர்தம்



இத் தைலம் பலவித உயர்ந்த பச்சிலைகளின் ரசமும் பசுவின் பால் கோரோசனை முதலான உயர்ந்த வஸ்துக்களும், மூளையைக் குளிரச் செய்யும் வித்துத் தினுசுகளும் மற்றும் பல கடைச் சரக்குகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இத் தைலத்தைத் தேய்த்து ஸ்நானம்செய்து வர, கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் குத்தல், கண்ணில் பூ விழுதல், பார்வை மந்தம், கண் கூசல் முதலான சகல நேத்திர ரோகங்களையும், மூளைக் கொதிப்பு, தலை சுத்தல், மயக்கம், புத்தி மந்தம், சோம்பல் முதலானவைகளையும் நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியைத் தந்து, புத்தித் தீட்சண்யத்தை உண்டு பண்ணும். ஒத்தைத் தலைவலி, கழுத்து நரம்பு வலி, மண்டைக் குத்தல் இவைகள் போம். மூளையின் கொதிப்பால் உண்டாகும் பைத்தியம் நீங்கும்.

5-பலம் கொண்ட டின் விலை ரூபா 1.

# இணையற்ற அயத்தங்க திராவகம்



நண்பர்களே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷ சுரத்தினாலாவது அல்லது வேறு எந்த சுரத்தினாலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வமெனவே காட்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாது விருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி யதிகரிக்கும். இம்மருந்தைச் சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலை, எலும்புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பால்யர் முதல் வயோதியர் வரை ஆண் பெண் இரு பாலர்களும்

எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம். மக்கள் சுகம்பெற வெண்ணியே குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது.

**நான்கு மாதம் சாப்பிடக் கூடிய மருந்து விலை அணு 12.**

## அ பி ப் பி ர ா ய ம்

அன்புள்ள உண்மை வைத்தியரே!

நான் அடைந்த சுகத்திற்கு என் ஆயுளுள்ளவரை உங்களை மறப்பது நீதியாகாது. என் உடல் மிகவும் மெலிந்திருந்தது; இரத்தம் வற்றியிருந்தது; சோம்பல் அதிகரித்திருந்தது; மயக்கம், அசதி, தூக்கம், செமியாகுணம் இவைகள் என்னை அடக்கியாண்டன. பல வைத்தியர்கள் என்னைக் கைவிட்டு விட்டனர். ஒரு பிரபல டாக்டர் இது உனக்கு முற்றிவிட்டது. இனி இதை நிவர்த்திப்பது மிகவும் கடினம்; ஆண்டவன் பிராப்திபடி நடப்பதே இனி ஆகக் கூடியது. நீ வைத்தியம், வைத்தியம் என்று ஏங்காதே! மனம் நாடிய சகல வஸ்துக்களையும் தின்று உன் ஜீவிய காலத்தை முடி. ஒருகால் இவ்வித வழியில் நீ சுகம் பெறலாம்; வைத்தியத்தினுல் பெற முடியாது!' என உபதேசித்தார். என் வாழ்க்கையே சமாப்தி அடைந்ததாக நான் அப்பொழுது எண்ணினேன்.

நிற்க, உங்கள் 'தமிழரசு' பத்திரிகை விளம்பரத்தைப் பார்த்து, உங்கள் 'அயத்தங்க திராவகத்'திற்கு 3 பாட்டில்களுக்குச் சென்ற 1933-ம் வருடம் நவம்பர் மாதம் ஆர்டர் கொடுத்தேன். அதை தாங்கள் உடனே அனுப்பினீர்கள். அந்த மருந்தை இந்த 1934-ம் வருடம் டிசம்பர் 6வ வரை சாப்பிட்டேன். அது எனக்குப் புத்துயிர் அளித்தது! புனர்ஜன்மம் கொடுத்தது' என்னை ஒரு வீரபுருடனுக ஆக்கியது. இப்போது நான் சரீர சுகஜீவியாய் இருந்து வருகிறேன். சரீர சம்பந்தப்பட்டமட்டில் உள்ள சுக அம்சங்கள் யாவும் எனக்கு உண்டாகி இருக்கிறது. நான் உங்களை வாழ்த்துகிறேன். உங்கள் குடும்பமும், மருந்தும் ஓங்குவதற்குக் கடவுளைப் பிரார்த்திக்கிறேன். எனது இந்திய சோதர சோதரிகள் இதை உட்கொண்டு நன்மை அடைவார்களாக!

G. M. அலிஹுஸையன் M. H. A.

கௌரவ காரியதரிசி, 'ஹுஸைனியா சங்கம்'

ஜெனரல் அட்வர்ட்டைசர், ஆர்டிகலிபெட் நாகூர் 26–12–34.

எமது விலாசம்:

**டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,**

**31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.**

# சௌம்யன்

ஓர் இனிய

சினிமாக் கதை

ஆசிரியர் :

பாரதிதாசன்

(காபிரைட்)

20767.9

N31,N30TA

N39.1.9.7

ஹிம்ஸையா?—அஹிம்ஸையா எது உபயோகமுள்ளது? உலகின் நிலை என்ன? அக்ரமம் ஜயிக்குமா?—இவைபற்றிச் சினிமா முறையில் இயன்ற ஓர் இனிய நாடகம்.—விலை அணா 6.

நூற்றுக்கணக்கில் வேண்டியவர்கள் விலை விவரம் எழுதித் தெரிந்து கொள்க.

விலாசம் :—

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| பிரிட்டிஷார் கவனிப்பார்களா ? | .... | 482 |
| ஆசிரியர் குறிப்புகள் | .... | 484 |
| தமிழ் மகளிரின் பொழுது போக்கு | .... | 488 |
| 'எங்கள் தாத்தா'—(பாட்டு) | .... | 490 |
| சிலம்புச் செல்வம் | .... | 491 |
| கோமதியின் கடிதம்—மாதர் பகுதி | .... | 494 |
| அடைக்கலம் | .... | 495 |
| ஓர் விதவையின் துயர்—பாட்டு | .... | 497 |
| செவிடன் காதில் ஊதும் சங்கு !—சினிமாப் பகுதி | .... | 498 |
| ரம்பையின் காதல்—விமர்சனம் | .... | 503 |
| கொலைக்குப் பரிகாரம் | .... | 508 |
| மதி கூறிய மதி—பாட்டு | .... | 513 |
| ஜெர்மனியின் தோல்வி | .... | 515 |
| இரு கைக்குட்டைகள் | .... | 517 |
| ஏழையின் கனவு—சிறுவர் விருந்து | .... | 521 |
| பள்ளிக் காதல் | .... | 525 |
| அந்தி நேரம்; அப்பா வருவார்—பாட்டு | .... | 529 |
| கமலா பாஸ்கர் | .... | 530 |
| நான் குச்சுக்காரியல்ல. கற்புடையவளே ! | .... | 535 |
| ஜோஸ்யர்வாள் ! | .... | 540 |
| நகைச் சுவை | .... | 543 |
| இலங்கை—சரித்திரப் பகுதி | .... | 545 |
| 'இந்திராபாய்'—தொடர் நாடகம் | .... | 548 |
| வனிதா அல்லது கொலை யுண்ட காரிகை | .... | 554 |


---


குறிப்பு:—'தமிழா'சில் வெளி வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்க ளாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவை யாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாகமாட்டார்.

அன்பே ஆண்டவன்

# தமிழரசு

(மாத வெளியீடு)

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்....'

ஆசிரியர் : டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

| மலர் | பிரமாதி௵ ஆடி௴ | இதழ் |
|---|---|---|
| 10 | 1939௵ ஜுலை௴ 15௳ | 7 |


## பிரிட்டிஷார் கவனிப்பார்களா?

இந்திய நாட்டில் சுமார் 170 ஆண்டுகளாக ஆண்டுவரும் பிரிட்டிஷ் அரசாங்கம், இந்நாட்டில் மக்களின் நம்பிக்கையையும், ஒத்துழைப்பையும், ஆதரவையும் பூரணமாகப் பெற்று ஒழுங்கான முறையில் இந்தியாவை ஆண்டு வருகின்றது. இந்தியர்களுக்குப் பிரிட்டிஷ் அரசாங்கத்தினிடத்தில் அளவுகடந்த நம்பிக்கை இருந்துவருகின்றது. அத்தகைய நம்பிக்கையின் காரணமாக பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு வேண்டியபோதெல்லாம் பணம் உதவியுள்ளார்கள். அதுவுந் தவிர, தங்க நாணயத்தை வழங்காவிடினும் அதைப் பொருட்படுத்தாம லிருக்கின்றனர். தவிர, வெள்ளி நாணயத்தையும் வேண்டுமென்று வற்புறுத்தாமல், தாள்களில் அச்சடித்த நோட்டுக்களை வெகு நம்பிக்கையோடு கையாண்டு வருகின்றார்கள். பிரிட்டிஷ் அரசாங்கமானது எவ்வளவு நோட்டுக்களை அச்சடித்து வெளி விடுகின்றார்களோ, அவ்வளவு பொன் வெள்ளி நாணயங்களை கரன்சி ஆபீசில், தங்கள் வசம் வைத்திருக்கிறார்கள் என்பதைப் பூரணமாக நம்பி யிருக்கிறார்கள். இன்னும், இந்தியர்கள் தங்கள் உயிரைக் காட்டிலும் பிரிட்டிஷ் அரசாங்கத்தை அதிகமாக நம்பி யிருக்கிறார்கள். அத்தகைய நம்பிக்கைக்குக் காரணம் யாதெனில், பிரிட்டிஷ் அரசாங்கம் நடத்திவரும் ஒழுங்கான ராஜரீகத் தன்மையாகும். அத்தகைய பிரிட்டிஷ் அரசாங்கத்தினிடம் அவநம்பிக்கை உண்டாகாதவாறு, இனியும் நடந்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

இத்தகைய அரசாங்கத்தை நடத்திவரும் காங்கிரஸ் கட்சியார்களால் மூன்று முறை அரசாங்கத்தின் பேரால் கடன் வாங்கப்

பட்டது. முதன் முறையில் கேட்ட தொகையை 10 நிமிஷத்தில் செலுத்தப்பட்டது. இரண்டாவது முறையும் அதன்படியே நடந்தது. மூன்ருவது முறை வாங்கியகடன் அப்படிக்கின்றி, புரோக்கர்களுக்கு அண்டர்ரைட் கொடுக்கும்படி ஏற்பட்டுவிட்டது. இதனல் மக்களுக்கு நம்பிக்கை குறையக் காரணம் இருப்பதாகத் தெரிகிறது. இந்த அரசாங்கம்கடனை அதிகப்படியாக வாங்கிக் கொண்டு போவதும் அல்லாமல், வரியையும் புதிப்பித்துக் கொண்டே வருகிறது. இந்த நிலையில்அரசாங்கத்தை நடத்த விட்டு விட்டு, பிரிட்டிஷார் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தால், அவநம்பிக்கையானது பிரிட்டிஷாரைச் சேருமே ஒழிய, இவர்களைச் சேராது. ஆதலால், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை செய்கிறேம். கடன் வாங்கிக் கொண்டேபோனல், வாங்கும் கடனுக்கு வட்டியும் அசலும் திருப்பிக் கொடுப்பதற்கு, மக்களிடத்தில் வரியைப் போட்டுத் தான் வசூலிக்க ஏற்படும். அல்லது வேறு காரணத்தால் திருப்பிக் கொடுக்க முடியாதென்பது திண்ணம்! திண்ணம்!! திண்ணம்!!!

எனவே, இந்த அரசாங்கமானது இதுவரையில் செய்திருக்கும் சட்டங்கள் பலவற்றுள், ஒரு சட்டத்தின் மூலம் வாங்கிய கடனில் இரண்டு பங்கு வட்டி கொடுத்திருந்தால் வட்டியும் முதலும் கொடுக்க வேண்டா மென்றும், 1932-ம் வருடத்துக்கு முன்னேற்பட்ட கடன்களுக்கு வட்டி பூருவுமே கொடுக்க வேண்டா மென்றும் சொல்லி விட்டதால், சட்டத்தை நம்பி லேவாதேவி செய்துக்கொண்டு வந்த இந்தியர்களுக்குள்ளே, பிரிட்டிஷ் அரசாங்கத்தை நம்பி லேவாதேவி செய்துக்கொண்டு வந்த இந்தியர்களுக்குள்ளே அவநம்பிக்கை ஏற்பட்டுவிட்ட காரணத்தால், இனி என்ன நடக்குமோ என்ற பயம் மக்களுக்குள்ளே அதிகரித்து விட்டது. அரசாங்கப் பணத்தையும், பாங்குகளின் பணத்தையும், கோவாபரேடிவ் சொசைட்டிகளின் பணத்தையும், பூருவும் செலுத்திவிட வேண்டு மென்றும், மற்றவர்கள் பணத்தைக் கொடுக்க வேண்டா மென்றும் சொன்ன காரணத்தால், உள்ளுக்குள்ளே நடத்திவந்த லேவாதேவிக்காரர்களின் லாப நஷ்டங்களைப் பிரமாதமாக எடுத்துக் காட்டி 1½ கோடி கடன் தள்ளப்பட்டது என்று விளம்பரம் செய்வதைப் பார்க்கும் மக்கள் அரசாங்கத்தின் போக்கை அவநம்பிக்கைக்கு இடமாகவே மதிக்க முடியும். ஒரு சமயம் இந்த அரசாங்கத்தார், 'தனக்கு மிகுதியாயிருக்கும் பணத்தையே கடன் கொடுத்தார்கள். அந்தப் பணம் தனக்கு மிகுதிப்பட்டுள்ள பணமேயாகும். ஆதலால், கடன் வாங்கியவன் கொடுக்க முடியாத நிலைமையில் இருப்பதால், அவனுக்கு விட்டுக்கொடுப்பது நியாயம்' என்று சொல்லும் பட்சத்தில் அது பொருத்தமேயாகும். இந்த நியாயம் கடன் வாங்கும் அரசாங்கத்திற்கும் உரியதாகாதா என்பதை




## தினமணியும் தொழிலாளர்களும்

நாட்டு ஏழை மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் உதவியளித்து, அவர்களை முன்னேற்ற மடையச் செய்வதற்கே காங்கிரஸ் கட்சியானது இருப்பதாக மேற்படி கட்சியின் தலைவர்கள் சொல்கிறார்கள் அல்லவா? அத்தகைய தலைவர்களில் முதன்மை ஸ்தானம் பெற்ற தினமணிப் பத்திராதிபரும், தினமணிப் பத்திரிக்கைக் காரரும் சேர்ந்து, மேற்படி பத்திரிக்கை ஆபீசுத் தொழிலாளர்களுக்கு வேண்டிய சௌகர்யங்களைச் செய்துக் கொடுக்காததால், தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வீதிகள்தோறும் ஊர்வலம் சென்றுக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய ஊர்வலங்களில் 'தினமணி அட்டூழியம் ஒழிக. பத்திராதிபர் கொடுமை வீழ்க' என்று சொல்லிக்கொண்டு போகின்றார்கள். தினமணிப் பத்திரிக்கை காங்கிரசின் தலைவர்களால் நடத்தப்படும் பத்திரிக்கை. அதுவுமின்றி, காங்கிரசையே புகழ்ந்து ஒரே கட்சியை ஆதரித்து வரும் பத்திரிக்கை என்பது உலகம் அறியும். தங்களிடத்தில் ரத்தம் சிந்திக் கஷ்டப்படும் தொழிலாளர்களுக்கு இரக்கம் காட்டாத இப் பத்திரிக்கையா ஏழை மக்களுக்கு நன்மை செய்யப் போகின்றது. இத்தகைய தலைவர்களா ஏழைத் தொழிலாளர்களை ஆதரிக்கப் போகிறார்கள்.

இனியாவது ஏழைத் தொழிலாளிகள் இக்கட்சியில் தலைவர்களின் சூட்சியைக் கண்டு, போஸ் கட்சியை ஆதரித்து, நன்மை பெற முயல்வார்களாக.

---

நமது மந்திரிமார்கள் நன்கு விளங்கும்படி எடுத்துக் கூறுவார்களா? ஆதலால், பிரிட்டிஷாரைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால், நாட்டில் உள்ள பல கட்சிகளில் ஒவ்வொரு சமயம் ஒவ்வொரு கட்சிகள், நீங்கள் ஏற்படுத்திய முறையில் அரசை ஆளும் என்பது நிச்சயம். எந்தக் கட்சி எந்தக் காலத்தில் அரசை ஆண்டாலும், அந்தக் கட்சியால் பிரிட்டிஷாரிடத்தில் மக்களுக்கு அவநம்பிக்கை உண்டாகாதவாறு, பிரிட்டிஷார் நடந்துக் கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

## பஸ்ஸும் அரசாங்கமும்

சென்னை ராஜதானியிலே ஏறக்குறைய 20,000 பஸ்கள் ரோட்டுக்களில் ஓடிக்கொண் டிருக்கின்றன. இந்தப் பஸ்களால், ரயில்வேக் கம்பெனிகளுக்குப் பெருவாரியான நஷ்டம் ஏற்பட் டிருக்கின்றது. ஜனங்கள் போக்குவரத்துப் பிரயாணங்கள் பஸ் கட்டணம் குறைவின் காரணத்தால், ரயில் பிரயாணம் குறைந்து விட்டது. பல இடங்களில் ரயில்வேக் கம்பெனிக்காரர்களும் கட்ட ணத்தைக் குறைத்திருக்கின்றார்கள். இப்படி யிருக்க இதன் மத்தி யில் ரயில்வேக் கம்பெனிக்காரர்கள், தங்கள் நஷ்டத்தை ஈடுசெய் வதற்காக எல்லா பஸ் பிரயாணங்களையும் தாங்களே வைத்துக் கொள்ள வேண்டுமென்று முயற்சிப்பதாகக் கேள்விப்படுகிறோம். அதுவுந் தவிற, பஸ் வேலை ஆரம்பிப்பதற்காக எக்ஸ்பர்ட் ஒருவரை இங்கிலாந்திலிருந்து வரவழைத்திருப்பதாகவும் கேள்விப் படு கிறோம். அப்படி நாம் கேள்விப்பட்டது வாஸ்தவமானால், பிரை வேட் பஸ் சொந்தக்காரர்களுக்குப் பெருவாரியான நஷ்டம் ஏற்படும். அதுவுந் தவிற, பிரயாணிகளுக்கும் கட்டணம் உயர்ந்து விடும். ஆகையால், பிரயாணிகளுக்கும், பஸ் சொந்தக்காரர் களுக்கும், ரயில்வேக் கம்பெனிக்காரர்களுக்கும் இடையூறு உண்டாக்காதபடிச் செய்ய வேண்டுமானால், நமது பிரதம மந்திரி அவர்கள் 'மொனப்பலி' சிஸ்டம் ரயில்வேக் கம்பெனிகாரர்களுக் குக் கொடுக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒரு சமயம் ரயில்வேக்கள் பிரைவேட் மானேஜ்மெண்டில் இருந்த போதிலும், ரயில்வேக்கள் கவர்ன்மெண்டுக்குச் சொந்த மானதால், ரயில்வேயின் நஷ்டம் தங்கள் நஷ்டமாகக் கருதி, 'மொனப்பலி' சிஸ்டம் ரயில்வேக் கம்பெனிகளுக்குக் கொடுப்பார் களேயானால், பஸ் சொந்தக்காரர்களுக்குப் பணம் கட்டி, இப்போது நடைமுறையிலிருக்கும் பஸ்களை எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் ஒரு வருடத்திய லைசென்ஸ் பணம் கட்டாமல் ஓட்டிக் கொள்ளும்படி உத்தரவிட வேண்டும். அதுவும் தவிற, பிரயாணிகளின் கட்டணத்தை உயர்த்தாமல் இப்பொழுது நடை பெறும் கட்டணத்திலேயே நடத்தி வரவேண்டும். இவற்றை எல்லாம் செய்யாவிட்டால், மக்களுக்கு இப்போதுள்ள கவர்ன் மெண்டார் தீமையை இழைத்தவர்கள் ஆவார்கள். பஸ் வியாபாரம் செய்யும் முதலாளிகள் இதை ஊன்றிக் கவனித்தல் வேண்டும்.

இப்பொழுது பரீக்ஷார்த்தமாக திருப்பதி லைனில் இரண்டு பஸ்களை ரயில்வேக் கம்பெனிக்காரர்கள் ஓட்டுவதாகக் கேள்விப் படுகிறோம். அது வாஸ்தவமானால், அரசாங்கத்தார் இதைப்பற்றி ஓர் அறிக்கை வெளியிட வேண்டும். தவிர ஐந்து

வருடத்துக்குக் குறையாமல் பஸ் சொந்தக்காரர்களுக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டும்.

## மதுவிலக்கு

கள் சாராயக் கடைகளை எடுத்து விடுவதால், $4\frac{1}{2}$ கோடி ரூபாய் வருமானம் குறைந்து விடுகிறது. அந்த $4\frac{1}{2}$ கோடி ரூபாயும் வியாபாரிகள் அடையும் லாபம் $4\frac{1}{2}$ கோடி ரூபாயும், கள்ளுச் சாராய உற்பத்தி $4\frac{1}{2}$ கோடி ரூபாயும் ஆகிய இத்தகைய இனங்களில் செலவழியும் பணம் ஏழைகளுக்கு மிச்சப்படும் என்று சொல்கிறார்கள். அது வாஸ்தவம்தான். ஆனால், அந்தப் பணமானது ஏழைகளால் கொடுக்கப்படும் பணமா என்பதுதான் ஆராயத்தகுந்த விஷயமாகும். அரசாங்கத்திற்குத் துண்டுவிழும் $4\frac{1}{2}$ கோடி பணத்தில், $2\frac{1}{2}$ கோடிக்கு அதிகமாக ஒயின், உஸ்கி, பிராந்தி, ஷாம்ப் ஒயின், போர்ட் ஒயின், பட்டைச் சாராயம் ஆகியவைகளை விற்கப்பட்டவர்களால் வரக்கூடிய வருமானமாகும். இவ்வகைகளை உபயோகிப்பவர்களும், இதற்காகப் பணம் கொடுப்பவர்களும் பணக்காரர்களே ஒழிய ஏழைகளல்ல. ஆதலால், பாதிப்பணத்திற்கு மேல் பணக்காரர்களுக்கே சகாயமாகும் கள்ளுச்சாராயக் கடைகளை நிறுத்துவதால். ஏழை மக்கள் குடிப்பதெல்லாம் தென்னங் கள், பனங் கள் முதலியவை யாகும். இவற்றால் ஏற்படும் நஷ்டம் ஒரு கோடிக்குள்ளாகவே இருக்கும். எனவே, கள்ளுக்கடை சாராயக் கடை எடுத்து விடுவதால், பணக்காரர்கள் குடிக்கும் வரும்படி குறையுமே ஒழிய, ஏழைமக்கள் குடிக்கும் வகையில் வரும்படி அதிகம் குறையாது. தவிர, கள்ளுக்கடையின் சாராயக்கடையின் நீக்கத்தால் மாகாண அரசாங்கத்திற்கு $4\frac{1}{2}$ கோடி வருமானம் குறைவதோடு நிற்கவில்லை. மத்திய அரசாங்கத்திற்கும் நஷ்டம் ஏற்படுகிறது. எப்படியெனில், கஸ்டம் ஆபீசில் மேனாட்டிலிருந்து வரும் சாராய வகைகளுக்குப் போடும் வரியின் மூலம், கோடிக் கணக்கான பணம் மத்திய அரசாங்கத்திற்கு நஷ்டம் உண்டாகிறது. மாகாண அரசாங்கம் எப்படித் தங்கள் வரும்படியை ஈடு செய்யப் புகையிலை வரி, விற்பனை வரி போடுகின்றார்களோ, அது போல மத்திய அரசாங்கமும் தங்களுக்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்ய மேலும் வரிப்போட ஏற்படும். அத்தகைய வரி உப்பு, தபால் இலாக்கா, வேறு இறக்குமதி யாகும் இரும்பு முதலிய சாமான்கள் மூலம்தான் ஈடுசெய்ய வேண்டி ஏற்படும். எனவே, இத்தகைய பெருந் தொந்தரவுகள் கள் சாராயக்கடை எடுப்பதால் மக்களுக்கு உண்டாகின்றன.

கள்ளுச் சாராயம் குடிப்பது நல்லது என்றும், அதைக் குடித்தால்தான் வீரர்களாகவும், வீர மக்களை உற்பத்தி செய்யக் கூடியவர்களாகவும் இருக்க முடியும் என்று இந்து மதத்திற்கு அடிப்

படையாக உள்ள, உலகம் தோன்றுதற்கு முன்னே அநாதியாய் இருப்பதாக வைதிக இந்துக்களால் சொல்லப்பட்ட இருக்கு வேதத்தின் கண்ணே கூறப்பட்டுள்ளது. இதை உற்பத்தி செய்யும் முறைகள் ஆயிரக்கணக்காக இருக்கு வேதத்திலே கூறப்பட்டிருக்கிறது. இதுவரையிலும் தமிழர்கள் இதை உணராதிருந்திருக்கலாம். அதை நிவர்த்திப்பான் வேண்டி, நமது நாட்டுத் தர்மப் பிரபுவாய் விளங்கும் கனம் இராமசாமிப் பிள்ளை அவர்களால், சிவாநந்த யோகிகள் மூலம் இருக்கு வேதத்தைத் தமிழில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. இனி, இந்நாட்டுத் தமிழர்கள் அனைவரும் வேதத்திற் கூறப்பட்டுள்ள மோக்ஷ சாதனத்திற்கு ஏதுவாகவுள்ளது கள்ளுச் சாராயம் என்பதை ஆரியர்கள் அநேக காலங்களாகக் கையாண்டும் வேதங்களால் கூறப்பட்டும் வந்துள்ளது என்பதை அறிந்துக் கொள்வார்கள். இந்தக் கள் சாராய அரக்கனை ஒழிக்க வேண்டுமென்று கங்கணங் கட்டிய இராவணன் கதி—நிலைமை—புகழ் முதலியவை என்ன நிலைமையில் ஆரியர்கள் கொண்டுபோய் விட்டார்கள் என்பதைத் தமிழர்கள் உணர்ந்துக் கொள்வார்களாக. அதுபோல, இப்பொழுது கள் சாராயத்தை ஒழிக்க முற்பட்ட அரசியல் கதியும் என்ன நிலைமைக்கு வருகிறது என்பதைச் சற்றே பொறுத்துப் பார்ப்போமாக.

இதற்குள்ளாகவே சேலம் ஜில்லாவில் இரகசியமாய்ச் செய்து குடிக்கப்படும் நபர்களைப் பிடிக்கச் சாத்தியமில்லை யென்றும், அதைப் பூரணமாய்த் தடுக்க வேண்டுமானால் பெருவாரியான பணச் செலவு செய்து சிப்பந்திகளை அமைக்க வேண்டுமென்றும் கூற முற்பட்டு விட்டார்கள். எனவே, எல்லா ஜில்லாக்களிலும் கள் சாராயக் கடைகளை எடுத்துவிட்டால், திருட்டுத்தனமாகச் செய்து குடிப்பதைத் தடுப்பதற்காகப் பத்துக்கோடி ரூபாய் செலவழித்தாலொழிய முடியாது! முடியாது! முடியாது!

---

## தந்தை போதனை

காலைப் பொழுதில் கடுந்துயில் நீக்கி
முகம்,கை கால்கள் முற்றும் கழுவி
அகமது குளிர்ந்து அன்னையைத் தொழுது
பள்ளிக் கூடப் பாடம் யாவும்
கள்ள மில்லாமல் கனிவாய்க் கற்றே
ஆசான் நேற்றறி வித்தவை யாவையும்
மாசிலா ஆவின் தன்மைபோல் மறுமுறை
நன்றே மனதிற் கொள்ளின்
குன்றுபோல் கல்வி குவிந்திடும் மகனே! —பா. கண்ணன்

# தமிழ் மகளிரின் பொழுது போக்கு

[மிஸ். R. T. இந்திரா, நாகூர்]

சித்திரைத் திங்கள். அமாவாசையினின்று பதினைந்தாம் நாள். மாலை மணி ஐந்து. கடற்கரையோரம். பொருத்தமான காற்று. காதலனும் காதலியும் பசுங்கிள்ளை யொப்பக் கொஞ்சிக் கொஞ்சிப் பேசிக்கொண்டே செல்வர் ஒரு பக்கம். கன்னிகைகள் பாடசாலை முடிந்ததும் தத்தம் தோழிகளுடன் நல்லாடை யுடுத்தி நடந்து வருவர் மறுபக்கம். வேலையினின்று வீடு திரும்பி, தம் குழந்தைகளுடன் அவர் மழலைச் சொற்களைச் செவிமடுத்தவராய்ப் போவர் வேறொரு பக்கம். படித்த யௌவன வாலிபர்கள், காலை முதல் மாலை வரையில் உண்பதை விடுத்து வேறு தொழிலில்லாம லிருந்தவர்கள், தங்கள் தங்கள் கண்களுக்காகிலும் நல்விருந்தைத் தேடுவோமென, மேல்நாட்டு மக்கள் தாமென நினைத்து நாகரீக உடையுடுத்தி வருவர் கும்பல் கும்பலாய். இவைகளைக் கண்ட என் பள்ளித் தோழி 'சாந்தா' என்னை வந்து அழைத்தனள். அவ்வாறே சென்று இயற்கை அன்னையால் அளிக்கப்பட்ட மணற்குன்றில் அமர்ந்தோம். 'ஏ! நாகரீகப் பேய் பிடித்தாடும் சோம்பேறிகளே! எம்மைப் பாருங்கள்' எனச் செவியிலறைவதைப்போல் அலைகள் ஒன்றின்பின் ஒன்றாக அடித்துக்கொண்டே யிருக்கின்றன. என தாருயிர்த்தோழி திடீரென 'பார்த்தாயா கமலகுமாரி! இக்கடலின் வனப்பை! கவி கம்பனிருப்பில் என்ன அபூர்வமாக வர்ணித்திருப் பான்' என்றனள். 'ஓகோ' உங்கள் கம்பன் ஒருவன்தானிருக்க வேண்டுமோ, கவி வேட்ஸ் வொர்த் (Words worth) பைரன் (Byron) முதலியோரிருந்தால் ஆகாதோ?' என்றேன் நான்.

சாந்தா:—போ, கமலா, நான் சொல்லுவதை மறுப்பதே உனது வழக்கம். கம்பர் கவிநயத்தை நீ அறிந்திருப்பாயானால்........

நான்:—அப்படியல்ல. நீ சொல்லுவதும் உண்மையாக விருக்கலாம். ஆயினும், நீ ஆங்கிலக் கவிகளை விரும்பிப் படிப்பதில்லை. தமிழில் நீ மிகவும் தேர்ச்சி பெற்றவள் என்பதினை இந்நாகையில் யார்தான் அறியார்?

சாந்தா:—எனக்கும் ஆங்கிலக் கவிகளைப்பற்றிப் படிக்கப் பிரியம்தான். என் செய்வது? ஒருபுறம் என் பாட்டி 'படித்துப் படித்துப் பாழாகப் போகிறாள். வீட்டு வேலை சரிவரச் செய்வதில்லை' என்றெல்லாம் குறை கூறுகிறாள். மறுபக்கம் எனதரும் தாயை இழந்த தந்தைக்கு நான் காலத்தில் சமயல் செய்து வைக்க வேண்டி யிருக்கிறது.

நான்:—சரிதான். நீதான் என்ன செய்வாய்? உன் கதியும் இருதலைக் கொள்ளி எறும்புபோல்தா னிருக்கிறது. ஒருபுறம் உன் பாட்டியின் தொல்லை. மறுபுறம் உன் கடமை.

சாந்தா:—ஆம். எல்லாம் கடவுள் செயலல்லவா? இருக்கட்டும் நீ என்ன சொன்னாய்? 'இருதலைக் கொள்ளி எறும்புபோல' என்றனையோ.

நான்:—ஆம்.

சாந்தா:—நீ சொன்ன மூதுரை சரியல்ல என நினைக்கிறேன்.

நான்:—எப்படி ?

சாந்தா:—எப்படியா? இருதலைக் கொள்ளி எறும்பிற்கு உய்யும் வழியுண்டு என்பதை நீ அறிதல் வேண்டும். இரண்டு பக்கமும் நெருப்பு எரிந்து வரும்போது, நடுவிலுள்ள எறும்பு பிழைப்பான் வகை தேடிக் கீழே விழ நேரிடுமல்லாமல் தீக்கிரையாகவே முடியாது. இல்லையா ?

நான்:—அது எப்படி முடியும் ?

சாந்தா:—அதுவா. நான் சொல்கிறேன். இரண்டு பக்கமும் தீ. நெருப்பின் அனல் வீசுகிறது. எறும்பு பிழைக்க வழி தேடி அங்கு மிங்கும் அலைந்து கீழே விழுகிறது. தரையிலிருந்தால் நடுபாகமாக முதலிலேயே தப்பித்துக் கொள்ளும். உயரத்திலிருந்து கீழே விழுந் தால் அது பிழைத்துக் கொள்ளும். சேதம் ஒன்றும் ஏற்படாது. காரணம் எறும்பின் உடலாக்கம் அவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது.

நான்:—சரிதான். பின் எப்படித்தான் அப்பழமொழி இருந் திருத்தல் வேண்டும். நான் படித்த புத்தகங்களிலெல்லாம் அப்படித் தான் அம்மா படித்தேன். நீ என்னமோ அர்த்தம் பிரிக்கிறாய்.

சாந்தா:—கோபப்படாதே. என்னை அதிகப் பிரசங்கி என்றும் நினையாதே. நான் மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகத்தை வாசிக் குங்கால் 'இருதலைக் கொள்ளியினுள் எறும்பொத்த ஏழை கண்டாய்' எனக் கூறியிருப்பது என் ஞாபகத்திற்கு வர அதை உனக்கும் தெரிவிப்போமேயென நினைத்தனன். இதில் உனக்கு வருத்தமா?

நான்:—இல்லை சாந்தா. நல்லாரைக் காண்பதும் நன்றே; அவரோடிணங்கி யிருத்தல் நன்றினும் நன்றல்லவா. சரி நீ சொன்ன பழமொழிதான் எப்படிப் பொருந்தும் ?

சாந்தா:—சொல்கின்றேன். 'இருதலைக் கொள்ளியினுள் எறும்பு' எனில் இருபக்கமும் தீப்பற்றி எரிந்துவரும் ஒரு குச்சியின் உள் பாகத்தில் உள்ள எறும்பு எனப்படும். குச்சியினுள் துவார மிருத்தல் வேண்டும். தீப்பற்றி வர, புகை இருபக்கமும் சூழ்ந்தால் தப்ப வழி ஏதாவதுண்டோ? இல்லை. மடிய வேண்டியதுதான்.

# ‘எங்கள் தாத்தா’

[G. ராமமூர்த்தி. நாகூர்]

(வெண்புறு மெட்டு.)

தமிழ்நாட்டின் தனித்திலகம் எங்கள் தாத்தா—அந்தத்
தாடி ஈ. வே. ராமசாமி எங்கள் தாத்தா

வைக்கம்வீர ரெனப்புகழும் எங்கள் தாத்தா—மூட
வைதீகமாம் முறையொழித்தார் எங்கள் தாத்தா

தண்டமிழைக் காக்கவேண்டி எங்கள் தாத்தா—சிறைத்
தண்டனேயே பெற்றுவந்தார் எங்கள் தாத்தா

பல்லாரி சிறையும்சென்ருர் எங்கள் தாத்தா—மக்கள்
பலரும்போற்றும் தமிழ்த்தலேவர் எங்கள் தாத்தா

பாழும்இந்தி எதிர்ப்பினுலே எங்கள் தாத்தா—சிறைப்
பாசறைக்குள் புகுந்துவந்தார் எங்கள் தாத்தா

ஆச்சாரியின் ஆட்சியதை எங்கள் தாத்தா—மிக்க
ஆர்வமாக எதிர்த்தவீரர் எங்கள் தாத்தா

தமிழர் நன்மைக் காகவேண்டி எங்கள் தாத்தா—சிறைத்
தண்டனேயே பெற்றசிங்கம் எங்கள் தாத்தா

பாலன்ராம மூர்த்திகீதம் எங்கள் தாத்தா—மக்கள்
பலரும் போற்றும் இனியகீதம் எங்கள் தாத்தா

---

நான்:—ரொம்ப சரி. நீ எப்படியும் கெட்டிக்காரி அல்லவா. இது எனக்குப் புதிய போதனேயே.

சாந்தா:—கமலா. நாம் பழைய நூல்களேப் பயின்ருல் ஒன்றும் நமக்குப் புதிதாகத் தோன்ருது. நாம் நம் வீட்டு அன்னத்தைப் புசிக்காமல் அந்நிய அநாகரீகம் பிடித்தவர்களிடமிருந்து பிச்சை வாங்கி, அதை ருசிபார்க்கும் வரையில் நம் நிலேமை எப்படி முன்னேற்ற மடையும்?

நான்:—என்னேத்தான் சொல்கின்ருய். என் தந்தை வந்து விடுவார். நேரமாகிவிட்டது. வா போகலாம். எனத் தத்தம் வீடடைந்தனர். என்னே தமிழ் மகளிர்களின் பயன்பெறும் வழியோடு கூடிய காலப் போக்கு!



# சிலம்புச் செல்வம்

[Rm. Sm. கதிரேசன்]

## இலங்கை ரேடியோப் பிரசங்கம்

இலங்கை வானொலி நிலையத்திலிருந்து இதுபோழ்து எது பற்றிப் பேச்சு நிகழ்த்தல் சால்புடைத்தாகுமென்றெண்ணினேன். என் எண்ணத்தின் ஈட்டம் புலவர் மணி பாரதியார் பகர்ந்த,

'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர் போல், இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை'

என்னும் பாவின்மீது படர்ந்தது.

தமிழரசியின் கண்மணிச் சேய்களான இம் மூன்று கவிமணிகளையும், இற்றையத் தமிழறிஞர் பெரிதும் போற்றுகிறார். தமிழகம்

பெருநலம் எய்த, சீரமைந்த செந்தமிழிலே அருங்காவிய மணிகளை அணி அணியாகப் பதித்து, அமுதச் செல்வி தமிழம்மையை அலங் கரித்த புலவர் பெரு மக்களாகிய கவியரசர் கம்பர், வள்ளுவர், இளங்கோ இவர்களை உலகம் ஒருங்கே போற்றுதல் வியப்பில்லை என்க.

'தங்கமணிப் படுகையிலே முத்திறைத்துத்
தவழமுத வெள்ளமென நடைகுலுங்குஞ்
சங்கமணிச் செல்வங்கள் மல்குநாட்டிர்!
தமிழ்மறையைப் புவிக்கீந்த செந்நாப் போதர்
துங்கமணிக் கவியரசன் கம்பன், செல்வி
துலங்குமிளங் கோவடிகள் சொல்லையுண்ட
சிங்கமணித் தமிழர்காள்! கலையினுச்சிச்
சிகரத்திற் செயக்கொடியை நாட்டவாரீர்'

என்று சுத்தானந்த சுவாமி இயம்புகின்ற பாட்டினிலே, பழந் தமிழ் நூல்களின் பண்பும், கவியரசர் மூவரின் சிறப்பும் இனிது விளங்க லாகும்.

பைந்தமிழன்பர்களே! சுருங்கச் சொல்லுகின்றேன். ஈண்டு யான் உரையாற்றப் போந்த பொருளுரை 'சிலம்புச் செல்வம்' என்பது. சிலம்பு தந்த இளங்கோவும், திருக்குறள் வழங்கிய வள்ளு வரும், இராம கதை நவின்ற கம்பரும், இந்தத் தமிழ் மகனின் அகத்திலே காட்சி தந்தனர். புலவர் பெரு மக்களாகிய கவிமணிகள் மூவர் அருளிய இன்பப் பொக்கிஷத்தை எண்ணும்போது, இளங்கோ செதுக்கிய சித்திரச் சிலம்பு என்பால் ஒலித்தது. பைந் தமிழ்ச் சிலம்பு இனிதாய் ஒலிக்கவே, பொற்புடைத் தெய்வம் கண்ணகியாரின் அற்புதச் செயல் விண்ணளாவ விளங்கிற்று.

வள்ளுவர், இளங்கோ, கம்பர்—இம் மூவரும் நமது தமிழ்த் தாய், உலகிற் கீந்த மூன்று கவியரசர் ஆவர். இவர்கள் தமிழரசியின் செங்கோலும், அரியணையும், பொன் முடியும் போல்வர். உலகுள்ள மட்டும் தமிழை வாழ வைக்கும் உயிர் நாடிகள் போன்றார் இப் புலவர்கள். வள்ளுவர், வையத்தில் வாழ் வாங்கு வாழும் அறம் பொருளின்ப வழிகளைத் துலக்கினர். இளங்கோ, அவ்வழிகளில் நடக்கும் ஆருயிர் வாழ்வின் இன்ப துன்பங்களைச் சொல்லோவிய மாக விளக்கினர். கம்பர், வாழ்வுக் கலையில் ஒரு தெய்வ வொளியை வீசி, அரக்கத் தன்மையை நீறுக்கும் தரும வீரக் கனலைத் தூண்டினர்.—வள்ளுவர், வாழ்வின் இலக்கணத்தைச் செய்தார். மற்றிருவரும், வாழ்வின் இலக்கியத்தைச் செய்தனர். இளங்கோ பெண்ணின் பெருமையை விளக்கினர். கம்பர், பெண்ணின் பெரு மையைக் காக்கும் வீறுபெற்ற ஆண்மையைத் துலக்கினர். இம் மூன்று கவியரசரும் நமக்கு, வற்றாக் கலைச் செல்வத்தை வழங்கி

பிருக்கின்றனர். இளங்கோ அடிகள் வழங்கிய செல்வம், நாகரிக வுலகில், தமிழரின் உரிமையைக் காக்கும் தனிப்பெருஞ் செல்வமாம். அதுவே, ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு நாம் அடைந் திருந்த சீர்மையைத் துலக்கும் சிலப்பதிகாரச் செல்வம். இலக்கிய வுலகிற் சிறந்த வரலாற்றுக் காப்பியம் சிலப்பதிகாரமேயாம்.

ஆதலின், தமிழர் செம்மையும் சீர்மையும் வாய்ந்த செந்தமிழ்ச் சிலம்பினை—முத்தமிழ்ப் பொக்கிஷத்தை நீவிர் அணி செய்தல் வேண்டும். சிலப்பதிகாரம் தமிழ் மொழியினுள்ள செழுஞ் சொற்கள் அனைத்தும் குவிந்து கிடக்கும் ஓர் இன்பப் பொக்கிஷம் என்பதை உலகுக்கு உணர்த்தக் கங்கணம் கட்டுங்கள். பண்டைத் தமிழ் மரபின் வீறுற்ற ஆண்மையையும், மாசற்ற பெண்மையையும் விளக்கிக் காட்டும் அரும் பெரும் காவியம் சிலப்பதிகாரம் என்று கம்பீரமாகச் சொல்லுங்கள்.

நவயுகத் தமிழர்களே! இளங்கோ வழங்கிய சிலம்பு தமிழை அணி செய்கிறது. தமிழரைப் பெருமைப் படுத்துகிறது. எங்கு நோக்கினும் விரிந்து பரந்த சீரிய கொள்கைகளே—சன்மார்க்க நெறிகளே சிலம்பில் செறிந்து விளங்குகின்றன. தமிழர், தமிழ்க்குருதி செறிந்தோடும் தமிழகத்தார்—இதனை உன்னி உணர்தல் வேண்டும். இளங்கோவின் தமிழ்த் தேனை இன்னே பருக வேண்டும். செந்தமிழ் மக்களிடையே சிலம்பின் ஒலி முழங்க வேண்டும். தமிழ் மரபு மீண்டும் வீரம் பெற வேண்டுமேல்—சுதந்திரம் உறவேண்டுமேல், சிந்தையை உருக்கும் சிலப்பதிகார மணியை ஒவ்வொரு தமிழன் இருதயத்திலும் அணி செய்தல் வேண்டும்.

சிலம்பு தந்த இளங்கோ செழுஞ் சொற் பெய்வதில் கை தேர்ந்தவர். தீந்தமிழ்க் களஞ்சியம் சிலப்பதிகாரம் என்றால் அது முற்றும் பொருந்தும்.

---

## மதிப்புரை

அருளாலயத்தாரால் வெளியிடப்பட்ட 'உயிரின் உண்மை' அல்லது 'நாம் உடலா உயிரா' என்னும் புத்தகம் கிடைக்கப் பெற்றோம். இது ஈசூர் சச்சிதானந்த சுவாமிகள் பரம்பரை பழவை தங்கவேலையர் மாணவர்களுள் ஒருவராகிய T. S. இராஜூப் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டது. இதில் யாவரும் எளிதில் உணரும் படி வினாவிடை ரூபமாக குரு சீட தர்க்க முறையில் தெளிவாக விளக்கி எழுதப்பட் டிருக்கிறது. தன்னைத்தா னறிந்து பிறவித்துன் பம் நீக்கி முத்தி அடையும்மார்க்கம் மதப்பற்றுள்ள வகையில் நம் பிக்கை யுள்ளவர்களுக்குத் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் விலை அணா 8. கிடைக்குமிடம்: ஆசிரியர், E. S. இராஜூப்பிள்ளை, நெ. 4, F. தாண்டவராய முதலி வீதி, தண்டையார்ப் பேட்டை, சென்னை.

# கோமதியின் கடிதம்

[மிஸ் G. கோமதி, நாகூர்]

எனதாருயிர்த் தோழி சந்திரோதயத்துக்கு,

நலம். நலமறிய விருப்பம். உன் அன்பு லிகிதத்திற்கு என் மன முவந்த ஆசி உரித்தாகுக, நான் உனக்கு 'ஈகை' என்பன பற்றிச் சில வார்த்தைகள்கூற ஆசை கொண்டிருந்தேன். அதனைப் பற்றி இந்த லிகிதத்தில் சிலவற்றைக் கூறியிருக்கின்றேன். அதை நன்கு பயிலுவாயாக.

ஈகை என்பது வறியவர்களுக்கு மறுக்காது கொடுக்கும் உதவி யாகும். ஈகைக் குணமுடைய கொடையாளர்களுக்குப் பலருடைய நல்நட்பும், பெரியார்களின் நல்லாசியும், கடவுளின் அருளும், உண்டாகும். கொடையாளர்களின் செல்வம் 'பலன்தரும் ஓர் விருட்சம் ஊர் நடுவில் பயிராகி பழங்கள் தருவது' போல் பலருக்கும் பயன்படும்.

நம் பழந் தமிழ் வல்லுநகர்கள் ஈகையை மூன்று பிரிவாகப் பிரித்துள்ளனர். அவையாவன:—முதல் வள்ளல், இடை வள்ளல், கடை வள்ளல் என்பன. வரையின்றி யாவருக்கும் உதவும் புண்ணி யருக்கு முதல் வள்ளல் எனவும், இரப்போர்க்கு மட்டும் உதவும் புண்ணியருக்கு, இடை வள்ளல் எனவும், தன்னைப் புகழ்ந்து பேசு பவருக்கு மட்டும் உதவுபவருக்கு கடை வள்ளல் எனவும் கூறியுள் ளார் நம் முன்னோர்கள்!

ஏனைய தருமங்களைவிட ஈகையே சிறப்புடையதாகும். பொய்யா மொழிப் புலவராகிய திருவள்ளுவர்கூட 'மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று' என்று கூறியுள்ளார்.

உலகத்தினரால் இகழப் படுபவரையும், மக்களால் மதிக்காத லோபிகளையும் இப் பூவுலகம் போற்றுது. அவனுக்கு 'ஈயாமைக் குணங்கொண்ட மகா பாபி' எனவும் உலகம் பெயர் சூட்டும். ஈகை யில்லாதாருடைய செல்வம், 'நடு ஊரில் பழுத்த நச்சுமரம்' போல் ஒருவருக்கும் பயன் படாமற் போய்விடும். ஆதலால், இப்பூவுலகில் பிறந்துள்ள நாம் நம் பொருளை ஈகையான வழிகளில் பயன்படுத்தி நற்கதியை அடையவேண்டும்.

மற்றையச் செய்தி உன் லிகிதம் கண்டு பதில் விடுக்கிறேன்.

இப்படிக்கு, உன் இன்னுயிர்ச் சிநேகிதி

கோமதி.

# அடைக்கலம்

[ஐ. கூத்திறையனார், சம்புவராயநல்லூர்]

செல்வத்திற் குறைவில்லை; சிறப்பில் ஈடும் எடுப்பும் இல்லை; அழகில் திருமகள்போல; வயதில் மடந்தைப் பருவம்; மட்டில்லாத செல்வாக்கு; தன் மைந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்க்கு முடி சூட்டிச் செங்கோல் நெறியில் வைத்தாள். அவர்களுக்கு இனியது இன்னது காட்டி மேற் பார்த்திருந்தாள். பல குறுநில மன்னர்கள் வாழ இடந் தந்தாள். பொதியத்தைக் குறுமுனிக்கு இடமாக்கினாள். இத்துணை ஒழுங்கும் செய்து புகழ் பரப்பினாள். எதனாலும் ஏற்றமே உடையவளாய்ச் செம்மாந்து வாழ்ந்தாள். யார்? நம் தாய்; தமிழ் நாடாகிய இயலணங்கு.

இந் நல்லியலாள் தனக்குக் காவலாக வடக்கே வேங்கடத்தையும், தெற்கே குமரியையும், மேற்கு கிழக்குகளில் கடல்களையும் நிறுத்தினாள். பல்லாயிரமாண்டுகள் சலிப்பின்றி வாழ்க்கை நடத்தினாள். பின்னும் வள்ளுவர், இளங்கோ, சீத்தலைச் சாத்தனார் நக்கீரர், நச்சினார்க்கினியர், கம்பர் முதலிய குழந்தைகளை ஈன்று தாலாட்டிச் சீராட்டிக் காப்பாற்றினாள். தன்னால் மன்னர்களாக்கப் பட்ட சேர, சோழ, பாண்டியர்கள் என்னும் புவிமன்னர்களாகிய மூத்த மக்களிடத்தில் கவிமன்னர்களாகிய குழந்தைகளைத் தந்தனள். பெண் மகவாகிய ஔவையையும் ஈந்து தந்து புரக்கச்செய்தாள்.

கவிமன்னர்கள் பொழியும் தேனினும் இனிய, அமிழ்து போன்ற அருந் தமிழ் நூல்களைக் காதால் கேட்டுக் களிப்புற்றாள். கண்ணில் வழிந்த ஆனந்த நீரைப் பொன்னி, வையை, தாமிரவர்ணி முதலிய யாறுகளாக ஒழுக்கினாள். இன்பமே வடிவுடையவளாய் என்றும் ஒரே நிலையில் இனிது வாழ்ந்தாள்.

இரக்கமும் ஈகையும் சிறந்த இந் நிலப்பாவை விருந்திருக்கவுண்ணாள். தமிழ் பிறர் என்று கருதாள். யார்க்கும் இருக்க இடமும் உண்ண உணவும் ஈவாள். இல்லை என்னும் புல்லிய சொல் உடையவளாய் இல்லை.

'கீரை விதைப்பதேன்? கீழோர் செல்வரைச் சுற்றுவதேன்?'

பிடுங்கித் தின்ன அல்லவா? மலிவளம் செழித்த மங்கையின் கருணையை இடமாகக் கொண்டு மட்டற்ற மக்கள் வந்து சேர்ந்தனர். வரையாது கொடுத்துவந்த வனிதையின் நிழலில் தங்கினார்கள். வாழ்வினால் தாழ்வின்றி மகிழ்ந்து உறைந்தனர்.

அடைக்கலமென்று வந்த பலரையும் அருளால் ஆதரித்த நம் அன்னை தனது மூத்த மக்களை இழந்தாள். ஆயினும் தான் மறுவின்றி வாழும் தகுதியுடையவளே என்னும் எண்ணம் உடையவ

ளாகவே இருந்தாள். தன் கால்வழி சிதையவில்லை என்னும் திடமே கொண்டாள். பேரன் பேரன் முறையில் பண்டித ரத்தினங்கள் தோன்றினமையைக் கண்டு கண்டு களிப்புக் கொண்டு, கால்மீது காலிட்டுக் கலங்கா நெஞ்சினளாய் வீற்றிருந்தாள்.

இதனிடையே ஆங்கிலம் முதலிய பல வடுக்கள் தன் உடலில் தோன்றக் கண்டு இன்னலு முற்றாள். எனினும் தன் உடலின் கவின் குன்றவில்லை ; வடுக்களைக் கெடுக்க வழியுண்டென்று நினைத்தாள். தமிழெனும் தேனை நாவினால் சுவைத்துக் சுவைத்து நிற்கும் தன் சந்ததியாரைக் காணும் களிப்பே பெரிதாகக் கொண்டாள்.

பண்டையளாகிய அவளுக்குப் புதியதோர் பருவரல் அரும்பியது. என் செய்வாள். பலர்க்கு இடங்கொடுத்த தனக்கு தன் செல்வாக்குக்கு, தன் மமிழ்ச்சிக்கு, தன் மக்களுக்குத் தடுமாற்றம் உற்றது கண்டாள். உள்ளம் நடுங்கி யிருக்கிறாள். கொக்கின் தலைமேல் வெண்ணெய் வைத்துப் பிடித்தவாறு பிறர் செய்யும் சூழ்ச்சிக்குத் தன் மக்கள் பலியாயினதைப் பார்த்துக் கண்ணீர் சிந்துகிறாள் ; கருத்துக் கலங்குகிறாள் ; உடல் மெலிகிறாள் ; உள்ளம் உருகுகிறாள் ; ஒவ்வொரு தமிழனையும் தலைதூக்கிப் பார்க்கிறாள் ; தவிக்கிறாள். 'தனையனே, தருணத்தில் உதவியைச் செய். உழும் காலத்தில் ஊர் திரியாதே. பின்னால் அறுவடைக் காலத்தில் உன் அரிவாளுக்கு அலுவல் ஏற்படாது ?'

'நீ தமிழன். உன் உடலில் ஓடுவது தமிழ் நாட்டில் விளைந்த உணவின் சாரம். உனக்கு வீரமுண்டு. எழு ! எழு !! எழு!!! உன் கடமையைச் செய். உன்னைப்போன்ற அனைவரையும் உடன்கூட்டு. நான் உங்கள் அடைக்கலம் ; அடைக்கலம் ; அடைக்கலம். உரிமையைத் திருப்பிக் கொடுப்பது உன் கடமை' என்கிறாள். மெய்தானே ! ஒவ்வொரு தமிழனும் அக் கடமைக்கு உரியவனல்லவா ?

---


இனம் ! இனம் !! இனம் !!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் எழுதிய

## அனுபவ வைத்திய நூல்

## பழைய இரண்டாம் பாகம் இனம்

வேண்டுவோர் 4 அணு தபால் தலை (ஸ்டாம்பு) அனுப்பினால் புத்தகம் புக் போஸ்டில் அனுப்பி வைக்கப்படும்.

**'தமிழரசு' புத்தகாலயம்,**

**31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.**

# ஓர் விதவையின் துயர்

[புதுவை - S. சிவப்பிரகாசம்]

(தேறு மார்க்கம் என்ற—மெட்டு)

(பல்லவி)

மாதெனக்கே வையை வாழ்வு
மறுப்ப தேதுக்கோ?—மக்கள்
வெறுப்ப தேதுக்கோ?

(அநுபல்லவி)

மண்ணிலிந்தக் கொடுமை ஏனோ? (மா)

(சரணம்)

தீது புரியும் சமுகமே யுன்
தீய வழக்க மதனால் நானே
சிந்தை நொந்தேனே—மிக
நிந்தை கொண்டேனே! (மா)

விதவை யென்றே வீண்மொழி பகன்று
நிதமுந் துயரில் ஆழ்த்துதல் நன்றோ?
நெஞ்சம் சகியேன்—மத
வஞ்சம் சகியேன்! (மா)

துணை யிழந்த ஆண்கள் வேறு
துணை கொள் வதனால் தீதிலையோ?
தூய மாதர்க்கே—இன்பம்
தீய தாகுமோ? (மா)

வளமைத் தேகம் இளமை யழகும்
வாய்ந்திடு மாதர் கசந்திடு வேம்போ?
வாது செய்வதோ?—மிகத்
தீது செய்வதோ? (மா)

இன்பம் யாவும் துறந்து வாழ்தல்
இயற்கை யாமோ விதவைக் கேதான்?
ஏதம் கொள்வதோ?—நான்
காதல் தள்வதோ? (மா)

# செவிடன் காதில் ஊதும் சங்கு!

[வி. பிச்சையன்]

எவ்வளவு சொல்லியும் பயனில்லை. படக் கர்த்தாக்கள் கொஞ்சமும் கவனிக்கிறார்களில்லை. எல்லாம் 'செவிடன் காதில் ஊதும் சங்கே' போலாகின்றன.

இருந்தாலும், எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு காலமுண்டு என்பது நிச்சயம். அம்மாதிரியே தமிழ்ப் படக்கர்த்தாக்களின்



எல்லோரும் அழுத்தினால் தொட்டில் என்னாகும்?
'பிரகலாதா'வில்

தற்கால விபரீதப் போக்குக்கும் ஒரு முடிவு காலமுண்டு என்பதை நினைவூட்டுகிறேன். அவர்கள் விழித்துக் கொள்ளும் காலமும் சமீபத்தில் நெருங்கிக்கொண்டிருக்கிறது. காலச்சக்கரம் சுழன்று கொண்டேதான் போகிறது.

படங்களுக்கு விமோசனம்—நல்ல காலம் ஏற்படுமானால்

அதற்குச் சினிமாப் பத்திரிகைகளின் உழைப்பும் ஒரு முக்கிய காரணம் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அவ்வித உழைப்பைக் கொண்டுத் தொண்டு செய்யும் சஞ்சிகைகளும் சிலவே.



பட முதலாளிகளில் பெரும்பாலோர் கலை முன்னேற்றத்தைக் கருதி உழைப்பதில்லை. கலை அழகே அவர்கள் கண்களுக்குத் தெரிவதில்லை. கொலை அழகே அன்னவர்கள் அகக் கண்முன் அகப்படுகிறது. பேராசை என்னும் பெரும் பூதத்திற்குக் கலையைப்





அவர்கள் சந்தோஷிப்பதைக் கண்டு நீர் ஏனய்யா முறைக்கிறீர்
'பக்த குமண'னில்

பலியிடுகின்றனர். இக்கலைப் பலிக்கு மக்களின் ஆதரவு யிருப்பதால் அப்பெரும் பூதம் இன்னும் அதிகமாகக் குதித்து விளையாடுகின்றது. நியாய முறையற்ற ராஜ்யத்தில் மக்களின் ஆதரவு பெற்ற அப் பூதக் கலையைக் கொலை செய்துக் கொண்டே போகின்றன சிற்சில பத்திரிகைகள். இவ்விதக் கொலையில் வியப்புக் தொன்றுமிடமில்லை. ஆனால், இந்த அக்கிரமமான செயலைக் கண்டித்து ஏதாவது இரண்டொரு பத்திரிகைகள் தைரியமாய் எழுதினால், மற்றப்



ஏது? கிருஷ்ணா இவ்வளவு ஆநந்தம்
'சியாம சுந்த'ரில்

பத்திரிகைகள் எக்காரணம்பற்றியோ அப்பத்திரிகைகளின்மேல் சீற்றம் கொள்கின்றன.

இது இப்படி யிருக்க, நம் பட முதலாளிகளை எடுத்துக்கொண்டால், அவர்களில் சிலர் போக்கே தனி ரகம். அவர்கள் கையில் வெள்ளையப்பன் தாண்டவமாடுகின்றான். அதைக்கொண்டு தைர்யமாய்ப் படம் பிடிக்க முன் வருகின்றனர். இன்னும் சிலர் மற்றவர்கள் பணம் போட்டுப் படம் பிடித்துப் பெருமிதமாய்ப் பணம் சம்பாதிப்பதைக் கண்டு, தாங்களும் அதில் இறங்க வேண்டுமென்று பின்பற்றுகிறார்கள். ஆனால், கலை யனுபவமோ, ஞானமோ கிஞ்சித்தும் அன்னவர்களிடம் இல்லை. அப்படி யிருந்தும் கலை நுணுக்கம்

தெரிந்தவர்களைக் கொண்டோ, அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டோ அவர்கள் படப் பிடிப்பைத் தொடங்குவதில்லை. எல்லாம் தம் முயற்சியிலேயே பயன் அடையலாம் என்று எண்ணி ஈடுபட்டுக் கடைசியில் பரிதாபமான நிலையை யடைகின்றார்கள்.

தமிழ்ப் படங்கள் முன்னேறாததற்கு இப்பட முதலாளிகளே முக்கிய காரணஸ்தர்களாகிறார்கள். அவர்கள் சிறிது அறிவுக் கண்களைத் திறந்துப் பார்த்துத் தங்கள் கவனத்தைச் செலுத்துவார்களானால், நம் தமிழ்ப் படங்களை எல்லா வகையிலும், எங்குப் பார்த்தாலும், யாவராலும் போற்றும்படி செய்துவிடலாம்.

ஆனால், பட முதலாளிகளின் ஒரு சிலரின் போக்கே தனி ரகம் என்று குறிப்பிட்டிருந்தேன். அவர்களுக்குக் கதாசியர்கள் காணப்படுவது வெகு விநோதம். கதாசிரியர்கள் எழுதும் கதைகள் யாவும் அசம்பாவிதமாகவும், இயற்கைக்கு முரணாகவுமிருக்கின்றன. இன்னும் சில கதைகள் பெயருக்குப் பொருத்தமில்லாமலே பொறிக்கப்படுகின்றன.

சிலர் புராணப் படங்களை எடுக்கிறார்கள். அவற்றில் கடவுளர்களை யெல்லாம் கேவலப்படுத்தி, அருமையான கருத்துக்கள் அடங்கிய புராணங்களையும் இழிவுக்குள்ளாக்குகிறார்கள்.

நடிகைத் தேர்விலும், பெரும்பாலோர் கவனம் செலுத்துவதில்லை. அநேகமாக எல்லாம் சிபார்சின் காரணமாகவும், நெருங்கிய நட்பிற்காகவுமே நடிகர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்நிலையில் கலை எப்படி வளர முடியும்?

டைரக்டர்களைக் குறிப்பிட்டால் அனேகருக்குத் தமிழே தெரியாது. தமிழ் தெரிந்தவர்கள் சொற்பம். ஆனால், இவர்களுக்குச் சரியாய் மூளை வேலை செய்வதே துர்லபம். விஷய ஞானமோ சூன்யம். கேவலம் சிற்றின்பத்தை நாடி உயர் கலையை உயிரற்றதாகச் செய்து விடுகிறார்கள். தமிழ் தெரியாதவர்களைக் கொண்டுத் தயாரிக்கும் படம் எப்படி உருப்படியாகும் என்பதை நீங்களே சற்று யோசித்துப் பாருங்கள்? பட முதலாளிகளும் இன்னருங் குணங்களுடைய பேர் வழிகளைத்தான் நாடுகிறார்கள்.

இறுதியாக ஒன்றுமட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். பட உலகைப் புனிதப்படுத்த வேண்டுமானால், அது தமிழ் நாட்டுப் பட முதலாளிகள் கையில்தான் இருக்கிறது. சினிமாத் தொழில் தமிழ் நாட்டில் நாளுக்குநாள் எந்நிலையிலிருக்கிறது என்பதைச் சிந்தியுங்கள். உயர்ந்த நடிகைகள் கூட சினிமாவில் நடிக்க உண்மையாகவே பயப்படுகிறார்கள். காரணம் சில பட முதலாளிகளின் அடாத செயல்களே யாகும். படக் கம்பெனிகள் தினே தினே காமக் குடிசைகளாக மாறுகின்றன. அவைகளைக் கலைக்கோயிலாகச் செய்ய வேண்டும். இவர்கள் முதலில் பட உலகின் ஒழுக்கத்தைச் சீர்திருத்துவதே முதற் கடமையாகும்.

சினிமா உலகில் இப்படியாக ஏற்பட்டிருக்கும் களங்கத்தை யெல்லாம் களைந்தெரிய முதலாளிகள் முன்வர வேண்டுகிறேன். அப்படி முன் வருவார்களா? அல்லது 'செவிடன் காதில் ஊதும் சங்கே' போலாகுமா?

---




சக்குபாயிலும் இவ்வளவு சாந்தமா யிருப்பீர்களா?
'சக்குபா'யில்

# ரம்பையின் காதல்

[எஸ். பரமானந்தம்]

மதுரை முருகன் டாக்கி பிலிம் கம்பெனியார் வெளியீடு. கோவை சென்ட்ரல் ஸ்டுடியோஸ் தயாரிப்பு. பி. என். ராவ் டைரக்ஷன்.

கதை யமைப்பு: தேவலோக ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை யமுனா நதிக்கரைக்கு வந்தபோது நர்த்தனம் ஆடும் கடமையையும் மறந்து ரம்பை தங்கி விடுகிறாள். அதனால் இந்திரன் கற்சிலையாகும்படி சபிக்கிறான். நாரதர் முயற்சியால் பகலில் கற்சிலையாகவும் இரவில் சுயரூபமாக மாறவும் சாப விமோசனம் கிடைக்கிறது. சுசீந்திரத்திலுள்ள யத்பவிஷ்யனைக் கணவனாகக் கொள்கிறாள். அவனுக்காக மாளிகை ஒன்று சிருஷ்டித்து அதில் வசித்து வருகிறார்கள். அவனின் வேண்டுகோளின்படி அவனைப் புஷ்பமாலையாக்கித் தேவலோகத்திற்கு எடுத்துச் செல்கிறாள். நரகலோகத்தின் சாணிமலை குறைந்து வந்து மறைந்ததைக் கண்டு விஷயமறிந்த இந்திரன் ராக்ஷசியாக மாறச் சாபம் கொடுக்கிறான். நாரதர் போதனையால் ராக்ஷசியாகிய ரம்பை, காசிராஜன் மகள் சுபாஷிணியைப் பிடிக்கிறாள். யத்பவிஷ்யனால் சாபவிமோசனம் அடைந்த ரம்பை இந்திரலோகம் அடைகிறாள். யத்பவிஷ்யன் சுபாஷிணியை மணந்து கொள்கிறான்.

நடிகர்கள்: ஹாஸ்யத்தில் சாரங்கபாணி, என். எஸ். கிருஷ்ணன், காளி என். ரத்தினம், டி. ஏ. மதுரம் முதலியோர் நடிக்கின்றனர். மற்றும் பாலசுப்ரமண்யம், கே. வி. எல். வசந்தா, சுப்புலக்ஷ்மி முதலியோர் முக்கிய நடிகர்கள்.

சாரங்கபாணி: இவரது ஹாஸ்ய நடிப்பு எப்பொழுதுமே கௌரவமான முறையில் ஆபாசமின்றித் திகழும். அதேமாதிரி இப் படத்திலும் முதலிருந்து கடைசிவரை அழகாகவும், பெருந்தன்மையாகவும், பாமரர்கள் ரசிக்கும் முறையிலும் இருக்கிறது. ரம்பையை முதலில் பார்க்கும் போதும், தன் தாயிடம் 'பழையது போடுடி' என்று சொல்லுமிடத்திலும், ரம்பை தனக்குப் பன்னீர் தெளிக்கும் கட்டத்திலும் இவரது நடிப்பு மிகவும் பாராட்டத் தக்கதா யிருக்கிறது.

காளி என். ரத்தினம்: இவருக்குப் படத்தில் கொடுக்கப் பட்ட பாகம் மிகவும் சொற்பம். அப் பாகத்தில் இவரது நடிப்பு பொது மக்களின் அன்புக்கும் ஆசிக்கும் பாத்திரமாகி விட்டது.



வண்டி! அசடே! எப்போப் பார்த்தாலும் 'ம்' என்று இருக்கிறயே! சனிசனி இப்படிச் சாய்ந்து கிடந்தா குடும்பம் உருப்பட்டாப் போலேதான். 'மாணிக்கவாசக'ரில்

என். எஸ். கிருஷ்ணன்—டி. ஏ. மதுரம்: இவர்களைப்பற்றி அதிகம் எழுத அவசியமில்லை. வழக்கம்போல் இவர்களது கூத்துக்கள் மக்களை மகிழ்விக்கின்றன.

கே. வி. எல். வசந்தா : ரம்பையாகக் காதலனோடு விளையாடும் கட்டம், சோகமான இடம் முதலியவற்றில் திறம்பட நடித்துள்ளார். இவர் பாடும் பாட்டுக்களும் ரசிக்கத் தக்க முறையில் இனிமையாக இருக்கிறது. முன் படத்தைவிட முன்னேற்ற மடைந்திருக்கிறார். இன்னும் சிரமப்பட்டால் ஒரு நடிக நட்சத்திரமாக லாம். கே. ஏ. சொக்கலிங்க பாகவதர் நாரதராகவும், பாலசுப்ர



இவ்வளவு ஆடம்பர ஆஸ்ரம வாழ்க்கை கூடவா
சந்தோஷ மளிக்கவில்லை? 'பிரகலாதா'வில்

மண்யம் இந்திரனாகவும், மல்லையா எமனாகவும் நடித்திருக்கின்றனர். இவர்கள் சாதாரணம்.

ஒலிப் பதிவு: இதில் சிற்சில குறைகள் அங்கங்கே காணப்படுகின்றன. அவைகளும் நன்கு கவனிக்கப்பட்டிருப்பின் இன்னும் அழகா யிருக்கும்.



இரு படத்தில் ஏக காலத்தில் நடிக்கும் வகைச் சிந்தனையோ?
'சதி முரளி'யா? 'கள்வர் தலைவ'னா? நவாப் எம். கே. ராதா

படப் பிடிப்பு: ஆரம்பத்தில் இரண்டொரு காட்சிகள் நன்கு கவனிக்கப்படவில்லை. கொஞ்சம் மங்கலா யிருப்பினும் பின்னால் குறை சொல்வதற்கில்லை. ரம்பை மாளிகை, கற்சிலை பெண்ணாவது முதலிய இடங்களிலெல்லாம் படப் பிடிப்பாளரின் சாமர்த்தியம் வெளி யாகிறது. இயற்கைக் காட்சிகள் தான் இப் படத்தில் அதிகம் காணப்படுகிறது. அவைகள் பார்ப்பதற்கு ஆனந்தமாய் நன்கு படப் பிடிப்பு செய்யப்பட்டுள்ளன.

டைரக்ஷன்: நன்கு சிரமத்துடனும் முழுக் கவனத்துடனும் வேலை செய்யப்பட்டிருக்கிறது. மிகவும் நுட்பமாகக் கவனிப்போருக்குச் சில இடங்களில் குறிப்பிடக் கூடிய குறைகள் தோன்றுகின்றன. இன்னும் கொஞ்சம் அவற்றிற் கவனஞ் செலுத்தப்பட்டிருந்தால் நன்றா யிருக்கும்.

பொதுவாகக் கூறுமிடத்து இது ஓர் ஹாஸ்யப் படம் எனினும், ஆபாசமான காட்சிகளைப் புகுத்தி நாசப்படுத்தாமல் கண்யமான முறையில் அமைக்கப்பட்ட ஓர் சிறந்த படமெனக் கூறலாம்.

---

## ஓர் நற்சாட்சி

இதைக் கண்ணுறும் சகோதர சகோதரிகளுக்குத் தெரிவித்துக் கொள்வது. எனக்கு வயது 35. என் தலை சுமார் பத்து வருடமாக வழுக்கைத் தலையாக இருந்தது. சுமார் 4 அங்குல அகலத்திற்கு உச்சியில் வழுக்கை ஏற்பட்டிருந்தது. அதற்கு நான் கணக்கற்ற ரூபாய் சிலவு செய்து வைடெக்ஸ் (Vitex) முதலான பல மருந்துகளையும் உபயோகித்துப் பலன் தராமற் போய்விட்டது. கடைசியில் ஒக்கூர் லக்ஷ்மணன் செட்டியார் அவர்களும் மற்றும் பலரும் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களிடம் சென்று 50 ரூபாய் கொடுத்து மருந்து வாங்கி உபயோகித்து வழுக்கைத் தலையில் மயிர் முளைத்ததாகக் கேள்விப்பட்டு, நானும் சென்னை வைத்தியநாத முதலி வீதி, 31-ம் நெம்பர் வீட்டிலிருக்கும் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களிடம் சென்று விசாரித்தேன். அவர் வழுக்கைத் தலையில் மயிர் முளைக்கச் செய்வதாய் உறுதி கொடுத்தார். பிறகு மருந்தை வாங்கி உபயோகித்துப் பார்த்ததில் 20 நாளில் தலை பூராவும் மயிர் முளைத்து விட்டது. அதைக் கண்ட எனக்கு அளவில்லா மகிழ்ச்சி யுண்டாயிற்று. என் மனம் வழுக்கைத் தலையால் பட்ட கஷ்டம்போல் எத்தனையோ பேர் வழுக்கைத் தலையா யிருப்பதால், அவர்களெல்லாம் ஷை டாக்டரிடம் மருந்து வாங்கி உபயோகித்துத் தங்கள் மனக் கவலையை மாற்றுவார்களென எண்ணி இதை வெளியிட்டேன். —S. K. சாமி, மிராஸ்தார்

# கொலைக்குப் பரிகாரம்

[சி. குழந்தைசாமி]

சிதம்பரம் பிள்ளையின் மரணத்திற்குப் பிறகு அவருடைய மனைவி காமாக்ஷி, வக்கீல் வையாபுரிப் பிள்ளையின் வீட்டில் வசித்து வந்தாள். அவளுடைய மகன் முத்தையனும் வையாபுரிப் பிள்ளையின் ஆதரவில்தான் படித்து வந்தான்.

காமாக்ஷி வையாபுரிப் பிள்ளையின் வீட்டிற்கு வந்த அன்று சாயந்திரம் இருட்டுகிற சமயம், காமாக்ஷி, வையாபுரிப் பிள்ளையின் மனைவி தனபாக்கியம், அவருடைய தம்பி நீலகண்டப் பிள்ளையின் பெண்சாதி ராஜம்மாள், ஆகிய மூவரும் சமையலறைத் தாழ்வாரத்தில் கூட்டங் கூடிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

* * *

காமாக்ஷியும், வையாபுரிப் பிள்ளையின் குடும்பத்தாரும் நெருங்கின பந்துக்களல்ல. அவள் புருஷனை இழந்து மிகவும் கஷ்ட ஸ்திதியில் இருந்ததினால்தான் வையாபுரிப் பிள்ளை அவளைத் தன் வீட்டில் வசிக்கும்படி சம்மதித்தார். மேலும் அவளுடைய மகன் முத்தையனின் படிப்புக்காகப் பண உதவி செய்வதாகவும் ஒப்புக்கொண்டார். இதற்கெல்லாம் காரணம் அவருக்குக் காமாக்ஷியின் புருஷன் சிதம்பரம் பிள்ளையிடமிருந்த சிநேகமே. சிதம்பரம் பிள்ளை ஜீவிய வந்தராய் இருந்த காலத்தில் இருவரும் இணை பிரியாத சிநேகிதர்களாய் இருந்தார்கள். சிதம்பரம் பிள்ளை சாகும்போது தம் மனைவியையும் மகனையும் வையாபுரிப் பிள்ளையிடந்தான் ஒப்படைத்து விட்டு இறந்தார். தன் சிநேகிதனின் வேண்டுகோளுக்கிணங்க வையாபுரிப் பிள்ளையும் காமாக்ஷியைத் தன் சொந்த சகோதரியைப்போல் நடத்தி வரலாயினர். காமாக்ஷி அவருடைய வீட்டிலிருப்பதுபற்றி அவருடைய மனைவி தனபாக்கியத்திற்கோ, அல்லது அவருடைய தம்பி நீலகண்டப் பிள்ளைக்கோ எவ்விதத் தடையுமில்லை. நீலகண்டப் பிள்ளையின் மனைவி ராஜம்மாளுக்கு மாத்திரம் காமாக்ஷியையும் அவளுடைய மகனையும் பிடிக்கவில்லை. காரணம், வீணாக ஏன் இரண்டு பேருக்குச் சோறு போட வேண்டும், என்ற எண்ணந்தான். ஆயினும் இரண்டு மாதங்கள் வரையிலும் அவள் காமாக்ஷியின் விஷயத்தில் தலையிடாமல் இருந்தாள்.

ஓர்நாள் முத்தையன் தன்னுடைய சீப்பை ஒடித்துவிட்டானென்று ராஜம்மாள் மிகுந்த கோபத்தோடு அவனைப் பார்த்து 'வெட்டிச் சோறு தின்று நீ ரொம்பக் கொழுத்துப் போனாய், உனக்கு இப்பொழுது கண் கால் தெரிகிறதில்லை. என் சீப்பை ஒடித்துவிட்டாயே; பிச்சைக்காரப் பயலே!' என்று திடீரென்று ஏசிவிட்டாள். இதனால் வீட்டில் பெண்களுக்கிடையில் ஒரே ரகளையாய்விட்டது. தனபாக்கியம் முத்தையனுக்காகப் பரிந்துகொண்டு 'கேவலம் இரண்டணாச் சீப்புத்தானே! போனால் போகிறது. அதற்காக யாராவது இப்படி ஏசுவார்களோ?' என்றாள். அதற்கு ராஜம்மாள் 'சம்பாதித்துப் போடுகிறவர் ஒருவர். அதை எல்லோரும் சேர்ந்து நாசமாக்குகிறீர்கள்' என்றாள். தனபாக்கியம் 'என்னடி நாசமாக்குகிறது?' என்று கேட்டாள் சற்றுக் கோபத்துடன்.

'நாசமாக்குகிறதா?' என்று சீறிக்கொண்டு ராஜம்மாள் முகத்தைக் காமாக்ஷியின் பக்கம் திருப்பி ஒரு வெட்டு வெட்டினுள். இதற்குள் காமாக்ஷி ராஜம்மாளைப் பார்த்து 'வேண்டுமானுல் இந்த க்ஷணமே நானும் முத்தை யனும் இந்த வீட்டைவிட்டுப் போய் விடுகிறோம். எனக்கு இந்த வீட்டுக்கு வருவதற்குக் கூட முதலில் பிரியமில்லாமலிருந்தது. பெரியவர் கட்டாயப் படுத்தினதினுல் வந்தேன்' என்று சொல்லிவிட்டு அழ ஆரம்பித்தாள்.

ராஜம்மாள் 'போங்கள், தாராளமாய்ப் போங்கள்' என்றுள். காமாக்ஷி முத்தையனை 'வாடா போகலாம்' என்று அழைத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியே போகப் புறப்பட்டாள். இந்நிலைமையில் வெளியே ஆபீஸ் அறையில் சில கட்சிக்காரருடன் பேசிக்கொண்டிருந்த வையாபுரிப் பிள்ளை அங்கே வந்து, 'என்ன இது? ஒரே ரகளையாய் இருக்கிறதே?' என்று பெண்கள் மூவரையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டு கேட்டார். 'இனி மேல் ஒரு நிமிஷங்கூட இங்கே நான் தங்கமாட்டேன்' என்று சொல்லிக் கொண்டு, காமாக்ஷி முன்னிலும் அதிகம் அழத் தொடங்கினுள். இதற்குள் வையாபுரிப் பிள்ளை அங்கு நடந்த சம்பவத்தை ஊகித்தறிந்துகொண்டு 'இந்தக் குடும்பமே இன்னும் ஒரு மாதத்தில் இரண்டாகப் பிரியப் போகிறதே. அதுவரையிலுமாவது சண்டையில்லாமல் இருங்கள்' என்றுர். இதைக்கேட்ட தனபாக்கியம் மிகுந்த ஆச்சரியமடைந்தாள். ராஜம் மாளுக்கு இவ்விஷயம் தன் கணவன் சொல்லியதிலிருந்து தெரியுமாதலால் ஒன்றுமே பேசாமல் தன் அறைக்குப் போய்விட்டாள். தனபாக்கியம் வையாபுரிப் பிள்ளையைப் பார்த்து 'நீங்கள் சொல்வது உண்மைதானு?' என்று கேட்டாள். அதற்கு அவர் 'இந்த இரண்டு குடும்பங்களும் ஒன்றுய் இருப்பது நீலகண்டனுக்கும் அவன் மனைவிக்கும் பிடிக்கவில்லை. ஆகை யினுல் நான் அப்படித்தான் தீர்மானித்திருக்கிறேன்' என்றுர். பிறகு அவர் காமாக்ஷியைப் பார்த்து 'நீ ஒன்றுக்கும் கவலைப்படாதேயம்மா' என்று சொல்லிவிட்டு அவ்வறையை விட்டகன்றுர்.

இச்சம்பவம் நடந்து சுமார் இரண்டு வாரம் ஆகியிருக்கும். ஒருநாள் சாயங்காலம் ராஜம்மாள் எண்ணெ ஸ்நானம் செய்வதற்காகத் தன் நகைகளை எல்லாம் கழற்றி ஒரு சிறு பெட்டியில் வைத்துப்பூட்டி, அந்தப் பெட்டி யைத் தன் அறையிலிருந்த நிலைக்கண்ணுடியின் பக்கத்தில் ஓர் பீடத்தின் மேல் வைத்துவிட்டுக் குளிக்கும் அறைக்குப் போய்விட்டாள். அச்சமயம் ராஜமாணிக்கம் அவளுடைய அறைக்குள் நுழைந்து விளையாடுவதற்குத் தகுந்த சாமான் ஏதாவது இருக்கிறதா வென்று தேடிப் பார்த்தான். நிலைக்கண்ணுடியின் பக்கத்தில் பீடத்திலிருந்த நகைப் பெட்டி அவனுடைய கையில் அகப்பட்டது. அவன் அதை எடுத்துக்கொண்டு ஒருவர் கண்ணுக் கும் அகப்படாமல், நேரே வீட்டின் பின்புறமிருந்த பூந்தோட்டத்துக்குக் கொண்டுபோய் விளையாடிக்கொண்டிருந்தான். நகைப்பெட்டியை அடர்த்தி யாய் வளர்ந்திருந்த முல்லைப் பந்தலொன்றின் அடியில் வைத்துவிட்டு அவன் அதனை ரோஜாப் பூக்களால் அலங்காரம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு, சிறிது தூரத்தில் நின்ற ரோஜாச் செடியில் போய் ரோஜாப்பூக்கள் பறித்துக் கொண்டிருந்தான். அச்சமயம் முல்லைப் பந்தலின் அருகில் வந்த தோட்டக்காரன் கந்தசாமியின் கண்ணில்பட்டது

அவ்வழகிய நகைப்பெட்டி. அவன் அதை ஒருவருக்கும் தெரியாமல் எடுத்துக் கொண்டு போய்விட்டான். ராஜமாணிக்கம் ரோஜாப்பூக்களுடன் முல்லைப் பந்தலில் வந்து பார்த்தான். நகைப்பெட்டியைக் காணவில்லை. நகைப் பெட்டியைக் கொண்டுபோய்த் தொலைத்து விட்டதைத் தன் சிற்றன்னை அறிந்தால் தன்னை அடிப்பாளென்று, அவன் ஒன்றுமே தெரியாதவனைப் போல் இருந்து விட்டான்.

ராஜம்மாள் குளித்துவிட்டுத் தன் அறைக்குப் போகும்போது அவளுக்கு எதிரே காமாக்ஷி வந்துகொண்டிருந்தாள். இரண்டுவார காலமாக இருவரும் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வதில்லை. ஆதலால், காமாக்ஷியைக் கண்டதும் ராஜம்மாள் சட்டென்று தன் முகத்தை வேறொரு பக்கம் திருப்பிக்கொண்டு தன் அறைக்குள் நுழைந்தாள். காமாக்ஷியும் முகத்தை உம்மென்று வைத்துக்கொண்டு சமையலறைக்குப் போய்விட்டாள்.

ராஜம்மாள் முதலில் புதுப் புடவையை எடுத்துக் கட்டிக்கொண்டு, தலை மயிரைப் பின்னி ஜடை போட்டுவிட்டு, நகைப் பெட்டியை எடுப்பதற்காக நிலைக்கண்ணாடியின் பக்கத்திலிருந்த பீடத்தைப் பார்த்தாள். நகைப்பெட்டியைக் காணவில்லை. உடனே அவளுக்குப் 'பகீர்' என்றாகி விட்டது. தன் அறையில் எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்தாள். நகைப் பெட்டியை ஒரு இடத்திலும் காணவில்லை. 'நகைப் பெட்டியை யார் எடுத்திருக்கக் கூடும்?' என்று யோசித்துப் பார்த்தாள். காமாக்ஷியின்மேல் அவளுக்குச் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. 'நான் குளித்துவிட்டு வரும் போது அவள்தானே இந்த அறையிலிருந்து வந்தாள்? ஆம்; நிச்சயமாக அவள்தான் எடுத்திருக்க வேண்டும்' என்று எண்ணிய ராஜம்மாள் 'ஐயையோ! என் நகைகளைக் காணவில்லையே. யாரோ திருடிக்கொண்டு போய்விட்டார்களே!' என்று கூச்சலிட்டாள். வையாபுரிப் பிள்ளை, நீலகண்டப் பிள்ளை, தனபாக்கியம், காமாக்ஷி, முத்தையன், தங்கம்மாள் எல்லோரும் ராஜம்மாளின் அறையில் வந்துக் கூடி விட்டார்கள். சிறுவன் ராஜமாணிக்கமும் ஒன்றுந் தெரியாதவனைப்போல் அங்கு வந்து நின்றான்.

'என்ன? என்ன? ஏன் கூச்சலிடுகிறாய்' என்றார் வையாபுரிப் பிள்ளை.

ராஜம்மாள் காமாக்ஷியைச் சுட்டிக் காட்டிக்கொண்டு 'இந்த நீலி என் நகைகளை யெல்லாம் திருடிக்கொண்டு போய்விட்டு, இப்பொழுது ஒன்றுந் தெரியாதவள்போல் வந்து நிற்கிறாளே!' என்றாள். இதைக் கேட்டதும் எல்லோரும் காமாக்ஷியை நோக்கினார்கள். காமாக்ஷி 'அட கடவுளே! நானா திருடினேன். ஐயையோ அபாண்டமாய் என்மேல் பழி சுமத்துகிறாளே!' என்று கதறினாள். வையாபுரிப் பிள்ளை 'சீ! சீ!! வீட்டில் எல்லா இடங்களிலும் தேடிப் பாருங்கள்' என்றார். எல்லோரும் தேடிப் பார்த்தார்கள். ஒரு இடத்திலும் நகைப்பெட்டியைக் காணவில்லை. ராஜமாணிக்கம் சிறு குழந்தை யாதலால் தான் நகைப் பெட்டியை எடுத்துக்கொண்டு போய்த் தொலைத்துவிட்டு வந்ததைச் சொன்னால் அடிப்பார்களென்று ஒன்றுமே சொல்லவில்லை. வீட்டில் எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்த பிறகு நீலகண்டப் பிள்ளை ராஜம்மாளைப் பார்த்து 'அந்த நகைகளைக் காமாக்ஷிதான் எடுத்தாளென்று உனக்கு எப்படித் தெரியும்?' என்று கேட்டார்.

'நான் குளித்துவிட்டு வரும்போது அவள்தான் என் அறையிலிருந்து வெளியே வந்தாள்' என்றாள் ராஜம்மாள்.

'ஐயையோ! நான் அவள் அறைக்குப் போவதே கிடையாதே. அவள் குளித்துவிட்டு வரும்போது அவளுடைய அறையின் பக்கமாக வந்தேன். அதை அவளுடைய அறையிலிருந்து வந்ததாக எண்ணுகிறாள்' என்றாள் காமாக்ஷி. வையாபுரிப் பிள்ளைக்கு ஒன்றுமே புலப்படவில்லை. அவர் என்ன செய்வதென்று தோன்றாமல் விழித்துக்கொண்டு நின்றார். ராஜம்மாள் தன் புருஷனைப் பார்த்து, 'நீங்கள் ஏன் இப்படி நிற்கிறீர்கள். ஆயிரம் ரூபாய் நகை போச்சே!' என்று கதறினாள். நீலகண்டப் பிள்ளை தன் அண்ணனின் முகத்தைப் பார்த்தார். வையாபுரிப் பிள்ளை மனங்குழம்பியவராய் காமாக்ஷியைப் பார்த்து 'நீ அந்த நகைகளை எடுத்தால் கொடுத்து விடம்மா' என்றார். காமாக்ஷி 'அட தெய்வமே! எனக்கு ஒன்றுமே தெரியாதே. நான் அந்த நகைகளை எடுக்கவில்லையே' என்று சொல்லிக்கொண்டு ஓலமிட்டு அழத் தொடங்கினாள். அதற்கு ராஜம்மாள் 'திருடி விட்டு யாராவது அதை ஒப்புக்கொள்வார்களோ?' என்றாள். தனபாக்கியமும் சிறிது சந்தேகங் கொண்டவளாய்க் காமாக்ஷியைப் பார்த்து 'நீங்கள் அந்த நகைகளை எடுத்தீர்களா?' என்று கேட்டாள். காமாக்ஷி பதில் ஒன்றும் சொல்லாமல் 'ஓ' வென்று அழுதுகொண்டு நின்றாள். நீலகண்டப் பிள்ளைக்குச் சந்தேகம் பலத்துவிட்டது. அவர் காமாக்ஷியைப் பார்த்து 'நீ அந்த நகைப் பெட்டியை எடுத்ததுண்டா?' என்று சிறிது அதட்டிக் கேட்டார். காமாக்ஷி கண்ணீரைத் துடைத்துக்கொண்டு 'இல்லை' என்று ஒரே வார்த்தையில் பதிலளித்தாள். காமாக்ஷி பேசிய மாதிரியிலிருந்து நீலகண்டப் பிள்ளைக்கு அவள் பேரில் சந்தேகம் முன்னிலும் அதிகப்பட்டது. 'நீ நகைகளை எடுத்ததை ஒப்புக்கொள்ள மாட்டாயல்லவா? இதோ பார் உன்னை என்ன செய்கிறேன் என்று?' என்று சொல்லிவிட்டு வெளியே போகப் புறப்பட்டார். அவர் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகப் போகிறார் என்பதை ஊகித்தறிந்து கொண்ட வையாபுரிப் பிள்ளை 'சற்றுப் பொறு தம்பி!' என்று அவரைத் தடுத்தார். அதற்கு அவர் 'விடுங்கள் அண்ணா! என் பெண்சாதியின் நகைகளல்லவோ களவு போயிற்று. நீங்கள் அப்படித்தான் சொல்வீர்கள்' என்று சொல்லிவிட்டுப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனார். வையாபுரிப் பிள்ளையும் தனபாக்கியமும் என்ன செய்வதென்று தோன்றாதவர்களாய்த் திரும்பவும் ஒருதரம் காமாக்ஷியைப் பார்த்து 'அந்த நகையை எடுத்திருந்தால் திரும்பக் கொடுத்து விடுகிறதுதானே' என்றார்கள். காமாக்ஷி 'நான் எடுக்கவில்லையே' என்று பதிலுரைத்தாள். அவளுடைய பேச்சிலிருந்து அவர்களுக்கு அவள்மேல் சந்தேகம் அதிகப்பட்டதே யல்லாமல் குறையவில்லை. 'ஒரு வேளை அவள் அந்த நகைகளைத் திருடி யிருப்பாளோ? இந்த வீட்டிற்கு வேறு ஒருவரும் வரவில்லையே' என்று எண்ணினார்கள்.

களவு செய்யாதவன் கூடப் போலீஸ்காரர்களின் கையில் அடிபட்டால் களவு செய்ததாக ஒப்புக்கொண்டு விடுவான். அது போலவே பேதை காமாக்ஷியும் போலீஸாரிடம் நாலைந்து மொத்துக்கள் வாங்கியதும், ராஜம்மாளின் நகைகளைத் திருடியதாக ஒப்புக்கொண்டாள். அவர்கள் நகைப்பெட்டியைத் திரும்பக் கொடுத்து விடும்படியாகக் கேட்டதற்கு,

முதலில் தோட்டத்தில் ஓரிடத்தில் புதைத்து வைத்திருப்பதாகச் சொன்னாள். போலீஸார் அவள் குறிப்பிட்ட இடத்தில் தோண்டிப் பார்த்தார்கள். அங்கே அதைக் காணவில்லை. இரண்டாவதாக அதைக் கிணற்றில் போட்டு விட்டதாகக் காமாக்ஷி சொன்னாள். நாலைந்து ஆட்களை விட்டுக் கிணற்றிலும் தேடிப் பார்த்தார்கள். அங்கேயும் நகைப்பெட்டியைக் காணவில்லை. கடைசியாகக் காமாக்ஷி, நகைப் பெட்டியைத் திருடிக்கொண்டு வரும்போது ராஜம்மாள் எதிரே வந்ததினால் ஒரு வேளை அவள் அதைப் பார்த்து விட்டாளோ என்ற பயத்தால் ரோட்டில் வீசி எறிந்து விட்டதாகக் கூறினாள். போலீஸார் அவளை எவ்வளவோ துன்புறுத்தியும் நகைப் பெட்டி இருக்கும் இடத்தை மாத்திரம் கண்டு பிடிக்க முடியவில்லை.

காமாக்ஷி ராஜம்மாளின் நகைகளைத் திருடியதாகக் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டு அவளுக்கு ஆறு மாதச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. வையாபுரிப் பிள்ளையின் வீட்டிலுள்ளவர்கள் எல்லோரும் காமாக்ஷியே ராஜம்மாளின் நகைகளைத் திருடியதாக எண்ணினார்கள். எனவே, அவர்கள் முத்தையனையும் வீட்டை விட்டுத் துரத்தி விட்டார்கள். பாவம்! முத்தையன் என்ன செய்வான். அவன் சில நாட்களாக ஆதரிப்பார் ஒருவருமின்றி மிகவும் கஷ்டப்பட்டான். இந்நிலைமையில் ரங்கூனுக்குப் போகும் ஒருவர், முத்தையனின் கஷ்டங்களைப் பார்த்து இரக்கங்கொண்டவராய் அவனை ரங்கூனுக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டார்.

காமாக்ஷி ஜெயிலில் பட்ட கஷ்டங்களை என்னவென்று சொல்வது. கடைசியாகக் காமாக்ஷி ஜெயிலிலே இறந்து இரண்டு மாதம் ஆகி யிருக்கும். ராஜம்மாளின் நகைகளை ராஜமாணிக்கம் எடுத்துக் கொண்டுபோய்த் தொலைத்து விட்டான் என்னும் செய்தி வையாபுரிப் பிள்ளைக்குத் தெரிய வந்தது. ராஜமாணிக்கத்தின் மூலம் நடந்த உண்மைகளைத் தெரிந்து, அதற்காக வருந்தினர். அக்கொலைக்குப் பரிகாரமாக ரங்கூனிலிருந்து முத்தையனை வரவழைத்துத் தன் மகளையும் அவனுக்குக் கலியாணம் செய்து கொடுத்துச் சந்தோஷப்படுத்தினர்.


## தேவை! தேவை!! தேவை!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரால் தயாரிக்கப் படும் அரிய மருந்துகளையும், லக்பீடிக் கம்பெனியாரால் தயாரிக்கப்படும் பீடியையும், 'தமிழரசு' மாத சஞ்சிகையையும் பர்மாவில் விற்பனை செய்ய ஏஜெண்டு தேவை. ரூபாய் 5000 டிபாசிட் கட்டத் தகுதி யுடையவர்கள் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்
31, வைத்தியனாத முதலி வீதி, சென்னை.

# மதி கூறிய மதி

[வித்வான். ஐ. நடேச பிள்ளை. பொன்னேரி]

காலையம் பரிதி கதிரொளி வழங்கி
மேலைத் திசையில் மேவிய பின்றை,
பாலைப் போன்றும் பளிங்கு போன்றும்
வாலொளி வீசும் மதியம் வருமென
மாவிருப் புடனே மனமிகக் களித்து,
காவியும் மரையும் கவின்செயும் வாவி
மேவிய சோலையில் மிளிர்சிறு வரைக்கீழ்
பாவிய மேடையில் பரிந்துவீற் றிருந்தேன்.
என்போன் றிந்துவின் இனியநல் வரவை
அன்போ டெதிர்பார்த் தத்தடந் தன்னில்
புன்புற விதழ்விரி பொற்பா ரல்லி
பொன்புரி மதுவொடு பொழுதுபார்த் திருந்தது.
வண்டுகள் நாடி மலர்தொறும் மலர்தொறும்
அண்டி'அம் புலிஅதோ ஆழ்கடல் விட்டு
கண்டவர் களிக்கக் கவின்நில வெறிந்து
பண்டழல் கெடுக்கப் பரிவுட னுதித்தான்.
காண்மின் ! காண்மின் ! கண்விருந் தாகக்
காண்மின் !' எனவே கழறுந் தூதென
நாண்மல ரிதழ்க்கண் நன்ருய்த் திறந்தன.
கமலங் கடிதில் கடியிதழ் மூடி
இமைகொட் டாதவர் இயைய நின்றவச்
சமயங் கிழக்கில் சாந்தமி குந்து
அமரர் கடைந்த அமுதம் போலத்
தோன்றிய மதியின் தோற்றமென் சொல்வேன்!
வான்றூய்ப் பசுவின் மடியென் ருகி
ஆன்ற தண்ணிய தாம்பால் சொரிந்து
தான்றனக் கீடெனும் தருக்குடன் தவழ்ந்தது.
பார்த்தநான் அதனைப் பரிவுடன் நோக்கி
'சீர்த்திசேர் திங்காள், தெய்வத் தண்ணளி
பூர்த்தியாய்ப் பெற்றுப் பொழிவதெவ் வகை'யென ?
'ஆர்த்திடும் வாரியில் ஆம்பிறப் புடையேன்
பேரில் பிறந்தோர் பேரீர முடைய
தாரு மறிவர் அன்ருே !' என்றது.
'வாரிசம் வாட மலர்ந்ததே அல்லி
சீரியல் கூ'றெனத் 'தெளிவருள் எனக்கு
இன்ரு ரில்லை இனியா ரில்லை
அன்ன வியற்கை அறியேன்யான்' என்றது.

'சின்னஞ் சிறிதாய்த் தேய்ந்தும் வளர்ந்தும்
பின்னர், பெரிதாம் பெற்றியா' தென்றேன் ?
'உலகில் சிறியார் உயர்வடை வதுவும்,
நிலைபொரு ளுடையார் நித்திய வறியராய்
பலமாறு பாடு படிமிசை யுண்டெனா
நிலத்தோர்க் குணர்த்தும் நெறிபொருட்' டென்றதே.

---

ஒருவன்:—மனிதன் இஷ்டப்படி செய்ய வேண்டுமானல் என்ன வழி ?

மற்ருெருவன்:—படிக்காத பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ள வேண்டும்.

—சம்பு ஐ. ந. பொன்னேரி


**டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால் தயார் செய்யப்பட்ட மருந்துகள் யாவும் கீழ்க்கண்ட விலாசங்களில் பெற்றுக்கொள்ளலாம்.**

**முத்துவிநாயகர் ஸ்டோர்,**
கல்லல் S. I. R. (இராமநாதபுரம் ஜில்லா.)

**லங்கா குரோஸரி ஸ்டோர்,**
செட்டித் தெரு, கொளும்பு.

**வி. சா. காசி செட்டியார்;**
47, மார்க்கட் வீதி, சிங்கப்பூர்.

**A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,**
19, ஜடாமுனி கோயில் தெரு, மதுரை.

**A. N. லெட்சுமணன் செட்டியார்,**
வலம்புரி, வலையபட்டி,
பொன்னமராவதி போஸ்டு, புதுக்கோட்டை ஸ்டேட்.

**A. V. R. A. ADYCAPPA CHETTIYAR,**
Lalji Mansing Building, 1st Floor Lohar Chawl,
Near Crawford Market, Bombay. 2.

# ஜெர்மனியின் தோல்வி

[நாகூர் ரெ. தியாகசம்பந்தம்]

'பலவானே புத்திமான்' என்பது ஜெர்மானியர்களின் கொள்கை. எந் நாட்டினரிடத்து அன்பு, இரக்கம், அடக்கம் முதலிய குணங்கள் காணப்படுகின்றனவோ, அவைக ளெல்லாம் அந் நாட்டினரின் பலமின்மையைக் காண்பிக்கும் அறி குறிகள் என்பதே அவர்களது நம்பிக்கை. கொள்கை ஒருக்கால் உண்மையாயினும், பயனற்றதேயாம். ஏனெனில், புகழுடையான் அக் கொள்கையினரை லட்சியம் செய்யான். நலனற்றோரால் 'பலவானே புத்திமான்' எனச் சொல்லும் போழ்து, அது அவர்க ளுடைய வெறும் ஆடம்பரத் தன்மையையே காண்பிக்கும். மூர்க் கத்தனம் வேறு—பலம் வேறு என்பது உண்மையல்லவா? இக் கொள்கையைப் பிரிட்டானியர் பொருட் படுத்தினரில்லை. ஆனால் ஜெர்மானியரின் யுத்தப் பிரயத்தினத்தின் ஒலியே அவர்களை வாளா விருக்கச் செய்யவில்லை. யுத்தம் நடக்கின்றது. முடிவு என்னவாகும் என ஒருவராலும் சொல்வதற்கில்லை. ஒருக்கால் ஜெர்மானியர்கள் வெற்றி பெறினும் படுதோல்வியே அடைந்தவராவர். ஏனெனில், நாகரீகம், ஏழைகளின் மதிப்பு, உண்மையின் உணர்வு, சமாதானத் தின் பெருமை முதலியவைகளைத் தாங்கள் வெற்றி யடைந்த நாட்டினரிடையே நிலவச் செய்தல் வேண்டுமன்றோ? ஜெர்மானி யர்கள் பலசாலிகளாகவும், தைரியசாலிகளாகவும், ஒன்றுபட்ட மனப்பான்மை யுடையவராக விருப்பினும், உலகப்புனருத்தான வேலையில் தேர்ச்சி பெற்றோரா என்பது சந்தேகமே. அவர்கள் வெற்றி மிருகபலத்தினால் கொண்ட வெற்றி என்பதற் கைய முண்டோ?

அரசியல் துறையில் யார் வல்லுநர்? ஜெர்மானியத் தூதுவர்கள் யுத்தகாலத்திற்கு முன்பே இங்கிலாந்தில் செறிந்து கிடந்தனரே. என் ஹாலந்து பெல்ஜியம் உடன்படிக்கையை ஜெர்மானியர் சிதைத்தால், ஆங்கிலேயர் வாளாவிருக்கார் என்ற உண்மையை முன்னரே தம் நாட்டினருக்குச் சொன்னாரில்லை? சண்டை ஆரம்பிப்பதற்கு முன்பே 'நாங்கள் முதலில் பிரான்ஸைப் பிடிப்போம். இரண்டாவது ரஷ்யாவைச் சிதைப்போம். கடைசியாகப் பிரிட்டனைத் தகர்ப்போம்' எனப் பறைசாற்றி வந்த பிறகும், ஆங்கிலேயர் சும்மா விருப்பார் களா என்பதினை ஜெர்மானியர்கள் அறிந்தனரா? செய்வதையும் செய்துவிட்டு 'எங்கள் உறவினராய பிரிட்டானியரே போரில் கலந்தது வருந்துதற் குரியது' எனச் சொல்லல் எத்தன்மையதோ? அப்படியே யிருப்பினும் 'நாங்கள் அவர்கள் உறவினரல்ல, நாங்கள் கலப்புச் சாதியினர், நீங்கள் உற்றார்' எனச் சொல்லிக்கொண்டுதான் மூன்றாவதாகப் பிரிட்டனைத் தாக்குவோமெனப் பறைசாற்றி வந்த

தையும் மறவோம்' எனப் பதில் விடுக்க மதியற்றவரா பிரிட்டானியர்?

ஜெர்மனியின் யுத்த தளவாடங்கள் தற்போது சரிவர வேலை செய்து வருகின்றன. இங்கிலாந்தே தோல்வியுறினும், ஜெர்மானியருக்கும் தோல்வியே. ஏனெனில், சமாதானமாக ஏனைய நாட்டினரை ஆளும் திறன் பெற்றோரில்லையே. அரசாளும் முறையை பிரிட்டானியரிடமல்லோ கற்றல் வேண்டும். 'நீங்களும் நாடுகளைப் பிடித்த பிறகுதானே ஆளக் கற்றுக் கொண்டீர்களென அவர்கள் கேட்கலாம். 'பிறரைப் பார்த்துப் பழகும் தன்மை தங்களிடத்திலில்லையே' என்ற பதிலைத்தானே ஆங்கிலேயர் தருவர். போயர்கள் பிரிட்டானியர்களுக்கு உதவி புரிதல் ஜாலவித்தையாக எதிரிகள் நினைக்கலாம். ஐயோ ஜெர்மனி தேசமானது ஒரு யுத்த தளவாடப் பெருக்கத் தொழிற்சாலையெனவே திகழ்கின்றது.

கலாவல்லுநர்களான Carlybe (1796—81) Nietzche (1844—1900) முதலியோர்களால் ஜெர்மானியர்கள் கொள்கையானது மிகப் பலப்படினும் அரசியல் சூழ்ச்சியில் தேர்ச்சி பெற்றாரில்லையே. ஒவ்வொரு வார்த்தையையும் வேத வாக்கென நம்பி வருகின்றனரே. தங்கள் மனப்பான்மையை மாற்றியமைக்கும் வரை அவர்களால் உலகத்தின் ஒரு பாகத்தையும் ஆள முடியா? ஜெர்மானியர்களிடையே காணப்படும் உயர்தர அம்சங்கள் 'பலவானே புத்திமான்' என்ற கொள்கையின் விளைவாலன்றோ ஒளிபெற நிலவுதற்கில்லை. யுத்தம் நடக்கிறது. உலகத்தின் நன்மையே பிரிட்டானியர் கொள்கையாயிருப்பதினால், தோல்வியடையினும், வெற்றியடையினும் சரியே என மனத்திருப்தியுடனிருக்கின்றனர். ஆனால் கனடா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளின் கூட்டுறவை நோக்கிப் பிரிட்டானியருக்கு வெற்றி பெறவியலும் என நம்பப்படுகிறது.

இஃது Sir Walter Raleigh (1861—1922) அக்டோபர் 1914 ல் எழுதிய வியாசத்தின் சுருக்கம்.

---

ராமன்:—என்ன வெகு நீண்ட கடிதமாயிருக்கிறது? யாரிடமிருந்து வந்திருக்கிறது?

கோவிந்தன்:—சிநேகிதரிடமிருந்து.

ராமன்:—என்ன சொல்கிறார்?

கோவிந்தன்:—எல்லாம் நேரில் வந்து சொல்கிறாராம்!

—T. S. அப்துல் ரசூல்

# இரு கைக்குட்டைகள்

['குமாரன்']

(சென்ற மாதத் தொடர்ச்சி)

ஒரு சனிக்கிழமை வந்தது. மத்தியானம் ஹோட்டலுக்குப் போனவன் ஒரு தினசரிப் பத்திரிகை யொன்றை வாங்கி வந்தான். அன்று ஜானும் வீட்டிலிருப்பாராதலால் ஆனந்த பாயைப் பார்க்கலாம் என்ற எண்ணத்தோடு வீட்டினுள் நுழைந்தான். ஜான் உள்ளே நாற்காலியி லமர்ந்தபடியே அவனை வரவேற்றார். அருகிற் கிடந்த கட்டிலில் ராமநாதன் அமர்ந்தான். ஜான் 'ஹோட்டலி லிருந்து வந்த நீங்கள் கொஞ்சம் 'ரெஸ்ட்' எடுத்துக் கொள்ளுங்கள்' என்று கூறிவிட்டு, அவனிடமிருந்த பேப்பரை வாங்கிக் கொண்டு வெளித் திண்ணைக்கு வந்தார். ராமநாதனும் அவருடனே வெளியில் வந்துவிட எண்ணினான். ஆனால், தன் ஆருயிர்க் காதலியைக் காணுமல் அவனால் வெளியே வரமுடியவில்லை. அச்சமயம் ஆனந்த பாயும் தன் மோகனப் புன்னகையுடன் அவனருகில் வந்து நின்றாள். அப்பால் அந்தப் பொல்லாத காதலின் சிறு சேஷ்டை களுக்கு இருவரும் இலக்கானார்கள். இடையிடையே ராமு, ஜான் என்ன நினைப்பாரோ என்று அஞ்சினான். அவரைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்று அவள் அடிக்கடிக் கூறித் தைர்ய மூட்டினாள். இரண்டு மூன்று தடவை அவன் அவளிடம் விடை கேட்டெழுந்தான். ஆனால், அந்தப் பரிசுத்தமான அன்பைவிட்டு அவ்வளவு விரைவில் நீங்க அவனுக்கு மனம் வரவில்லை.

முடிவில் நேரமாயிற்று என்று வெளியில் வந்தபோது, ஜான் 'பிரிட்டிஷ் ராஜிப் பேச்சு இன்னும் முடிவுக்கு வரலை போலிருக்கே!' என்று சொல்லிக் கொண்டே பேப்பரை அவனிடங் கொடுத்தார்.

ஒரு வாரஞ் சென்றது. ராமநாதன் தன் காதலியைக் காண வில்லை. ஏதோ இரண்டொரு முறை தற்செயலாக அவன் கண்ணிற் பட்டாள். அப்போதுகூட அவள் அவனை ஏறெடுத்துப் பார்க்க வில்லை. அவள் முகத்தில் இளஞ் சிரிப்பு ஒரு துளியுமில்லை. இராக் கால நாடகமும் ஓய்ந்து போய்விட்டது. அந்த வெளி ஜன்னல் அனேகமாய் மூடியே கிடக்கிறது. எப்போதேனும் அது திறக்கப் படும் ஓசை கேட்குமானால், அவன் ஆவலோடு அந்தப் பக்கம் நோக்குவான். அந்தச் சின்னப்பயல் முகந்தான் புலப்படும். அவன் அதைத் திறந்து வைத்துவிட்டு ஓடுவான். பிறகு அதை மூடி வைப்பான்—இப்படியாக ராமநாதன் பலமுறை பார்த்து ஏமாந் தான்.

ஆனந்தபாய் இவ்வாறு தன் கண்களில் படாதிருப்பதன் காரணம் அவனுக்குப் புலப்படவில்லை. ஜான்கூட இப்போது அவ

னுடன் அதிகமாய்ப் பேசுவதில்லே. ஒரு வேளே தன் செய்கை அவருக்கு மனவருத்தத்தைக் கொடுத்திருக்குமோ என்று கலங்கினன்.

ஜான் இப்போது தன் குமாரத்தியைவிட்டு அதிக நேரம் பிரிந்திருப்பதில்லே. பள்ளிக்கூடம் விட்டதும் நேரே வீட்டிற்கு வந்து விடுகிருர். ஆனந்தபாய் காலேஜுக்குப் போகும் நேரத்தி லல்லாமல் மற்ற வேளேயில் வீதிப் பக்கம் வருவதேயில்லே. எப்போ தேனும் கண்டாலும் அவனே அறியாதவள்போல் நடந்து கொள்ளு கிருள். ஒரு கடைக்கண் நோக்குக்குக்கூட இப்போது பஞ்சம் வந்துவிட்டது.

'அப்பா! என்ன கொடுமை! பெண்கள் இப்படிப் பொல்லாத வர்களா? காதல், ஆசை என்று ஒருவனேக் கட்டிப் பிடிக்கிறது. ஆனல் அப்புறம் அதை யெல்லாம் மறந்து அவன் நெஞ்சை எட்டி உதைக்கிறது!—ஆ! அந்த இன்பம்—அவளுக்குத்தான் என்மீது எவ்வளவு பிரீதி!........என் கரத்தைத் தொட்டு ஆசையோடு முத்தி யிட்டு அன்பைப் புகட்டினள். அந்த மிட்டாய்களேக் கொண்டு என் ஆசையைத் தினமும் வளர்த்தாள். வெறும் புத்தகப் புழுவாய்க் கிடந்த என்னே, உலகியல் அன்பு இன்னதெனச் சுவைக்கச் செய்து அந்த அன்புக் கடலிலே தினமும் என்னே மூழ்க வைத்தாள். பரிசுத்தமான அன்பை—உள்ளொன்று வைத்துப் புறம் பொன்று பேசாத உத்தம அன்பைக் கண்டேன்........அதற்கு என்னேயும் என் மனத்தையும் அடிமை யாக்கினேன். இந்தப் பரந்த உலகத்தில் எனக்குள்ள எல்லாவற்றையும், என் உடல் பொருள் ஆவியையும் அந்த அன்புக்கென்றே தத்தம் செய்ய எண்ணி யிருந்ததற்கு வெகுமதி இதுதான? —என்னே உன் மலர்க் கண்களால் பார்த்தல் கூடப் பாபமா? ஒவ்வோர் சமயம் நீ தூரத்தில் நின்றபடியே என்னே முத்தமிடும் பாவனேயாக உன் மிருதுவான உள்ளங்கைக்கு முத்தி யிட்டு உன் ஆசையை எனக்குத் தெரிவிப்பாயே! அதெல்லாம் இப்போதெங்கே போய்விட்டது?'

'உன்னே முதன்முதற் சந்தித்தபோது ஆ! என்னென்ன கோட்டை யெல்லாமோ கட்டி மகிழ்ந்தேனே! அப்போது இந்தக் காதல் வாழ்வு இப்படி ஒரு சிறு நாடகமாக முடிந்துபோகு மென்று நான் கனவிலும் கருதவில்லேயே! ஆனந்தா! ஒரு புதிய மனேகர உலகத்தில்—அன்பு மயமான ஒரு இன்ப வுலகத்தில் என்னே இழுத்துப் போய்விட்டு, இப்படித் திடீரென்று தலேகீழாய் உருண்டு விழும்படி செய்துவிட்டனேயே! இதுதான உன் தூய அன்பின் லட்சணம்!........'

இவ்வாருக அவன் தினமும் பிதற்றினன். ஒரு மாதஞ் சென்றது. ஒரு நாள் மாலே அவன் தன்னறைக்குள் நுழைந்தபோது அங்கே ஒரு கடிதம் கிடந்தது கண்டு அதை எடுத்துப் பார்த்தான்.

அதில் 'என் ஆருயிர் அன்பரே! நான் உங்களை மறந்துவிட்டதாக எண்ணி என்மீது கோபமோ, வெறுப்போ கொள்ளாதீர்கள். என் நெஞ்சத் தாமரையில் உங்கள் திவ்ய உருவத்தை வைத்து நான் தினமும் பூசித்து வருகிறேன். ஆனால், முன்போல் நான் தங்களுடன் பேசவோ, தங்களைப் பார்க்கவோ முடியாத நிலைமையிலிருக்கிறேன். என் தந்தை சில தினங்களாக என்மீது கோபமாயிருக்கிறார். எதற்கும் என்னைக் கடிந்து கொள்ளுகிறார். என்னை மறந்து விடாதீர்கள். என்றேனும் இறைவன் நம்மைக் கூட்டுவிப்பார் என்று நம்புகிறேன்.'

பன்முறை படித்தான். அவனால் நம்பவே முடியவில்லை. அது அவள் கையெழுத்துத்தானா என்று ஆராய்ந்தான். அப்பால் அவள் அன்பை அற்பமாக எண்ணியதற்காகத் தன்னை நொந்துகொண்டான். ஆராயாமல் அதற்குமுன் தன் மனதைச் சிதறவிட்டுக் கலங்கியதற்காகப் பெரிதும் விசன முற்றான். அம்மின்னற்கொடியாளது தெய்வ அன்பை நினைந்து நினைந்து பேருவகை கொண்டான். அவனுக்கு உயிர்ப் பிச்சை யளிப்பதுபோல் சமய சஞ்சீவியாகக் கிடைத்த அந்தக் கடிதத்தைத் தன் சட்டைப் பையில் பத்திரமாக வைத்துக் கொண்டான். அவனுக்கு ஆனந்தபாயின் அன்பு கனிந்த சொல்லும், செய்கையும் நினைப்பு வந்து அதனால் அவனுள்ளம் துன்பப்படும் போதெல்லாம், அக் கடிதம் அவனுக்கு ஆறுதலளித்து வந்தது.

மாதங்கள் பல ஓடின. பி. ஏ. பரீட்சை எழுதிவிட்டு ஊருக்குப் புறப்பட்டான். அவளைப் பார்க்க முடியுமானால் கடைசி முறையாக அவளிடம் விடைபெற விரும்பினான்.

தெருவில் வண்டி வந்து நின்றது. வண்டிக்காரன் படுக்கை, பெட்டி, மற்றத் தட்டுமுட்டு சாமான்கள் எல்லாவற்றையும் வண்டியிலேற்றினான். ராமநாதன் எதிர் வீட்டினுள் நுழைந்தான். ஜான் முன் கட்டில் நின்றிருந்தார். 'ஓகோ! ஊருக்குப் புறப்பட்டீங்களா?' என்றார். 'ஆமாம் சார்! வரட்டுமா?' என்றான் ராமநாதன். அவன் விழிகள் அவளுக்காக அலைந்தன.

அங்கிருந்த தட்டி மறைவில் நின்றபடி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த அந்த உருவத்தை அவன் கூறிய விழிகள் கண்டு பிடித்து விட்டன. அந்த சோர்ந்த வதனத்தில் கண்ணீர் தாரை தாரையாகப் பெருகி வழிந்துகொண்டிருந்தது. ஒரு கணப் போதில் அந்தச் சோகச்சித்திரம் அவனுள்ளத்தில் புகுந்து கொண்டது. சொல்லொணா வேதனையோடு வெளியில் வந்தான்.

அன்று சூரியாஸ்தமன நேரத்தில் ஊர் வந்து சேர்ந்தான். பல மாதங்களுக்கப்பால் தன் சொந்த ஊருக்கு வந்ததா லிருக்க

வேண்டிய குதூகலம் அவனுக்கு அப்போது துளிகூட இல்லை. தன் மனைவியுடன்கூட இல்லை! தன் மனைவியுடன்கூட அவன் நன்ருய்ப் பேசவில்லை. வீட்டில் அவன் ஒரு புது மனிதன் போலக் காணப் பட்டான். வீட்டிலுள்ளோர் 'அவன் பரீட்சையில் நன்ருய் எழுத வில்லை போலும்! அதனல்தான் அப்படி யிருக்கிருன்' என்று எண்ணிக் கொண்டனர்.

இரண்டு மாதங்களுக்கப்பால் பரீட்சை ரிசல்ட்டு தினசரிப் பத்திரிகைகளில் வெளியாயிற்று. அதில் அவன் நம்பர் இருந்தது கண்டு, அவன் பரீட்சையில் வெற்றி பெற்றது குறித்து அவனுடைய நண்பர்கள் பலர் கடித மூலமாகத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித் திருந்தனர். அவற்றி லொன்று அவனது அன்புத் தெய்வமான ஆனந்தபாயிடமிருந்து வந்துள்ளது.

'என் அன்புத் துரையே! தாங்கள் பரீட்சையில் தேர்ந்தது குறித்து எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. தங்களை எப்போது பார்ப் பேன்? என் முத்தங்களை ஏற்றுக் கொள்ளுங்கள்.

இங்ஙனம்,

தங்களை என்றும் மறவாத

அபாக்கியவதி

..............................

கடிதம் கையினின்றும் நழுவி விழுந்தது. கண்களிலிருந்து நீர்த் துளிகள் மடமடவென்று உதிர்ந்தன. அதே சமயம் அவனது மனைவி அங்கே வந்தாள். அவன் நிலைமையைக் கண்டு பிரமித்து விட்டாள். ஆனல் அவளால் அவன் உள்ளக்குறை கண்டறிந்து அதற்கு மாற்றுத் தேட முடியுமா என்ன? [முடிவுற்றது]


## விளம்பர விகிதம்

| | |
|---|---|
| தடவை 1-க்கு ஒரு பக்கத்திற்கு | ரூ. 20. |
| ,, ,, ½ பக்கத்திற்கு | ரூ. 12. |

நீண்டகால விளம்பரங்களுக்கும், அட்டை விளம்பரத் திற்கும் மானேஜருக்கு எழுதவும். விளம்பரத் தொகையை முன் பணமாகவே அனுப்ப வேண்டும்.

மானேஜர்,

'தமிழரசு'

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.




# ஏழையின் கனவு

[T. S. அப்துல்ரசூல்]

'அம்மா! தாயே; பசி காதடைக்கிறதம்மா. ஏதாவது கொஞ்சம், பழய ஆகாரம் இருந்தால் கொடுங்களேன். ரொம்பப் புண்ணியம் உண்டாகும். அன்னையே! சாதத்தைக் கண்ணால்கண்டு 3 நாள் ஆகிறதம்மா' என்று ஒருஏழையின் பரிதாபமான குரல்! குழிவிழுந்த கண்கள், முதுகுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் வயிறு, எலும்பும் தோலுமா யிருக்கும் உடல், கையில் ஒரு சில்லுப் பெயர்ந்த பீங்கான் தட்டு, பார்ப்பதற்கே ஒரு பரிதாபகரமான காட்சி. மறுபடியும், அப்பிச்சைக்காரன் 'அம்மா! கொஞ்சம் கருணை செய்யுங்களேன். அப்பொழுதிருந்து நின்றுக்கொண்டிருக்கிறேனே' (உடனே உள்ளிருந்து ஒரு குரல்) 'யாரடா, அது? அங்கே சத்தம் செய்துக்கொண்டு நிற்பது. இது என்ன? சத்திரமா சாவடியா, வருகிற போகிற, தடிப்பயல்களுக்கெல்லாம் அள்ளி அள்ளிப் போடுவதற்கு, போடாபோ இப்பொழுது ஒன்றும் இல்லை.'

பிச்சைக்காரன்:—அம்மா! இந்த ஏழையின் முகத்தைப் பார்த்தாவது தருமம் செய்யுங்களேன். கடவுளே! என்னால் நிற்கக் கூட முடியவில்லையே.

குரல்:—இல்லை போடா என்றால் மறுபடியும், நின்றுக் கத்திக் கொண்டிருக்கிறாயா? உங்களுக்கெல்லாம் சம்பாதிப்பதற்கு என்ன? கேடு. சோம்பேரிப் பயலே.

அதற்குமேல் அப்பிச்சைக்காரனால் அங்கு நிற்க முடியவில்லை.

மறுபடியும் தள்ளாடித் தள்ளாடிக்கொண்டு நடக்க வாரம்பித்தான். ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியவில்லை. அன்று முழுவதும் தெருத் தெருவாய்ச் சுற்றி அலைந்தான். ஒரு கவளம்

அன்னம்கூடக் கிடைக்கவில்லை. களைப்பு மேலிட்டது. தாகம் நாவறண்டது. அருகிலிருந்த தண்ணீர்க் குழாயில் வயிறு நிறையத் தண்ணீர் உட்கொண்டு மறுபடியும் தன் விதியை நொந்துக்கொண்டு நடக்க வாரம்பித்தான்.

சாலை ஓரம் அரச மரங்களும், புளிய மரங்களும் இருபுறமும் அழகாக வளர்ந்திருந்தன. அக்கடுமையான வெயில் வேளையில், அப்பிச்சைக்காரன் இளைப்பாருவதன் நிமித்தம் ஒரு புளிய மரத்தின் நிழலில் அமர்ந்தான். சிலுசிலுவென்று குளிர்ந்த காற்று அவனை மெய் மறக்கச் செய்தது. ஆயாசத்தினால் அப்படியே சாய்ந்து படுத்துக் கொண்டான். சற்று நேரத்தில் நித்திராதேவி அவனைத் தன் வசப்படுத்தினள்.

உடனே தன்னை யாரோ தட்டி யெழுப்பியதுபோல் உணர்ச்சி ஏற்பட்டது. திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான். ஒரு பெரியவர் தன்னெதிரில் நிற்பதைக் கண்டு உடனே எழுந்து நமஸ்கரித்தான்.

பெரியவர்:—அப்பா! உன் பெயரென்ன? நீ எந்த ஊர்?

பிச்சைக்காரன்:—ஐயா, என் பெயர் மாணிக்கம். நான் பிறந்தது விசாகப்பட்டணம் என்னை இவ்வளவு அன்போடு விசாரிக்கும் தாங்கள் யார்?

பெரியவர்:—அப்பா, மாணிக்கம் நான் ஒரு மந்திரவாதி. என் அந்திய காலம் கிட்டிவிட்டது. ஆனதால், என் தொழில் முறைகள் என்னோடு ஒழிந்துவிடுமே என்று எனக்கு மிகுந்த கவலை. ஆகையால், ஒரு தகுந்த சிஷ்யனைத் தேடிக் கொண்டு வரும்பொழுது உன்னைக் கண்டேன். உனக்கு இது பிரியமா?

மாணிக்கம்:—ஐயா பெரியவரே, தாங்கள் என்னைச் சிஷ்யனாக ஏற்றுக் கொண்டதற்கு, நான் என்ன பாக்கியம் செய்தேனோ தெரியவில்லை. தங்கள் உத்தரவுப்படியே எதையும் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறேன்.

மந்திரவாதி:—சரி, இப்பொழுதே என் இருப்பிடத்திற்குச் செல்வோம். இதோ என் கையைப் பிடித்துக்கொள் என்றவுடன், மாணிக்கம் அவர் கையைப் பிடித்துக் கொண்டான். உடனே இருவரும் மறைந்து போய்விட்டனர்.

பின்னர் இருவரும் ஒரு பெரிய மலைக்குகைக்குள் நின்றனர். அங்கு எங்கு நோக்கினும், மண்டை ஓடுகளும், எலும்புக் கூடுகளுமே நிறைந்திருந்தன. முதலில் மாணிக்கம் இவற்றைக் கண்டவுடன் சற்றுப் பயந்தான். பிறகு மனதைத் திடப்படுத்திக்கொண்டு மந்திரவாதியுடன் கூடவே உட்சென்றான்.

மந்திரவாதி:—அப்பா, மாணிக்கம் பார்த்தனையா? இதுதான் என் இருப்பிடம். அதோ அங்கே மஞ்சள் நிறமான ஒரு உருண்டை

வைக்கப்பட்டிருக்கிறதல்லவா? அதுதான் மாய உருண்டை. உலகத்தில் நடப்பதைப் பூறுவும் அதில் அறியலாம். இதோ இந்தப் பஞ்சவர்ணக் கல். இதை வாயில் போட்டுக்கொண்டால், உடனே மறைந்து விடலாம். அதோ அங்கே பலவித வேர்களால் செய்யப்பட்டிருக்கும் பாதரக்ஷை இருக்கிறதல்லவா? அதைக் காலில் போட்டுக் கொண்டால் ஆகாயத்தில் பறக்கலாம் என்றும், இன்னும் மந்திர உச்சாடனம் சொல்லும் விதங்களும் மாயவேலை கள் செய்யும் விதங்களும் சொல்லிக் கொடுத்தார். இதெல்லாம் மாணிக்கத்திற்குப் பெரிய ஆச்சரியத்தைக் கொடுத்தன. உடனே மந்திரவாதி கூறியவிதம் வேர்களால் செய்யப்பட்ட பாதரக்ஷகளை எடுத்துக் காலில் மாட்டினான். அவ்வளவுதான் 'விர்' என்று உயர ஆகாயத்தில் கிளம்பினான். அந்தரத்தில் தான் பறக்கிறதைப் பார்க்கப் பார்க்க அவனுக்குச் சந்தோஷம் பொங்கியது. எங்கெங் கேயோ பறந்துவிட்டுக் கடைசியில் கீழே யிறங்கினான்.

பிறகு, மாய உருண்டை இருக்கும் இடத்தில் வந்து மந்திர வாதி சொல்லிக் கொடுத்த பிரகாரம், ஒரு எலும்பை எடுத்து அந்த உருண்டையின்மேல் இடது புறமாக மூன்றுதரம் சுற்றினான்.

உடனே மஞ்சள் நிறமாயிருந்த உருண்டை தூயவெள்ளை நிறமாக மாறியது. மாணிக்கம் அதைக் கண் இமை கொட்டாத வாறு உற்று நோக்கிக் கொண்டிருந்தான்.

அதில் என்னன்னமோ தோன்றி மறைந்தன. கடைசியில் ஒருவன் தண்டோரா அடித்துக்கொண்டு போவதையும் அவனுக் குப் பின்னால் ஒருவன் 'இனம் இனம் நம் அரச குமரியைக் கண்டு பிடிப்பவர்களுக்குப் பாதி ராஜ்யமும், அந்த அரச குமாரியையும் அவனுக்கே கலியாணம் செய்து கொடுத்து விடுவார்கள் மஹா ராஜபுரி' என்று வரையப்பட்டிருந்த பலகையை எடுத்துக்கொண்டு போனான். அவ்விளம்பரத்தைக் கண்டவுடன், மாணிக்கத்திற்கு ஆசையுண்டாயிற்று. உடனே மறுபடியும் எலும்பை வலதுபுறமாக மூன்றுதரம் சுற்றினான். உடனே எல்லாம் மறைந்து பழயபடி மஞ்சள் நிறமாக மாறியது. மாணிக்கம் தான் கண்டதை மந்திர வாதியிடம் உரைத்து, தான் அவளைக் கண்டு பிடித்துக் கலியாணம் செய்துக்கொண்டு பாதி ராஜ்யத்தையும் பெற ஆசையுள்ளவனாக இருப்பதாகச் சொன்னான்.

மந்திரவாதி:—அப்பா மாணிக்கம், போய்வா. ஆனால், ஜாக் கிறதையாக இரு என்று விடை கொடுத்தார். மாணிக்கம் பறக்கும் பாதரக்ஷையைக் காலில் போட்டுக்கொண்டு மஹாராஜபுரியை நோக்கிக் கிளம்பினான். அப்படிப் பறந்துக்கொண் டிருக்கையில், கீழே யாரோ ஒரு பெண் கூச்சலிடும் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டுக்

கீழே நோக்கினன். என்ன ஆச்சரியம். ஒரு பெரிய ராக்ஷஸன் ஒரு யௌவன மங்கையை ஹிம்சித்துக் கொண்டிருந்தான். உடனே மாணிக்கம் கீழிறங்கி ஒரு பெரிய பிரமாண்டமான ராக்ஷச ரூப மெடுத்து ஓர் பயங்கரமான சப்தம் போட்டான். இச்சப்தத்தைக் கேட்டவுடன் அப்படியே மூர்ச்சித்துக் கீழே விழுந்து விட்டான். உடனே அந்த நிஜராக்ஷஸன், இந்த மாயராக்ஷஸனைக் கண்ட வுடன் பயந்து ஓட ஆரம்பித்தான். மாயராக்ஷஸன் ஓர் சிறு கல்லை எடுத்து ஏதோ மந்திர உச்சாடனம் ஓதி, அந்த நிஜ ராக்ஷஸனின்மேல் எறிந்தான்.

அது ஒரு பெரிய மலையாக மாறி நிஜராக்ஷஸனின் உருத் தெரி யாமல் நசுக்கியது. அவன் இறந்தவுடன் மாயராக்ஷஸன் தன் சுய ரூப மெடுத்தான். பிறகு மெதுவாக அம்மங்கையை மூர்ச்சை தெளி வித்தான். அவள் மூர்ச்சை தெளிந்தவுடன் 'ஆ! ஐயோ அம்மா' என்று கத்த ஆரம்பித்தாள். தன் முன் ஒரு சுந்தர புருஷன் நிற்பதைக் கண்டவுடன் நாணமுற்றாள்.

மாணிக்கம்:—மங்கையே, நீ யார்? இங்கு வரக் காரண மென்ன?

மங்கை:—ஐயா நான் மஹாராஜபுரி தேச அரச குமாரி நந்த வனத்தில் புஷ்பம் பறித்துக் கொண்டிருக்கும் பொழுது, இந்த ராக்ஷஸன் என்னை மாயமாகத் தூக்கி வந்து இவ்வளவு நாளாக ஹிம்சித்துக் கொண்டிருந்தான். இப்பொழுது அவனைக் காண வில்லையே. தாங்கள் யார்? இங்கு அவன் உங்களைக் கண்டால் கொன்று விடுவானே என்றாள். இதைக் கேட்டவுடன் மாணிக்கம் கலகலவென்று சிரித்துவிட்டு நடந்ததை ஆதியோந்தமாகச் சொல்லி, அவளை அரசனிடம் சேர்ப்பித்துப் பாதி ராஜ்யத்தையும் பெற்று அவளையும் கலியாணஞ் செய்துக் கொண்டான்.

ஒருநாள் மாணிக்கம் அரச குமாரியுடன் ஆனந்தமாகப் பேசிக்கொண் டிருக்கும்பொழுது வெளியே, ஒரு பிச்சைக்காரன் வந்துப் பிச்சை கேட்டான். இது அவனுக்குப் பெரிய இடைஞ்சலாக இருந்தது. 'டேய் சேவகா துரத்துடா அவனை, மடப் பயல்' என்று கத்தினன். உடனே திடுக்கிட்டு எழுந்தான். இவ்வளவுநேரம் தான் கண்டது கனவென்றுணர்ந்து பெரிய வெட்க மடைந்தான்.

---

முதலியார் பணம் போட்ட பேங்கி திவாலாகி விட்டது. மிகுந்த மனக் கவலையுடன் வீட்டுக்கு வந்தார்.

கண்ணே நாம் பணம் போட்ட பேங்கி திவாலாகி விட்டது.

நல்ல காலம் பேங்கி செக் புஸ்தகத்தை வீட்டிலே வைத்தீர் களே.

—A. T. சுப்பரமண்யம்

# பள்ளிக் காதல்

[பா. கண்ணன். புதுவை]

**ப**த்மாவும், பாலனும் பரமானந்தத்தி விருப்பதைக் கண்டு பொறாமை கொள்வான் மணி. புவனம் என்பதோர் புனித நாடு. நீர் வளமும் நிலவளமும் நிறைந்துள்ளது. எங்குப் பார்ப்பினும் வாழைத் தோப்புக்கள். மா, புளி முதலிய மரங்கள் மலிந்து வானோங்கி வளர்ந்திருக்கும். அந் நாட்டிற்குப் புறம்பே அரசாங்கப் பள்ளியும் அமைந்துள்ளது. அங்குள்ள சிறுவர்களும், சிறுமியர்களும், வாலிபர்களும் அதைச் சார்ந்த கிராமங்களிலுள்ள சிறுவர்களும் அப் பள்ளியில்தான் பயில வேண்டும். பத்மாவும், பாலனும், மணியும் அதே பள்ளியில் வாசிப்பவர்களே!

பத்மா பரம ஏழையின் பெண். ரதியும் அவள் மதிவதனங் கண்டு மதிமயங்குவாள். நமக்கும் எதிரிடையாய் ஒருத்தி உருக் கொண்டிருக்கின்றனளே எனவும் எண்ணுவாள். அவள் நடை கண்டு அன்னமும் வெட்கித் திகைத்து நிற்காமற் போகா—குயிலும் தலை குனியும்—கம்பன் கவிக்கேற்ற சித்திரப்பாவை. அவளது பெற்றோரும் நத்தையில் முத்துப் பிறந்ததே என்றும் சிற்சில சமயங்களில் சிந்திப்பர். அவ்வடி வழகியைத் தக்க வயதோடு வாசிக்க வைத்தார்கள் பள்ளியில். அவளும் நன்கு வாசித்து வந்தாள்.

பாலனோ பணக்காரனின் மைந்தன். குடும்பத்தின் கீர்த்திக்கென அருணன்போல் அவதரித்த ஒரே உத்தமக் குமாரன். அவனது எழிலைக் கண்டு மதனும் மறைவான். தரித்திர தேவதையைத் தரிசிக்காதவன். எளியோருக்கு இரங்கும் நெஞ்சினன். நற்செயலிலேயே நாட்டமுடையவன். நலம் கருதும் நடத்தையைக் கண்டு பெற்றோரும் பெருமையடைவர். அதே வகுப்பில் வாசித்து வந்தான் பாலனும்.

மணியும் அவ்வகுப்பு மாணவன்தான். பாலனின் உற்ற தோழன். ஆனால், நாளடைவில் பாலனிடத்தில் பொறாமைக் கொள்ளலானான். மூவரும் ஒரே வகுப்பில் வாசித்து வந்தார்கள். அங்குள்ள மாணவர்களில் பாலன்பால் பக்தி கொண்டாள் பத்மா. வகுப்பில் பாலன் முதன்மை ஸ்தானம் பெற்றான். அடுத்தபடியாக பத்மாவைத் தான் பகரவேண்டும். ஆசிரியர் அறிவிக்கும் விஷயங்கள் ஏதேனும் தெற்றென விளங்காவிடில், பத்மா பாலனை வினவுவாள். அவனும் எவ்வேலை யிருப்பினும் விடுத்து விடை பகர்வான், தன்னால் கூடிய மட்டும் துணை செய்வான்.

மற்ற மாணவ, மாணவிகள் பிழை புரிந்தால் பரிந்து பேசுவான். விளையாட்டு வேளையில் தோட்டத்திலுள்ள மணம் வீசும்

ஆவணக் காப்பக நூலகம்
207679

மலர்களையும், நறிய கனிகளையும் கொய்து வேடிக்கையாய் அவள் விளையாடும் இடம் நோக்கி வீசுவான். அவளும் அவைகளை எடுத்துத் தன் தோழியர்களிடையே காண்பித்து அதன் வடிவையும், எழிலையும்பற்றி வர்ணிப்பாள். நாளடைவில் பாலனையும் உள்ளத்தே சித்தரித்துக் கொண்டாள். அல்லும் பகலும் அவன் நினைவும், தோற்றமுமேதான். ஏழை என்று ஏளனம் செய்வாரோ என்றும் எண்ணுவாள். இல்லை ஒருக்காலும் செய்யார் என்று தனக்குத் தானே தேர்தல் கூறிக் கொள்வாள். இருவரும் நாளடைவில் இணை பிரியா நண்பர்களாக இருந்து வந்தார்கள். இவர்கள் நட்பு வளர வளர, மணிக்கும் பொருமை வளர்ந்தது. எவ்வகையிலேனும் இவர்களைப் பிரிக்க வேண்டுமென்று எண்ணித் தக்க வழிகளைத் தேடினன். பின் அவர்களது பெற்ரோரிடம் இவ்விருவர்மீதும் தவருன விஷயங்களைப் புகுத்தி வந்தான் பல நாட்களாக. அதனல் பெற்ரோர்களும் அவர்களது நட்பைத் துணித்து விட்டனர். பெற்ரோர் வார்த்தைக்குக் கட்டுப்பட்டவர்களாய்ச் சின்னாள்வரை மறைமுகமாக வார்த்தையாடி வந்தார்கள். மணிமட்டும் பிரித்து விட்டோம் என்று மகிழ்ச்சி யடைந்தான்.

கடைசி தினம் பரிக்ஷையின் முடிவு நாள். மறுதினம் முதல் கோடை விடுமுறை. மாணவர்கள் முகமலர்ச்சியோடு இருந்தனர் தேறியவர்களுக்குச் சன்மானம் கிடைக்குமென்று. ஆனல் பத்மாவும், பாலனும் அன்று உளமகிழ்வற்று இருந்தனர். இனி இரண்டு மாதங்கள் கடந்தல்லவோ காணமுடியும் என்ற ஏக்கம் இருவர் மனதிலும் குடிகொண்டு விட்டது. வைத்த நட்பு வியர்த்தமாய்ப் போய்விடுமோ என்ற வேறு எண்ணமும் ஊசலாடி வந்தது. பரிக்ஷையில் தேறியவர்கள் சன்மானங்களடைந்து வெளியேறினர். இவர்களும் முதன்மையான சன்மானங்களை யடைந்து வெற்றியோடு வெளி வந்தனர்.

உள்ளக் கிடக்கையை உணர வேண்டி, 'நண்பா! இனி நான் மீண்டும் ஆரம்ப தினத்தன்று பள்ளிக்குவர முடியாது' என்ருள்.

பத்மா! உன்னைப் பாராவிடில் என் மனதைத் தேற்றுவிக்க முடியாது.

என் நிலை நினைக்கின் தாங்கள் என்னைக் கனவிலும் நினைக்க மாட்டீர் என்றே எண்ணுகிறேன்.

ஏன் இவ்வித மொழி?—

ஏழைப் பெண்ணுய் இருக்கிறேன் என்று தான்—

பத்மா! கிஞ்சிற்றும் அவ்விதம் நினையாதே. கல்விச் செல்வத்தைவிட வேறு செல்வம் சிறப்புடையதோ? அவைகள் எதற்கு?

அச் செல்வங்களை நான் அணுவளவும் ஆசிக்கவில்லை. உன்னைக் கனவிலும் மறவேன். இது உறுதி! ஆனால் ஒன்று........

அது என்ன?

உன்னையே மணக்க வேண்டுமென்று எண்ணித்தான் நான் உன்னிடம் நட்புக் கொண்டேன்.

பாலனைப் பார்த்த பார்வை சரேலெனத் தன் பாதங்களைப் பார்க்கத் தொடங்கியது—பின்

வெட்கத்தினால் சாய்த்த தலையை நிமிர்த்தி 'உண்மையாகவா?' என்று ஈனசுரத்தோடு வினவினாள்.

உண்மைதான்!—வேறு மங்கையை மணப்பேன் என்று எண்ணாதே என்றான்.

பத்மாவின் முகத்தில் புன்னகை பூத்தது.

நம் நினைவுப்படியே நண்பனின் நினைவும் என்று பத்மா பரமானந்தக் கடலில் மூழ்கிப், பாலனின் சிவந்த கன்னத்தில் தன் பவள விதழைச் சேர்த்தாள். அன்றுதான் இருவரின் காதல் அரும்பியது.

கதிரவனும் கடனை முடித்தான். மேற்கில் ஆழ்ந்த இருள் சூழ ஆரம்பித்தது. கடைசி முறையாக ஒருவரை ஒருவர் நோக்கி, உள்ளம் பிரிய மன மற்றவராய்ப் பிரிந்து, தத்தம் இருப்பிடம் அடைந்தனர். இரண்டு நாட்கள் சென்றது, இரண்டு மாதங்கள் கடந்தது போலிருந்தன. பிறகு பத்மாவின் பிதா, தன் மைத்துனனுக்குப் பத்மாவை முடிக்க முடிவு செய்துவிட்டார்.

இச்செய்தி பத்மாவுக்கு எட்டியது. அவள் உயிர் அவளிடமில்லை. 'ஈசனின் சோதனையோ? அல்லது அன்பின் முடிவோ' எனப் பிதற்றினாள். மாட்டேன் என்று மறுத்தாள். உன்னிஷ்டமல்ல வென்று சீற்றங்கொண்டு சீறினார் தந்தை. அவள் மௌனமுற்றவளாய் எப்படியாவது பாலனுக்கு இச்செய்தியை அறிவிக்க வேண்டுமென முடிவு செய்து கொண்டாள். ஆனால் பாலனைக் காண முடியாத நிலைமையில் இருக்கின்றோமே என ஏங்கினாள். தன் உற்ற தோழியிடம் புத்தகத்தில் ஒரு லிகிதத்தை வரைந்து வைத்து அனுப்பினாள் பாலனிடம். அவன் அதை வாங்கி அதனுள் இருந்த லிகிதத்தைக் கண்ணுற்றான். ஒன்றும் தோன்றாதவனாய்த் திக்பிரமை கொண்டான் பாலன். எவ்வகையிலும் நாம் நினைத்ததை நிறைவேற்ற வேண்டும். 'முயற்சியுடையார் இகழ்ச்சி யடையாரன்றோ' உண்மை நட்பின் உயர்வை உறுதி செய்ய வேண்டும். உலகத்தவரை உணரச் செய்ய வேண்டும் என்று மனத்திடை எண்ணிக்கொண்டே மறுமுறையும் லிகிதத்தை உற்று நோக்கினான்.

'காதல் போயின் சாதல்' என்று எழுதி இருந்தது கண்முன் தெற்றெனத் தோன்றியது. புத்துணர் வடைந்தான். அந்தோ! பாரதியாரின் பழமை வாக்கியமன்றோ! உண்மைதான்—அவர் பொன் மொழியைப் பொய்யாக்கா திருக்கச் செய்ய வேண்டும். நம் காதலை நிறைவேற்ற வேண்டும். சாதலினின்று மீட்கவேண்டும் என்று முடிவுசெய்து கொண்டான்.

அன்று நடுநிசியில் குறித்த இடத்தை நாடிச் சென்று மாடி யின் சாளரத்தை நோக்கினான். ஓர் உருவங் கண்டான். அவ்வுருவம் முன்னேற்பாட்டுடன் செய்திருந்த ஓர் கயிற்றின் துணை கொண்டு இறங்கிற்று. அவ்வுருவந்தான் பத்மா! இருவரும் நெடுந்தூரம் நடந்து சென்றார்கள். எங்கும் நிசப்தம். பின் சமீபத்தேயுள்ள புகைவண்டி நிலையத்தை யடைந்து, கோடைக் காலத்தைக் கடத்த, 'கொடைக்கானலுக்குப்' பயணச் சீட்டுப் பெற்றுப் பிரயாணம் செய்தார்கள். அந்நாளே இருவரின் திருமண நாளாகத் திகழ்ந்து. அன்றெடுத்த காதல் அரும்பு இன்றே மலராக மலர்ந்தது.

காகம் கரையக் காலையுமானது. கதிரவனின் உதயம் காணும் நேரம். தீப்பொறிபோல் பரவியது இவ்விருவர்களின் செய்தி. பிள்ளையின் பிரிவாற்றாமையால் அவரவர்தம் பெற்றோர்கள் பல பாகங்களிலும் தேடிப் பார்த்தார்கள். ஒன்றும் புலனாகவில்லை.

மறுதினம் மைந்தனின் கடிதம் கண்டார். மகளின் குசேலம் அறிந்தார். கலக்கம் விண்டார். சினத்தைத் தணித்துச் சாந்தி பெற்றார்.

மணி பிரேமையோடு என்னே! பிரித்து விட்டோம் என் றல்லவா எண்ணி யிருந்தேன். ஆஹா! 'பள்ளிக் காதலின் பெருமை'யை என்னென்று சொல்வது! என்று புகழ்ந்து பேசி அன்று முதல் பொறாமையை விடுத்தான். அவர்களுக்குத் தான் செய்த தீமையை எண்ணி விசனித்தான்.

சில நாட்கள் சென்றன. காதலர்கள் தம் சொந்த ஊர் வரும் சேதி யறிந்தான் மணி. அவர்கள் வரவை இமை கொட்டாது எதிர் நோக்கி மலர் மாலை கொண்டு மகிழ்ச்சியுடன் வரவேற்கக் காத்திருந் தான் வழிநோக்கி!

---

பஸ் டிரைவர்:—காரின் ரிப்பேரைக் கண்டு பிடிக்க முடிய வில்லையே. ஓட்டினால் பின்னாலேயே போகிறதே!

கண்டக்டர்:—மதராஸ்—வேலூர் என்ற போர்டை எடுத்து விட்டு வேலூர்—மதராஸ் என்று மாட்டி விடுகிறேன்.

—K. B. துரைசாமி, வேப்பேரி

# அந்தி நேரம்; அப்பா வருவார்

[த. உலகநாதன், கரந்தைத் தமிழ்க் கல்லூரி, தஞ்சை]

('பசியால் அலைந்த நரியொன்று' என்ற இசையில் பாடுக)

அப்பா இப்போ வந்திடுவார், அணைத்து எங்களை மகிழ்ந்திடுவார்.
மாலைக் காலம் வந்ததுபார்! மனத்திற் கின்பம் தந்ததுபார்!

ஆடும் மாடும் மந்தையாக அன்பாய் இருக்கை வந்தனவே.
பறவைகள் தத்தம் கூடுகளில் படுத்து உறங்க நாடினவே.

கதிரவன் மேற்கே சாய்ந்ததினால் கமலத் திதழ்கள் குவிந்தனவே.
அருமைச் சந்திரன் வருவதனால் ஆம்பல் மலர்ந்து விரிந்ததுவே.

தாவிக் குதிக்கும் குரங்கெல்லாம் தங்கின எங்கும் மரங்களிலே.
தேனைச் சேர்க்கும் பலவுயிரும் சேர்ந்தன தங்கள் மலரணையே.

அப்பா வரும்பொழுதானதினால் அன்புடன் அவரை நானழைப்பேன்.
வந்தவுடன் அவர் உட்கார வகையாய்க் கம்பலம் விரித்திடுவேன்,

அப்பா அவர்கள் மடிமேலே அமர்வேன் நானே துரைபோலே.
அம்மா அருகே நின்றிடுவாள், அன்புடை மொழிகள் புகன்றிடுவாள்

தந்தை தோள்மேல் ஏறிடுவேன், தாவிக் கழுத்தை அணைத்திடுவேன்.
காதுக் கினிய பாட்டுடனே கதைகள் சொல்லக் கேட்டிடுவேன்.

அண்ணனும் தம்பியும் கூடிடுவோம், அப்பாவுடன் விளையாடிடுவோம்.
எங்கள் இனிய மொழி கேட்டால் ஏகும் அவர்தம் துயரெல்லாம்.

தெளிந்த நிலாவின் ஒளிகண்டு தெருவில் ஓடி ஆடிடுவோம்.
என்றும் இதுபோல், சிறுவர்களே! இருந்தால் இன்பம்
[பெறுவீர்களே!

(இது Mrs. Alexander எழுதிய 'Father's return from the fields' என்ற ஆங்கிலச் செய்யுளைத் தழுவிப் பாடியது)

# கமலா பாஸ்கர்

[G. R. மூர்த்தி நாகூர்]

கமலபுரியில் 'கமல விலாஸ்' என்பது ஓர் சிறந்த மாளிகையாகும். அதில் கிருஷ்ணசாமி செட்டியார் என்ற தனவந்தர், தன் இரண்டாவது மனைவி வசந்தாவுடனும், மாஜி மனைவிக்குப் பிறந்த குழந்தைகளாகிய பத்மன், கமலா, முதலியவர்களுடன் வாழ்ந்து வந்தார். வசந்தாவுக்குச் சுமார் இருபது வயதிருக்கலாம். செட்டியார் வசந்தாவின் சொல்லே தெய்வச் சொல் என எண்ணி அவள் சொற்படி நடந்து வந்தார். வசந்தா நாகரீகமே உருவெடுத்தவள். தன் சக்களத்தியின் பிள்ளைகளாகிய பத்மன், கமலா, இருவரையும் கொடுமை செய்வது சொல்லி முடியாது. இரு பால் மணமாறாக் குழந்தைகளும் சிற்றன்னையின் கொடுமை சகிக்க முடியாது தன் தந்தையிடம் முறை யிடுவார்கள். செட்டியார் அவர்கள் பேச்சைக் கேளாமல் 'செவிடன் காதில் சங்கை ஊதினாற்போல' அசட்டையாய் இருந்து விடுவார்.

ஓர்நாள் மாலை மணி 5 இருக்கும். கமல விலாஸ் பின்புறமுள்ள பூஞ்சோலையில் ஓர் சிமிண்ட் பெஞ்சில் கமலா ஆழ்ந்த வருத்தத்துடன் அமர்ந்திருந்தாள். சற்று நேரங் கழித்துப் பத்மன் கையில் 'தமிழரசு'ப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு கமலா, கமலா, என்று கூவியவண்ணம் சோலைக்குள் வந்தான். கண்டான் கமலாவை! 'கமலா! ஏன் வருத்தமாக அமர்ந்திருக்கிறாய். இந்தா இந்தத் 'தமிழரசு'ப் புத்தகத்தைப்படி இதில் அழகிய கதைகள் இருக்கின்றன' என்று கமலாவிடம் கொடுத்தான் பத்மன்.

அண்ணா! எனக்குத் தற்போது மனம் சந்தோஷகரமாயில்லை. பிறகு படிக்கிறேன் என்று கமலா பத்மனிடம் கூறினாள். கமலா! ஏன் இன்று இவ்வளவு ஆழ்ந்த வருத்தமாக இருக்கிறாய்? என்ன நேர்ந்தது? யாது காரணம்? என்று பத்மன் கேட்டான். அண்ணா! இன்று மத்தியானம் ஸ்கூலுக்குப் போய் வந்த பிறகு, சிற்றன்னையைக் கேளாமல் பிஸ்கட் டின்னை எடுத்தேன். அச்சமயம் சிற்றன்னை ஓடிவந்து என்னை அடித்தும், திருட்டு நாயென்றும், அனாதைக் கழுதை யென்றும் சரமாரியாகத் திட்டினாள். எனக்கோ அடி பொறுக்க முடியவில்லை. இப்பரிதாப மொழியைக் கேட்ட பத்மன் (தனக்குள்) நாம் நம் தாயார் இருக்கும்போது எவ்வளவு சீரும் சிறப்புமாய் வளர்ந்தோம். தாயுமிறந்தாள். நம் சிறப்பும் இறந்தது. என் செய்வது என்று பெருமூச்சு விட்டவண்ணம் தங்கா! வருத்தப்படாதே! 'பொறுத்தவர் பூமியாள்வார்' என்றபடி கடவுள் நம்மைக் கைவிடமாட்டார் என்று தைரிய மொழி அளித்தான்.

அண்ணா! எனக்கு ஓர் யோசனை தோன்றுகிறது. நமக்கோ இவ் வீட்டில் நற்சுகம் கிடைப்பதரிதாகும். தந்தையோ நம்மைக் கவனித்த பாடில்லை. ஆதலால் நாம் வீட்டைவிட்டு வெளியேறுவதே உசிதமெனத் தெரிகிறது என்று கமலா சொன்னாள்.

என்ன கமலா! உன் எண்ணம் இப்படி மாறிவிட்டது. உனக்கோ வயது 8 ஆகிறது. எனக்கோ 12 ஆகிறது. நாம் ஏதாவது வேலைசெய்து பிழைக்க முடியுமா? என்று ஆச்சரியமாய்க் கேட்டான் பத்மன்.

அண்ணா! நாம் இவ்விடத்தை விட்டு வெளியேறி விடவேண்டும். மனதைத் தைரியப்படுத்திக் கொண்டு இன்றிரவே புறப்பட வேண்டும். என்ன சொல்கிறாய்! என்று கமலா கேட்டாள்.

பத்மன் நீண்டநேரம் யோசித்துப் பிறகு சம்மதித்தான். சரி கமலா இன்று இரவு 12 மணிக்குப் புறப்படுவோம். தூங்கிவிடாதே என்று சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டகன்றான்.

இரவு மணி 12 ஆனது. எல்லோரும் நித்திரைக் கடலில் ஆழ்ந்து இருந்தனர். பத்மனும் கமலாவும் சப்தமின்றிப் படுக்கையைவிட்டு எழுந்து நல்லாடைகளை எடுத்துவிட்டுக் கிழிந்த ஆடைகளை உடுத்திக்கொண்டு தாயின் படத்தைப் பார்த்து வணங்கியபின் வீட்டைவிட்டு வெளியேறினர். எங்கும் இருள். நிசப்தம் குடிகொண்டிருந்தது. இருவரும் ரெயில்வே ஸ்டேஷனுக்கு வந்தனர். இரவு 1-மணிக்கு மெயில் வந்தது. கையில் காசுமில்லை. டிக்கட்டுமில்லை. வண்டியில் ஏறினர். காலை மணி 4 ஆகியது. ரெயில் சந்திரபுரி என்னும் ஸ்டேஷனில் நின்றவுடன், இருவரும் இறங்கி விடியும்வரை ஸ்டேஷனில் தங்கி யிருந்தனர். கதிரவனும் உதித்தான். இருவரும் சந்திரபுரி நகரைச் சுற்றினர். காலையில் ஒன்றும் ஆகாரமருந்தவில்லை. மத்தியானம் மணி 12 ஆகியது. பசியோ தாங்க முடியவில்லை. வெயிலின் கொடுமையோ பொறுக்க முடியவில்லை. நகருக்குச் சிறிதுதூரம் சென்று ஓர் ஆற்றங்கரையை அடைந்தனர். ஆங்கு ஓர் ஆலமரத்தடியில் களைப்புடன் அமர்ந்தனர். அச்சமயம் அவர்களிடம் ஓர் பெரியார் வந்து குழந்தைகளே! நீங்கள் யார்? எவ்வூர் என்று விசாரித்தார். குழந்தைகள் தங்கள் விருத்தாந்தங்களைச் சொல்லினர். பெரியார் மனமிரங்கித் தன்னிடம் இருந்த அன்னத்தை அவர்களிடம் கொடுத்தார். அனாதைக் குழந்தைகள் அன்னத்தை அருந்தினர். குழந்தைகாள்! கடவுள் உங்களுக்குச் சிறப்பும் செல்வமும் பெறுகும்படிச் செய்வார். கவலைப்படாதீர்கள். நான் சென்று வருகிறேன் என்று அவ்விடத்தைவிட்டு அகன்றார்.

பத்மனும் கமலாவும் சிறிது தூரம் சென்று 'கணேஷ் பில்டிங்' என்ற இடத்தை அடைந்தனர். அம்மாளிகை சந்திரபுரி 'கணேஷ் ஸ்டுடியோ'வின் மானேஜர் கணேச முதலியாரின் வாசஸ்தலம். முதலியார் 45 வயது நிறம்பியவர். தருமஸ்தர். பிள்ளைப்பேறு இல்லாதவர். பத்மனும் கமலாவும் அம்மாளிகையின் சிற்ப வேலையைக் கண்டு பிரமித்தவண்ணம் நின்றுப் பார்த்துக்கொண்டிருந்தனர். முதலியார் தன் சாப்பாட்டை முடித்துவிட்டு விசிறியுடன் உள்ளிருந்து வெளியில் பிரசன்னமானார். தன் எதிரே நின்ற குழந்தைகளைக் கண்டார்! கொண்டார் பரிதாபம். அழைத்தார் அருகில்! அவர்களின் விருத்தாந்தங்களை விசாரித்தார். முதலியார் அவர்களின் அனாதை வாழ்வைப்பற்றி வருந்தினார். பின்னர் நல்லாகாரம், நல்லுடை அளிக்கப்பட்டன. குழந்தைகளே! வருத்தப்படாதீர்கள். உங்கள் ஆயுள் உள்ளவரை நீங்கள் இங்கிருக்கலாம். இனிமேல் நீங்களே என் பிள்ளைகள். நானோ பிள்ளையில்லாதவன். முதலியாரின் மனைவியும் அவர்களை அன்போடு போஷித்தாள். பத்மன் முதலியார் சொத்துக்கதிபதியானான். பத்மன் B.A. வரையிலும் கமலா S.S.L.C. வரையிலும் பயின்றனர். முதலியாரும் காலனின் அழைப்பிற்கிணங்கி விண்ணுலக மடைந்தார்.

பத்மன் 'கணேஷ் ஸ்டுடியோ'வின் தளகர்த்தரும் பிரபல சினிமா டைரக்டருமானான். கமலாவும் மணத்தை விரும்பாமல் சினிமாத் துறையில் ஈடுபட்டுப் பிரபல படப் பிடிப்பாளரானாள். (Photographer) அவ்விருவருக்கும் நகரெங்கும் நற்புகழ் கிடைத்தது.

சில மாதங்கள் சென்று சினிமாவிற்காகச் சில வெளிக்காட்சிகளைப் படமெடுக்கத் தானும் கமலாவும் வேலைக்காரன் ராமனும் காரில் புறப்பட்டனர். காரில் கூடாரத்திற்கான சாமான்களும், ஆகாரத்திற்கான வசதிகளும் வைக்கப்பட்டிருந்தன. சந்திரபுரிக்கு வடக்கே முன்னூறு மைல் சென்றதும் இருளாயிற்று. மூவரும் மலைச்சரிவின் ஓரத்தில் கூடாரத்தை அமைத்தனர். பேபி பெட்ரோமாக்ஸ் லைட் எரிந்துக்கொண்டிருந்தது. சில கள்வர்கள் கூடாரத்தைக் கண்டனர். சப்தமின்றிக் கூடாரத்தினருகில் வந்து, உள் நுழைந்து மூவரையும் கைகால்களைக் கட்டினர். வேலைக்காரன் ராமன் தன் எஜமானர்களைக் காப்பாற்ற வெகு முயற்சி எடுத்துக் கட்டுகளை அவிழ்க்கும்போது, கள்வர் அவனைக் கத்தியால் குத்திக் கொன்றனர். பத்மனும் கமலாவும் பெருஞ் சப்தமிட்டனர்.

பத்மனின் கூடாரத்திற்கு ஒரு பர்லாங் தூரத்தில், இவர்களைப் போலவே சினிமாவுக்கென வெளிக் காட்சிகள் எடுக்க வந்துள்ள, செல்வபுரி 'திலக் ஸ்டுடியோ'வின் படப் பிடிப்பாளர் பாஸ்கரன் இவர்கள் சப்தத்தைக் கேட்டான். உடனே தன்னுடன் வந்த அமர்நாத்தை எழுப்பி, அமர்நாத் ஏதோ அபாயகரமான சப்தம் கேட்கிறது. நீ இங்கு இரு. நான் சென்று பார்த்து வருகிறேன் என்று சொல்லிவிட்டு, கையில் பிஸ்டலையும் டார்ச் லைட்டையும் தூக்கிக்கொண்டு கூடாரத்தை நோக்கி ஓடிவந்தான். கண்டான் சோதரர்களின் கதியை! ஓட்டினான் கள்வர்களை.

பாஸ்கர் அவர்கள் கட்டுகளை அவிழ்த்துவிட்டு அவர்களைப்பற்றி விசாரித்தான். பத்மன் தன் விருத்தாந்தங்களைத் தெரிவித்தான். தானும் இன்னாரெனத் தெரிவித்தான் பாஸ்கர். இருவரும் நண்பர்களாயினர். ராமனை அவ்விடமே அடக்கஞ் செய்தனர்.

24 வயதும் வசீகரமுகமும் மன்மதனை யொத்த அழகுங்கொண்ட பாஸ்கரனைக் கண்ட கமலா, அவன் பேரில் காதல் கொண்டு அவனிடம் வார்த்தையாட விரும்பினாள். பொழுதும் விடிந்தது. இரு மலை நடுவே புறப்படும் கதிரவனைப் படம் பிடித்தனர். பின்னர் தேநீர் அருந்தும்போது பாஸ்கர் கண்களும் கமலாவின் கண்களும் உரையாடின.

எங்கள் உயிர்காத்த வீரனாகிய தங்களை என்னுருயிர் நண்பனாக நினைத்துள்ளேன். தாங்கள் என்னுடன் சேர்ந்து எங்கள் ஸ்டுடியோவிற்குப் பணியாற்ற விரும்புகிறேன் என்று பத்மன் கூறினான். பாஸ்கர் சிறிது யோசித்துவிட்டுப் பிறகு சம்மதித்தான். தான் அடுத்த வாரம் சந்திரபுரி வருவதாகச் சொல்லிப் பிரிந்தான். அன்றிருந்து கமலா சதா பாஸ்கர் நினைவாகவேயிருந்தனள்.

ஒருவாரம் சென்றது. பாஸ்கரும் சந்திரபுரி வந்தடைந்தான். அன்று முதல் பத்மனுக்கு ஆருயிர் நண்பனாகவும், கணேஷ் ஸ்டுடியோவின் அஸிஸ்டெண்ட் மானேஜராகவும் பிரபல படப் பிடிப்பாளருமானான்.

சிலநாட் சென்றன. பத்மன் வெளியூர் போக வேண்டுமென்றும், தன் நண்பனை ஸ்டுடியோவைக் கவனித்துக் கொள்ளும்படியும், தன் தங்கைக்குத் துணையாக வடிவேலு என்னும் வேலைக்காரனை வைத்து விட்டும் புறப்பட்டான். 5 நாளில் வருவதாகச் சொல்லிப் போனான். எப்போது நம் காதலனுடன் கூடி வார்த்தையாடலாம் என்று நினைத்துக் கொண்டிருந்த கமலாவுக்கு அன்றுதான் சமயம் வாய்த்தது. அதைப்பற்றி மிகவும் சந்தோஷமடைந்தாள் கமலா.

தன் வேலைக்காரன் வடிவேலுவைக் கூப்பிட்டு வடிவேலு! நான் 100 ரூபா தருகிறேன். அண்ணன் வரும்வரை உன் வீட்டிலேயே இருந்து விடு. இவ்விஷயத்தை அண்ணனிடம் தெரிவிக்கக் கூடாது என்று கெஞ்சிக் கேட்டாள். வடிவேலு ரூபாயைக் கண்டதும் 'பணமென்றால் பிணமும் வாய் திறக்கும்' என்றபடி ஆச்சரியமுற்றுத் தன் வீட்டில் வந்து தங்கிவிட்டான்.

மாலை மணி 5 இருக்கும். பாஸ்கர் நாகரிக உடைதரித்துப் பின்புற முள்ள சோலைக்கு வந்தான். மேல்மாடியில் நின்றுக்கொண்டு இருந்த பச்சிளங் கொடி கமலா, கீழே சென்ற பாஸ்கரைக் கண்டாள். தன் கையில் இருந்த ரோஜா மலரை மேலிருந்து பாஸ்கர் மேல் வீசினாள் கமலா. பாஸ்கர் திடுக் கிட்டு மேலே பார்த்தான். கண்டான் கன்னியை! புன்னகை பூத்தவண்ணம் நின்றாள் கமலா! ஓர் கடிதம் விழுந்தது. பாஸ்கர் எடுத்துப் படித்தான்.

எனதன்புள்ள காதலரே!

நான் தங்கள் வருகையை எதிர்பார்க்கின்றேன். ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம். மற்றவை நேரில்: தங்கள் காதலி கமலா.

பாஸ்கரனுக்குச் சொல்வானேன்! 'பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போலாயிற்று.' உடனே மாடிக்கு வந்தான். பிறகு என்னகும்! பூர்ணச் சந்திரனும் புறப்பட்டான். இப்படியாக நான்கு நாள் இன்புற்றுக் கிடந்தனர்.

ஐந்தாம் நாள் வந்தது. வடிவேலுவும் எஜமானர் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் ஊர்சென்று திரும்பிய பத்மனும் வந்து சேர்ந்தான். வடிவேலு கமலாவைப்பற்றி ஒன்றும் கூறவில்லை.

என்ன பாஸ்கர்! தங்கை சௌகரியந்தானு! என்று பத்மன் கேட்டான். நான் நேற்றுத்தான் பார்த்தேன் கமலாவை! கையில் காமிராவை எடுத்துக்கொண்டு சென்றாள் என்றான் பாஸ்கர்.

இப்படியாக 2 வாரங்கள் ஓடி மறைந்தன. ஒருநாள் கமலா வடிவேலுவிடம் கீழ்க்கண்ட கடிதத்தைத் தன் காதலன் பாஸ்கருக்குக் கொடுத்தனுப்பினாள்.

என்னுயிர்க் காதல!

இன்று இரவு 12 மணிக்குக் கட்டாயம் என் ரூமுக்கு வர வேண்டும். நான் எதிர்பார்க்கின்றேன். தங்கள் காதலி கமலா.

கடிதத்தைக் கண்டான் பாஸ்கர். என் செய்வதென யோசித்தான். 'காதலியின் எண்ணத்தைப் பூர்த்தி செய்வது காதலரின் கடமை' என்று நினைத்தான்.

இரவு மணி 12 ஆனது. பத்மன் நல்ல நித்திரையில் ஆழ்ந்திருந்தான். பாஸ்கர் சப்தமின்றி எழுந்து மேல் மாடிக்குச் சென்ருன். காதலர்கள் கூடினர். அச்சமயம் ஓர் பூனை மாடிச் சுவற்றின்மீதுள்ள பூச்சட்டியை உருட்டிவிட்டது. சட்டி ஒட்டின்மீது உருண்டு கீழே விழுந்தது. இச் சப்தத்தைக் கேட்ட பத்மன் ஆ! தங்கா! என்ன நேர்ந்தது என்று கையில் பிஸ்டலுடன் மாடிக்கு ஓடி வந்தான். கண்டான் காதலர்களின் காட்சியை! அடைந்தான் திகைப்பு!

அடே! உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செய்த அறிவு இழந்த மூடா, இதோ இப்பிஸ்டலுக்கு இரையாவாயாக என்று பிஸ்டலை பாஸ்கர்முன் நீட்டினுன் பத்மன்.

அதற்குள் கமலா அண்ணு குற்றவாளி அவரல்ல. நானே குற்றவாளி அவரை இம்சிக்க வேண்டாம் என்று மன்ருடினுள். பத்மன் மனநிம்மதி யடைந்து போலீஸ் இன்ஸ்பெக்டர் சிதம்பரநாதம் பிள்ளையை வரும்படி டெலிபோன் மூலம் அறிவித்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் போலீஸ் வந்தது. பாஸ்கரைக் கைதி செய்தது.

அன்றிருந்து கமலா நல்லுடை தரிக்காமலும் நல்லாகாரம் உண்ணு மலும் இருந்து, பலத்த பிணியினுல் பீடிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டாள்.

பாஸ்கரைக் கொடிய குற்றவாளியெனத் தீர்மானித்து, சந்திரபுரிக்கு மேற்கே 300 மைலுக்கப்பாலுள்ள ராஜபுரி என்ற ஊரின் சிறைக்கு அனுப்பினர்.

பாஸ்கர் ஒரு மாதம் ராஜபுரி சிறையில் படாத பாடுபட்டான். ராஜபுரி இளவரசனுக்குப் பட்டம் கட்டும் நாள் வந்தது. சிறைக் கைதிகள் எல்லாம் விடுவிக்கப்பட்டனர். பாஸ்கரும் விடுதலை யடைந்தான். பாஸ்கர் ராஜபுரியைவிட்டு இருபது மைல் கால் நடையாக நடந்து, ஓர் காட்டில் போய்ச் சேர்ந்தான். அக்காட்டில் ஓர் காட்டிலாகா ஆபீஸ் இருப்பதைப் பார்த்தான். ஆங்குச் சென்று காட்டிலாகா இன்ஸ்பெக்டரைப் பார்த்துத் தான் ஓர் அனுதை யென்றும், தனக்கு ஏதாவது வேலை தரவேண்டு மென்றும் கேட்டான். இப்பரிதாப மொழியைக் கேட்ட இன்ஸ்பெக்டர் பாஸ்கரைத் தன் காரியதரிசியாய் நியமித்துக் கொண்டார்.

சிலநாட் சென்றன. ஓர்நாள் பத்மன் தனிமையாகக் காரை எடுத்துக் கொண்டு ஜோதிபுரி நகருக்கு வருவதற்காகப் புறப்பட்டான். சந்திரபுரியி லிருந்து ஜோதிபுரிக்கு மலையோரமாய்த்தான் வரவேண்டும். பத்மனிடம் 3000 ரூ. பணமும் பிஸ்டலும்தான் இருக்கிறது. சந்திரபுரியைவிட்டு வெகு தூரம் வந்ததும் கள்வர்களால் கார் மறைக்கப்பட்டது. பத்மன் பொருளை யெல்லாம் இழந்தான். கள்வர்கள் பத்மனைக் கைகால்களைக் கட்டி மலைப் பாறைக்கிடையில் போட்டுவிட்டு ஓடிப் போயினர். அவ்வழியே வந்த காட்டிலாகா இன்ஸ்பெக்டரும் அவர் காரியதரிசி பாஸ்கரனும் அச்சப்தத் தைக் கேட்டனர். அருகில் சென்று பார்த்தனர். பாஸ்கர் பத்மனின் முகத்தில் உள்ள துணியை எடுத்துப் பார்த்தான்! ஆ! பத்மன்! என்று அலறிப் பத்மன்மேல் சாய்ந்தான். இன்ஸ்பெக்டருக்கு இக்காட்சிகள் வெகு ஆச்சரியத்தை விளைவித்தன. இருவரின் நட்புத் திறத்தைப்பற்றி மெச்

# நான் குச்சுக்காரியல்ல. கற்புடையவளே!

[ S. P. Anand ]

(சென்றமாதத் தொடர்ச்சி)

சில தினங்களில் என் தாய் மேனாட்டு நங்கை போன்று என்னை அலங்கரிக்க முற்படுவாள். கவுன் அணியச் செய்து, தலையை வாரி இரு சடை போட்டு, இரண்டு காதோடு சேர்த்து வட்டமாகப் பின்னிச் சுற்றிக் கட்டுவாள். முகத்திற்குக் 'குட்டிக்கூரா பேஸ் பவுடர்' வெளிக்குத் தெரியாத முறையில் அழகாகப் பூசி, காதில் முத்துகளாலாக்கப்பட்ட தொங்கட்டம் போடுவாள். கண்களில் மையிட்டுப் புருவம் எல்லாம் நன்கு எழுதி, உதட்டிற்கு 'லிப்ஸ்டிக்' போட்டு அதிற் கொஞ்சம் இரு கன்னங்களிலும் இரு இடத்தில் சிவப்பு நிறம் தெரிந்தும் தெரியாமலும் இருக்கும்படி தேய்த்து விடுவாள். விரல் நகங்கட்கெல்லாம் 'நெயில் பாலிஷ்' போடுவாள். கால்களில் ஸ்டாக்சுடனும் லேடீஸ் ஷூவுடனும் 'டக் டக்' என்று நடந்து வருங்காலத்தில், அவர் இருக்கிறாரே அவர் எதிர்ப்பட்டு விட்டாரானால், தானும் ஓர் வெள்ளையராகவே நினைத்துக்கொண்டு 'ஹல்லோ குட்மார்னிங் மேடம்' என்று சொல்லி ஆநந்தத்துடன் என் கையைப் பிடித்துக் குலுக்கிக் காருக்கு அழைத்துச் செல்வார். இந்த விதமாக வெல்லாம், என் தாய்க்கு அவர் விருப்பப் படியும், தன் இஷ்டம் போலும் என்னைப் பலபல விதமாக உடையணிவித்து ஆபரணம் பூட்டி, அலங்கரித்துப் பார்த்து ஆநந்திப்பது தவிற வேறு வேலை கிடையாது.

இப்படிக் கவலை என்பதே யில்லாது ஆநந்தமாக என் இளம் பருவமானது கடந்து வந்தது. நானும் படிப்பில் மிகவும் சிரத்தையெடுத்துக் கவனமாகப் படித்து வந்தேன். ஆறாவது பாரத்தில் வாசித்து வருங்காலத்தில் இயற்கை தன் வேலையைச் செய்து முடித்தது. வெளிப் படையாகச் சொல்லுகிறேனே நான் ருதுவாகி, மங்கள ஸ்நாநம் செய்விக்கப் பெற்றேன். விசேட நாட்களாகிய பத்துப் பதினைந்து நாட்களில் என் மாமாவை நேரில்

---

சினார். பாஸ்கர் பத்மனின் விபரங்களையும் தன் நண்பனென்றும் இன்ஸ்பெக்டரிடம் சொன்னான். இன்ஸ்பெக்டர் பெரும் பொருள் கொடுத்து அவ்விரு நண்பர்களை வழி யனுப்பினார். கமலாவும் ஆஸ்பத்திரியினின்று சுகமாக வெளிவந்தாள்.

சில வருடஞ் சென்று பாஸ்கருக்கும் கமலாவுக்கும் ஓர் ஆண் மகவு பிறந்தது. அப்பாலகனுக்குப் 'பத்மராஜ்' என்று பெயரிட்டுத் தன் வாழ்வைச் செவ்வனே நடாத்தி வந்தனர்.

பார்க்க முடியாமல், என் மனம் பட்டவேதனையை அந்தப் பரமனே அறிவான். அவரும் என்னைப் பார்க்காமல் எந்நிலை யடைந்திருந் தாரோ? யாரறிவர்? பிறாரியச் செய்யும் உலக வழக்கப்படி மங்கள ஸ்நாநக்கிரியையும், வெகு ஆடம்பரமாகவும் குதூகலமாகவும் அறுசுவையுடன் கூடிய உண்டிமக்கட் களிக்கப்பட்டு, தகப்ப னில்லாக் குறை கூடத் தெரியாதபடி அவ்வளவு விமரிசையாக என் தாய் நடத்தி வைத்தாள். இது முடிந்தவுடன் எனக்கு ஓர் ஆசை ஊசலாடியது. ஆறுவது பாரத்தைப் பூர்த்தி செய்து படிப்பை நிறுத்த எண்ணினேன். என் தாயிடம் முறையிட்டேன். அவளும் என் விருப்பத்திற்குமாறாக நடக்க இசையாமல் நான் ருதுவான பின்னும் என்னைப் பள்ளிக்கனுப்பி வந்தாள். இந்தக் காலத்தில் முன்னைவிடப் பன்மடங்கு உருண்டு திரண்டுப் பொலிவுடன் விளங்கி னேன் என்பதில் ஆச்சாயம் ஒன்றுமில்லை. நான் மாலை நேரங்களில் என்பள்ளித் தோழிகளுடன் பொழுது போக்கிற்காக ரிங் டென்னிஸ் பாட்மிட்டன் (Ring tennis BatMenton) முதலிய விளையாட்டுக்கள் விளையாடுவதுண்டு. இதில் எனக்கு மிகவும் ஆர்வமும் உற்சாகமும் உண்டு. மேலும் இவைகளில் எல்லாம் போட்டிக்காக நடத்தப்படும் காலங்களில் நானே முதற் பரிசும் பெறுவேன். இந்த விதமாக எல்லா வகையிலும் தேர்ச்சி பெற்று ஒரு நாகரீக மங்கையாய் விளங்கி வந்தேன். கண்டவர் கண்கவர் வனப்புடன் உருண்டு திரண்ட அங்க அமைப்புடன் கூடிய சரீரக் கட்டும், முகப் பொலி வும் புன்னகையுடனும் கூடிய என்னைக் கண்டு என்னுடன் கூடிக் குலாவி வார்த்தையாடி, ஆடிப் பாடி யிருக்க என் தோழிகட்கு அதிகப் பிரியம். நானும் அவர்களை அன்புடன் நேசித்து வந்தேன்.

அவர்களுடைய தூண்டுதலின் பேரில் சென்னையில் ஜார்ஜ டவுன் லேடீஸ் கிளப்பில் (Ladies Club) ஒரு மெம்பராகச் சேர்ந் தேன். அங்குச் சேர்ந்தது முதல் அநேகமாக நாள்தோறும் கிளப் பிற்குப் போய் வருவேன். அங்கு அதிக நேரம் தாமதிக்கவும் என் மனம் இடங் கொடுக்காது. ஏனெனில் என் துணைவரை விட்டுப் பிரிய நேரிடுகிறதே என்ற எண்ணம். அவ்வளவு பிரேமை அவர் பேரில் எனக்கு. என்னைக் கொண்டுவந்து கிளப்பில் விட்டுவிட்டுச் சென்று, எங்கேயாவது ஒரு மணி நேரம் பொழுது போக்கிவிட்டு உடனே திரும்ப அழைத்துப் போக வந்துவிடுவார். கொஞ்ச நேரம் வெளியே சென்று உலாத்திவிட்டு இரவு 8 மணிக்கெல்லாம் வீடு சென்று விடுவோம்.

கிளப்பில் ஒரு வாரத்துக் கொருமுறை நடக்கும் பேச்சுப் போட்டியிலும் கலந்து கொள்வேன். நான் சொல்லும் அரிய விஷயங்களைப்பற்றி ஆவலாய்க் கேட்ட என் தோழிகள், எனக்கு மாலையிட்டு, எனக்கு மென்மேலும் ஊக்க முண்டாகும்படி

உற்சாகம் ஊட்டி வந்தனர். அடுத்த தேர்தலில் நானே அந்தக் கிளப்பிற்குத் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டேன். என்னால் பல சீர்திருத்தங்கள் அடைந்தது அந்தச் சங்கம். வாரந் தவறாமல் பிரசங்கம், பெரியோர்களுக்கு உபசரணை, வெளியூர்களிலிருந்து வரும் தலைவர்கட்கு வரவேற்பு, வருடம் மும்முறையாவது கிளப்பில் மெம்பர்களால் நடிக்கப்படும் நாடகம் முதலியவை எல்லாம் தவறாமல் நடந்துவர ஏற்பாடுகள் சிறப்புறச் செய்தேன். இவைகளை எல்லாம் கேட்டால் என் மாமாவிற்கு உண்டாகும் ஆநந்தத்திற்கு அளவே இருக்காது.

இதோடல்லாமல் என் மாமாவும் தான் செல்லும் கிளப்பிற்கும் பொது இடங்கட்கும் என்னை அழைத்துக் கொண்டுச் செல்வார். அவருடைய ஆப்த நண்பர்கட்கெல்லாம் என்னை அறிமுகப்படுத்தி வைப்பார். இவ்வளவு அழகுடன் விளங்கும் நான் சமரசமாக எல்லோருடனும் பழகும்போது பலர் என்னிடம் ஒருவித மனப்பான்மை கொள்வார்கள் என்பதிற் சந்தேகமில்லை. என்னுடன் சில வார்த்தைகள் பேசினால் போதுமென்று சில நண்பர்கள் முனைந்து வருவார்கள். இதை எல்லாம் விரிக்கிற் பெருகும். இப்படியான உல்லாச வாழ்க்கையில் என் பள்ளி வாழ்க்கை முடிவடையுங் காலம் நெருங்கியது.

படிப்பும் முடிந்தது. ஆறாவது பாரம் படித்து முடித்துப் பத்திரச் சீட்டும் பெற்று எந்தவேலையு மில்லாமல் வீட்டில் உட்கார்ந்தேன். இந்தக் காலத்திலும் என் தாய் எனக்குப் பூரண சுதந்திரம் கொடுத்திருந்தாள். என் மாமாகூட பீச்சு, சினிமா, நாடகம் முதலிய காட்சிகளைப் பார்க்கக் கூடச் செல்லுவேன். எனக்கு வேண்டுமான உடை முதலிய சாமான்கள் வாங்குவதற்கும் இருவருமே செல்லுவோம். இம்மாதிரி யெல்லாம் வெளியில் செல்வதற்கு என் தாய் யாதொரு விதமான தடை யுத்தரவும் விதிக்கவில்லை.

ஓர் நாள் என் தாய் தன் அறையில் தனியாக உட்கார்ந்து ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருப்பவள்போல் காணப்பட்டாள்.

என் மாமா பேரிட்டுப் பின்னிய கைக்குட்டையைத் தாயாரிடம் காட்டிவிட்டு, அவருக்குக் கொடுக்கலாமென்று நினைத்து, ஆடிப் பாடிக்கொண்டு அன்னையைத் தேடிச் சென்றேன்.

எனக்கிருந்த ஆநந்தமெல்லாம் ஆடிக் காற்றிலகப்பட்ட பஞ்சின் கதி ஆனது.

நான்:—அம்மா என்ன இன்று ஒரு மாதிரியாக இருக்கிறாயே? என்னைக் கண்டவுடன் உன் முகத்தில் காணும் களிப்பெங்கே?

தாய்:—இல்லையடி கண்ணு. ஒன்றுமில்லை. ஒரு காரியத்தை நினைத்து ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருந்தேன். அதுதான் நீ வந்ததைக்கூடக் கவனிக்கவில்லை.

நான்:—ஓகோ! அப்படியா சமாச்சாரம். சரிதான். எனக்குக் கூடத் தெரியுமே நீ நினைப்பது. நீ சொல்லுகிறாயா? நான் சொல்லட்டுமா? நானே சொல்கிறேன். என் ஜோஸ்யம் சரியா யென்று பார்.

தாய்:—என் செல்வமே. நீ அதிக புத்திசாலி யாயிற்றே. எங்கே சொல் கேட்கிறேன்.

நான்:—ஹூ....ஹூ....மாட்டேன் வெட்கமா யிருக்கு.

தாய்:—பரவாயில்லை. இங்கே யாருமில்லை. கூச்சமில்லாமல் சொல் என்ன வெட்கம் படித்த பெண்ணுக்கு?

நான்:—நீ....எனக்குக் கல்—யா—ணம் செய்ய மாப்பிள்ளை யைப்பற்றி நினைக்கிரு யென்று தெரிகிறது. எப்படி?

தாய்:—சரியாகச் சொன்னயே. நீ யாரைக் கலியாணம் செய்து கொள்வாய்?

நான்:—யாரையா? சரியாப் போச்சு. நல்ல கேள்வி கேட்டே. சந்தேகமா உனக்கு? நம்ம....மா....மா.

பள்ளியிலிருந்து வெகு ஆவலுடன் என்னைப் பார்க்க ஓடிவந்த என் மாமா நாங்கள் இருவரும் பேசிக் கொள்வதைக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, விஷயம் தெரிந்து 'ஆ....மா நான்தான் மாப்பிள்ளை தயாராக யிருக்கிறேனே' என்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தார். என்னதான் இருந்தாலும் அவரைக் கண்டதும் கூச்சப்பட்டு நான் ஓடி ஒளிந்துக் கொண்டேன். என் தாயாரும் தன் தம்பியிடம் தகவலறிவித்து ஆவன செய்வதற்கு ஆலோசனை கேட்டு முடிவு செய்தாள்.

சில நாட்களுக்குப் பின் எங்கள் வீட்டில் பிரம்மாண்டமான பந்தல் போடப்பட்டது. வாழை கமுகு, ஈச்சை, தென்னை, முதலிய இலை காய் முதலியவற்றுல் பந்தல் அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. வானத்தின் நட்சத்திரக் கூட்டம்போல எலக்ட்ரிக் லைட்டுகள் இணைக்கப் பட்டிருந்தன. ஓர் நல்ல சுபதினத்தில் ஏராளமான கார்கள் எங்கள் வீட்டு வாசலில் யானைக் கூட்டம்போல் வந்து நின்றன. எங்கள் பந்து மித்திரர் எல்லாம் வீட்டில் நிரம்பினர். பாண்டு வாத்தியம் மேள வாத்தியம் இரண்டும் போட்டியிட்டு இடி முழக்கம் போன்று ஒலித்தன. சித்திர வேலைப் பாடுகளுடன் கூடி அலங்கரிக்கப்பட்ட மண அறையில் நானும் மாமாவும் உட்கார்ந்திருந்தோம். கிட்டியது குறித்த நேரம். ஆரம்பித்தார் சாஸ்திரிகள் தன் வேலையை. மாமாவும் கையில் எடுத்தார் மாங்கல்யத்தை. கட்டினுர் என் கழுத்தில். மகிழ்ந்தோம் மணமக்களாகி. களிப்

புற்றுள் கடனை நிறைவேற்றிய தாய். ஆசீர்வதித்தனர் எல்லோரும். உலகமறியக் கணவனும் மனைவியுமாக வேண்டிய காரியம் இனிது முடிந்தது.

அன்று அறுசுவைப் பதார்த்தம் பழவர்க்கங்களுடன் திருப்திகர மாக எல்லோருக்கும் விருந்து நடத்தப்பட்டது. வீட்டில் பெரியவர் கள் யாருமே இல்லாததால், என் தாய்தான் எல்லாவற்றையும் தானே நேரில் கவனித்து வந்தாள். என் பள்ளித் தோழிகள் ஏராள மான பேர் வந்திருந்தனர். அவர்களை எல்லாம் கவனிப்பது என் பொறுப்பாகி விட்டது. கேட்கவா வேண்டும். அந்தக் காலமாகிய இரண்டு மூன்று நாட்கள் அவர்கள் கையில் அகப்பட்டுக்கொண்டு, அவர்கள் கேலிப் பேச்சுக்களுக்காளாகி நான் பட்டபாடு போதும் போதும் என்றாகி விட்டது. என் மாமா அவர்கள் அவருடைய நண்பர்கள் கூட்டத்தோடு உல்லாசமாய் வார்த்தையாடிப் பொழுது போக்கிக் கொண்டிருந்தார். அவர் வேறு விவகாரங்களில் கலந்து கொள்ள அவகாசமில்லை. அவரது நண்பர்களை உபசரிக்கவே சரியா யிருந்தது. ஆனால், நாங்களிருவரும் புதுப் பெண் புதுமாப்பிள்ளை யாகவே விளங்கினோம். அதற்கு முன்னிருந்தபடி அவ்வளவு நெருங்கிப் பழகி உறவாடிக் கொள்ளாமல், ஒருவரை யொருவர் அதிகம் தெரிந்துக் கொள்ளாதவர்கள் மாதிரியே நடந்துக் கொண் டோம்.

அவர் எனக்கு மணாளராக மாலை யிட்டது முதல், அந்த இரண்டு மூன்று நாட்கள் வெட்கமின்றிச் சர்வ சாதாரணமாய் அவரிடம் பேச என் மனம் துணியவில்லை.

விவாக தினத்தன்று மாலை பெரிய இன்னிசைக் கச்சேரி ஒன்று நடந்தது. இதற்கு எங்கள் உற்றார் உறவினர் நண்பர் முதலியோர் வந்ததுமன்றி பொது மக்கள் எல்லோரும் விஜயம் செய்து ஆநந்தித்தனர். என் தாயின் விருப்பப்படி இரவு ஊர்வலமும் நடத்தப்பட்டது. இதில் எங்கள் இருவருக்கும் அவ்வளவு பிடித்த மில்லாவிட்டாலும் என் தாயினுடைய பிடிவாதத்திற்காகச் செய்யப் பட்டது. ஏராளமான பொருட் செலவில் நடத்துவிக்கப்பட்ட சிறந்த பெரிய ஊர்வலம் எங்களுடையதே.

கல்யாணத்திற்கு வந்தவர்கள் எல்லாம் இரண்டு மூன்று நாட்கள் தங்கிவிட்டுத் தங்கள் தங்கள் இருப்பிடம் சேர்ந்தனர். வந்தவர்களைத் தக்க உபசரணையுடன் அனுப்பி வைத்தாள் என் தாய். எல்லோரும் எங்களை மனமாற வாழ்த்திச் சென்றனர். மனமொத்த தம்பதிகளென மகிழ்ந்தனர் எங்கள் இனத்தார்.

(தொடரும்)

# ஜோஸ்யர்வாள்!

[பரதூர் வி. சாமிநாத பிள்ளை, சிதம்பரம்]

நான் பிறந்த வேளையோ, லக்னமோ தெரியவில்லை. எக் காரியம் நினைத்தாலும், செய்தாலும் முதலில் அப சகுனமாகிப் பின்தான் காரியம் கைகூடும். பரீக்ஷைக்குப் போனால் படித்த கேள்வி வராது; வேலை சிபார்சுக்குத் தெரிந்தவரிடம் போனால் அப்பொழுது அவர் ஊரிலிருக்க மாட்டார்; இருந்தாலும் பார்க்க முடிவதில்லை; பார்த்தாலும் சரியான பதில் எதிர் பார்க்க முடியாது. வேலையில்லா திண்டாட்டத்தால் போகாத விடமில்லை; அலையாத நேரமில்லை; கும்பிடாத தெய்வமில்லை, சுற்றாத கோயில் இல்லை, பார்க்காத கச்சேரியில்லை, கம்பேனி இல்லை, ஆபீஸில்லை. எங்கும் 'நோ வேக்கன்ஸி' என்ற தக்க மரியாதையான பதில்தான் வெகுமதி கிடைத்தது. கலியாணத்திற்கு என் தாயார் பெண் பார்த்து நிச்சயப் படுத்தினால் திடீரென்று பெண்ணிற்குக் கிராக்கி யாய்விடும். லக்னமும் நாளும் தவறிவிடும். ஊருக்குப் பிரயாண மானால் இடியும், மின்னலும், காற்று மழையும் திடீரென்று என் னுடன் ஓடிவரும். நான் பல நண்பருடன் சேர்ந்து பழகினது மில்லை; நானுண்டு, பள்ளிக்கூட முண்டு; என் அறை உண்டு; என் புத்தகமுண்டு. இதனால் கோழைத்தனம், லஜ்ஜை, சங்கோசம் முதலிய அசட்டுத்தனம் குடிகொண்டு குடத்திற்குள் விளக்கு எறி வதுபோல் அறிவைப் பிரகாசிக்க முடியாமல் செய்துவிட்டது. ஆஹா! என்ன துர்ப்பாக்கியசாலி நான்! என் தகப்பனாரோ பெரிய கணித ஜோதிடர். ஆனால் சொந்த ஜோஸ்யம் பலிக்குமா என்ற எண்ணம் எனக்கு! உலகத்தில் ஜோஸ்யர் வீட்டில்தான் துக்கம் அதிகம். வைத்தியர் வீட்டில் சாவு அதிகம். சாஸ்திரிகள் வீட்டில் அமங்கலிகள் அமோகம்.

இவ்விதத் துர்ப்பாக்கியத்தால் நான் ஜோஸ்யர்களைப் பார்த்துச் சந்திக்கும் நிலைமை ஏற்பட்டது. அவர்கள் பலனால் எனக்கு உள்ள பலமும் இல்லாமல் போயிற்று. ஓர்நாள் பழனிக்குச் சென்று ஆண்டவனை ஆனந்தமாய்த் தரிசனை செய்துகொண்டு, களைப்பினு லும், மனவருத்தத்தாலும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்தேன். அப் பொழுது ஒருவர் கையில் ஏட்டுச் சுவடியும், விபூதி ருத்ராக்ஷதாரி யாய் என் அருகில் உட்கார்ந்து என்னை விசாரித்தார். தான் பெரிய பெரிய சாஸ்திரம் படித்த புலவர், ஞானி யென்றும், பெரிய ஜோஸ்யர் என்றும், மற்றச் சோதிடர்களெல்லாம் தன்னிடம் பிச்சை எடுக்க வேண்டுமென்றும், கடவுள் அருள் பெற்றவர் என்றும், நல்ல வைத்தியம், வேதை முதலிய தொழிலில் கைதேர்ந் தவரென்றும் என்னிடம் ஓர் சிறிய பிரசங்கம் செய்தார்.

நான்:—ஐயா ஜோஸ்யர்வாள்? நீர் பண்டிதர் என்று சொல்லுகிறீர். இந்தப் பாட்டை நீர் எங்கு படித்திருக்கிறீர்?

'மன்னவர்க் கழகு சொன்னதை மறுத்தல்
சின்னவர்க் கழகு சிறுபொருள் திருடல்
மந்திரிக் கழகு வந்ததைச் சுருட்டல்
அந்தணர்க் கழகு தொந்தி நிரப்புதல்.'

இதைக் கேட்டதும் அவர் பேந்தப் பேந்த விழித்தார். சுற்றுமுற்றும் பார்த்தார். சிறிது சிந்தித்தார். இந்தப் பாட்டை இதுவரை நான் கேட்டதுமில்லை, படித்ததுமில்லை யென்று ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்துத் தலையைத் தொங்கவிட்டார்.

நான்:—ஐயா ஜோஸ்யர்வாள்? போதும் போதும். உமது கலைஞானம், பாண்டித்யம். பிள்ளையார் குட்டிக்கும் போதே இப்படி இருக்கிறது. தெரியாதான்னு? அந்த அம்மையார் கிழவியின் புஸ்தகத்தைக்கூட நீர் படிக்கவில்லை போலும் என்று நான் ஒரு கப்ஸா விட்டேன். அது இருக்கட்டும். ஜோஸ்யர்வாள்! நான் நினைத்திருக்கும் விஷயம் கைகூடுமா? ஓர் ஆருடம் சொல்லும் பார்ப்போம் என்றேன்.

ஜோஸ்யர்:—மாதங்களின் பெயர் ஒன்று சொல்லுங்கள்.

நான்:—'....பிறந்தால் வழி பிறக்கும் மாதம்' என்றேன்.

ஜோஸ்யருக்கு அஸ்தியில் சுரம் கண்டுவிட்டது. ஏது சங்கடத்தில் மாட்டிக் கொண்டோமென்று விழித்தார். மாதம் ஒன்று கேட்டால் என்னமோ சொல்கிறீர்களே? என்றார்.

நான்:—ஐயா! வரப்பிரசாதம் பெற்ற ஜோஸ்யர்வாள்! தை பிறந்தால் வழிபிறக்கும் என்று எல்லோருக்கும் தெரிந்த மாதமாயிற்றே?

ஜோ:—(புன் சிரிப்புடன்) அப்படியா! நல்லதிருக்கட்டும். (யோசனை செய்து பார்த்துவிட்டு) நீங்கள் நினைத்த காரியம் பலிப்பது சந்தேகம்.

நான்:—நான் வேறொன்றையும் நினைக்கவில்லை. உம்முடைய ஜோஸ்யம் பலிக்குமா என்று கேட்டதற்கு நீரே பலிப்பது கஷ்டமென்கிறீர்!

ஜோ:—இல்லை! இல்லை!! கொஞ்சம் கணக்குத் தவறிவிட்டது. நான் கேட்டவுடனே மாதம் சொல்லவில்லை. அதனால் கெட்டது. 12ல் குறைய ஓர் எண் சொல்லுங்கள்?

நா:—மூன்றே முக்கால்.

ஜோ:—நாண் தாக்ஷண்யத்திற்காகச் சொல்லுவதாக நினைக்க வேண்டாம். காரியம் கட்டாயம் கைகூடும். நிச்சயம்.

நா:—எதைப்பற்றி?

ஜோ:—ஒரு பொருளைப்பற்றி அல்லது ஒரு ஜீவனைப்பற்றி.

நா:—பேஷ்! பலே பேஷ்!! நன்று! நன்று!! உலகத்தில் இந்த இரண்டு வார்த்தையில் எல்லாம் அடங்கிவிட்டது. ஜோசியர் வாள் நெல்லுக்குள் அரிசி இருக்கு என்று சொல்லிவிட்டீர். பெரிய அருள் பிரசாதம் பெற்ற பித்தரே! நீர் ஆருடம் சொன்னது போதும்.

ஜோ:—நான் ஒரு பெரிய சித்தரை அடுத்து அவருடைய அருளால் ஒளஷதங்கள் கற்றறிந்திருக்கிறேன். நான் படிக்காத சாஸ்திரமே இல்லை.

நா:—உமக்கு வியாதியைச் சொஸ்தப்படுத்த மருந்து தெரியுமா? அதிகப்படுத்த மருந்து தெரியுமா?

ஜோசி:—என்ன! என்னைப்போலொத்த பெரியவாளை யெல்லாம் இப்படிக் கேட்கலாமா?

நா:—அப்படியானால்—.

'தலைவலி வருமே யாகில் தடியடி தரவே ஓடும்
நிலைகெடு மொருந் தோன்றில் நீங்கிடும் வெல்ல முண்ணக்
கண்வலி விரைவி லேகும் கள்ளியின் பாலை யூட்டில்
புண்களில் தணலைக் காட்டில் பூவென உதிர்ந்து போகும்
காதுநோய் கடுகி யோடும் காய்ச்சிய யிரும்பை யூற்றில்
சூதுக ளில்லை யப்பா! சோதனைசெய்து பாரே!'

ஜோ:—நான் ஜோஸ்யம் சொன்னால் நீங்கள் ஹாஸ்யம் செய்கிறீர்கள். வைத்தியம் தெரியுமென்றால் என்னைப் பைத்தியமாக்குகிறீர்கள். பெரிய பெரிய நூல்களெல்லாம் தெரியுமென்றால் என்னை அடிமுட்டாளாக்குகிறீர்கள். என் பிழைப்பு அப்படி ஆயிற்று. உங்களைச் சொல்வதால் பலனென்ன? கலிகாலம் இது. என்று சொல்லிவிட்டு மெள்ள நழுவ ஆரம்பித்து, தான் தப்பினது தம்பிரான் புண்ணியமென்று ஓட்டம் பிடித்தார்.

---

நாடகம் பார்க்கப்போன இரு நண்பர்களில் ஒருவர்:—கதாநாயகி அவ்வளவு பொருத்தமாக இல்லை. சோபிக்கவில்லை.

மற்றவர்:—அவள் என் மனைவி சார்.

ஒருவர்:—அவளைப்பற்றியதல்ல குற்றம். கதையே ரொம்ப மோசம்.

மற்றவர்:—கதாசிரியனே நான் சார். —T. லோகநாதன்




சர்க்கஸ் மானேஜர்:—என்னய்யா நீர் செய்த பெஞ்சுகளெல்லாம் ஒரே ஆட்டமாக இருக்கிறதே.

ஆசாரி:—அப்பத்தான் ஆட்டம் பார்க்க வந்தவர்கள் நல்ல ஆட்டமா யிருக்கிறது என்பார்கள். —ஆட்டக்காரன்

உபாத்தியாயர்:—அட மடையா! உன்னைப்போலிருக்கும் போது அந்தக் காலத்தில், நான் எப்படிப் படிப்பேன் தெரியுமா?

மாணவன்:—ஆமாம் சார்! அப்போதைய தங்கள் வாத்தியாருக்கும் இப்போது எனக்கிருக்கும் வாத்தியாருக்கும் ரொம்ப வித்யாசம். —விழுப்புரம், S. T. ஜோசப்

உபாத்தியாயர்:—சுத்த மடையன்! 100-ஐ 20-ஆல் பெருக்கச் சொன்னால் அதிலும் பிசகா?

மாணவன்:—இல்லை சார். ஒரு வேளை 20-ஐ 100-ஆல் பெருக்கியிருப்பேன். அதுதான் பிசகா யிருக்கிறது.

—A. A. சிவராமகிருஷ்ணன்

பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலுள்ள கடிகாரத்தைப் பார்த்த ஒருவர்,

ஏனப்பா? இது சரியான மணிதானே காட்டுகிறது.

பைத்தியக்காரன்:—சரியா யிருந்தால் ஏன் இவ்விடம் வந்திருக்கிறது. —E. S. ராமநாதன்

ஆங்கிலேயர்:—எங்கள் ராஜ்யத்தில் சூரியன் அஸ்தமிப்பதே கிடையாது.

அமெரிக்கன்:—அந்த அழகான காட்சி உங்களுக்குப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. —S. ரத்தினம், மதுரை

புருஷன்:—நீ அவனைக் 'காதலரே' என்று கூப்பிட்டாயாமே?

மனைவி:—ஆம்! ஏனெனில் அவர் பெயர் எனக்குத் தெரியவில்லையே? —M. A. M. D. நாகூர்

வாத்தியார்:—பரதேசிக்கும் கடன்காரனுக்கும் வித்யாசமென்ன?

பையன்:—இருவரும் திரும்பத் திரும்ப வந்து தொந்தரவு செய்பவர்கள் தான். —M. A. M. D. நாகூர்

டாக்டர் சேகர்:—ஹலோ மிஸ்டர் ராமு! எங்கே வந்தீர்கள்?
டாக்டர் ராமு:—உங்களிடம்தான். எனக்குத் தலைவலி.
டாக்டர் சேகர்:—நீங்களே டாக்டராச்சே.
டாக்டர் ராமு:—நான் பீஸ் (Fees) அதிகமாக வாங்குகிறவன்.
—V. S. P. கிருஷ்ணன், வேலூர்

புருஷன்:—ஏண்டி! குழந்தையைக் காற்றில் படுக்க வைத்திருக்கிறாயே. தாங்குமாடி? கம்பளி கொண்டுவந்து மேலே போடு.
மனைவி:—காற்றைத் தாங்காத குழந்தை கம்பளியைத் தாங்குமா?
—S. பெரியதுரை, பல்லடம்

ஜாலவித்தைக்காரன்:—என் கையிலுள்ள மிட்டாயை எந்த இடத்திற்கு வேண்டுமானாலும் போகச் சொல்வேன்.
ஒருவர்:—முதன் முதலில் அதை என் வாய்க்குள் போகச் சொல் பார்ப்போம்.
—G. R. ராஜன், குகை

மதனன்:—சுந்தரி நான் ஒரு வேலை யிடுகிறேன். செய்கிறாயா?
சுந்தரி:—என்ன செய்ய வேண்டும்?
மதனன்:—நான் ஒரு முத்தம் உன்னிடம் தருகிறேன். நான் வர நேரமாகுமாதலால், அதை என் காதலி சரஸாவிடம் கொடுத்துவிடு.
சுந்தரி:—நான் அங்கு போக நேரமாகும். எனக்கு முன்னாலேயே போகக் கூடிய அவளது நாயினிடம் கொடுத்தனுப்பி விடுங்கள்.
—V. K. சுப்பிரமணி

திருடன்:—அடியே! நேற்று நான் திருடி வந்த தாலி எங்கே?
மனைவி:—நீ போட்ட தாலி கெட்டுப் போயிடுத்துண்ணு அந்தத் தாலியைக் கழுத்திலே போட்டுக் கொண்டேன்.
திருடன்:—அதுக்குடையவன் பார்த்தால்? —V. ரத்தினசாமி

தாயார்:—கண்ணே! குழந்தாய் அந்தச் சுவற்றிலிருக்கும் படத்தைப் பார் எவ்வளவு அழகாக யிருக்கிறது?
குழந்தை:—அம்மா! அந்த மனிதன் மாத்திரம் கரடி போலிருக்கிறானே. சுவர் மாத்திரம் ஏனம்மா காடுமாதிரி யில்லை?
—M. வெங்கடாசலம்

ராமு:—(பக்கத்து வீட்டுக்காரரிடம்) சார்! எங்கப்பா உங்காத்து கிராமபோன் வாங்கிவரச் சொன்னா.
சேஷன்:—உங்காத்திலே பிளேட் வைக்கப் போறேளா?
ராமு:—இல்லை. எங்கப்பா தூங்கணுமாம்.
—M. P. பாலு, கரூர்

# இலங்கை

[தேவகோட்டை, ஸ்ரீ V. இராமநாதன்]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

கடந்த பல மாதங்களாக இப் பக்கங்களில் இலங்கையின் எழில் மிகு பல பாகங்களைப்பற்றி எழுதினேம். இன்னும் எழுத வேண்டிய சில பாகங்கள் எஞ்சி நிற்கின்றன. அதற்குள் ஆடி மாதத்தில் கொழும்பு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமியின் இரத மகோற்சவம் குறுக்கிடுவதால், அதனைப் பார்க்க ஆர்வமுள்ள சிலருக்காக இப்பொழுது இப் பக்கங்களை எழுதுகின்றேன்.

இவ்வருடம் ஆடி மாதம் பதின்மூன்றும் நாள் காலையில் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி, செட்டியார் தெருவிலுள்ள தமது திருக்கோயிலிலிருந்து இரதத்தில் ஆரோகணித்து, பக்த கோடிகள் புடைசூழத் திருவுலாக்கொண்டு, உபய கதிர்காமமென்று சொல்லப் பெறுகின்ற வெள்ளவத்தையை யடைந்து அங்குள்ள ஆலயத்தில் வீற்றிருந்து, அடியார்கள் செய்யும் அன்புப் பணிகளை ஏற்றருளுவார். அங்கிருந்து பதினூறும் திகதி மாலையில் மறுபடியும் தமது யதாஸ்தானத்தை நோக்கி முற்கூறிய விதமாகவே வந்தருளுவார்.

இத் திருவிழாவைக் கண்டு களிப்புறும் வண்ணம் எண்ணற்ற இந்து மக்கள் தமிழகத்திலிருந்து ஆண்டுதோறும் வந்து செல்கின்றனர். இந்த வகையில் இவர்களின் செலவில் பெரும் பகுதி இலங்கை அரசாங்கத்திற்கு வருமான மாகின்றதென்பதைக் கூற விரும்புகின்றேன். ரயில் கூலி ஒன்று; சாமான் வாங்கி அதன் கிரயத்துடன் ஒட்டிய தீர்வையைச் செலுத்துவது மற்றொன்று; மீண்டும் தாய் நாட்டிற்கு அந்தச் சாமான்களை எடுத்தேகும் காலத்தில் தலைமன்னாரில் கொடுக்கும் வரி இன்னொன்று; இவ்வாறாக எத்தனையோ வழிகளில் அரசாங்கத்திற்கு ஆதாயத்தைக் கொடுக்கின்றது இந்த ஆடி வேல் விழா! சென்ற வருஷத்தில் தமிழ் நாட்டுப் பணம் இந்த விழாக் காலத்தில் பதினாயிரக் கணக்கில் இலங்கையில் செலவிடப் பெற்றதாக அனுமானிக்கப் பெற்றது.

இதிருக்கட்டும். நீங்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருவதாக இருந்தால், இலங்கையிலுள்ள உங்கள் உற்றார் உறவினர்கள் உங்களுக்காக அனுமதிச் சீட்டுக்களை (Permits) வாங்கி யனுப்புதல் வேண்டும். அவைகளும் கிடைத்துப் பிரயாணமும் ஆரம்பித்துவிட்டால், ஊடே உள்ள மண்டபம் காம்பு (Mandapam Camp) உங்கள் கவனத்திற் குரியதாகும். அந்த இடத்தில் ரயில் வண்டி சுமார் அரை மணி நேரம் நிற்றல் கூடும். அந்தக் காலவரை

யரைக்குள் இரண்டாம் வகுப்பு, முதலாம் வகுப்புப் பிரயாணிகள் வண்டியிலிருந்து இறங்கி, டாக்டர் அரைக்குள் செல்ல வேண்டும். தங்களிடமுள்ள அனுமதிச் சீட்டுக்களை அவரிடம் காட்டவேண்டும். அசந்தர்ப்பத்தால் அனுமதிச் சீட்டுக்கள் இல்லாதவர்கள் பணப் பிணை கட்டியோ அல்லது சாதாரணமாகவோ டாக்டரின் உசிதத்தைப் பொருத்து விடைபெற்று வருதலும் இயலும். மத்தியில் டாக்டர் சோதனை எதற்கு? என்றால் 'இந்தியாவிலுள்ள தொத்து நோய்கள் இலங்கைக்குள் புகுந்து விடாமல் பாதுகாப்பதற்கு' என்று சொல்லுகிறார்கள். அது எவ்வளவு உண்மையோ அறியோம்! ஆனால், இலங்கை நோயற்ற பிரதேசமென்று எண்ணிவிட வேண்டாம்! நோய்க்குப் பிறப்பிடம் இலங்கை என்று சொன்னாலும் பொருந்தும். இன்னொரு விசேஷம்! இந்தியாவிலிருந்து இலங்கைக்குள் புகுமுன்பு சோதனை செய்து அனுப்புவதுபோல் இலங்கையிலிருந்து இந்தியாவிற்குள் செல்லும் பொழுது சோதிக்கப் பெறுவதில்லை. இந்தியர் எப்படிக் கெட்டால்தான் இலங்கையர்களுக்கென்ன? இதுபோன்ற பலவற்றை இன்றுதான் நிதர்சனமாகக் காண்கின்றோமே!

சரி; டாக்டரிடம் விடை பெற்றதும் அடுத்துள்ள அரையிலுள்ள குமாஸ்தாக்களிடம் செல்ல வேண்டும். அவர்கள் சில காகிதத் துண்டுகளைத் தருவார்கள். அப்பொழுதே இலங்கைக்கு வந்துவிட்டதாகக்கூட எண்ணிவிடலாம்; பிறகு எல்லாம் சுலபம்தான்.

ஒரு வேளை டாக்டர் அனுமதி அன்று கிடைக்கவில்லையென்றால், மண்டபம் காம்புக்குள் நுழைய வேண்டியதுதான். நுழைந்த பிறகு பல சடங்குகள் செய்வார்கள். முதலில் சோற்றுக்கு டிக்கட்டுகள் வாங்கிக் கொள்ள வேண்டும். பிறகு உங்கள் பெட்டிகளில் உள்ள துணிகளைப் புகை அரைக்குள் போட்டு எடுத்துத் தருவார்கள். குளிக்கச் சொல்லுவார்கள். குளித்தவுடன் உங்களிடம் பட்டு வஸ்திரமிருந்தால் எவ்வித ஆக்ஷேபணையுமின்றி அணிந்து கொள்ள விடுவார்கள். இல்லாவிட்டால் அவர்கள் தரும் 'டேஞ்ஜர் கலர்' வேஷ்டியை உடுத்திக் கொண்டுதான் ஆகவேண்டும். பிறகு எல்லோரையும் வரிசையாக நிற்க வைப்பார்கள். நீங்கள் கைகளை வரிசையாக நீட்டிக்கொண்டு நிற்கவேண்டும். ஒரு உத்தியோகஸ்தர் நீட்டப்பெற்றுள்ள கைகளில் ஒருவிதத் திரவத்தைத் தடவிக் கொண்டு வருவார். இன்னொருவர் கைகளில் துவாரம் (அம்மைப் பால் வைப்பார்) போட்டுக்கொண்டு வருவார். நின்ற நிலையிலேயே கைகளை நீட்டியவாறே சில நிமிஷ நேரம் நின்றாக வேண்டும். ஏற்கனவே அம்மைப் பால் வைக்கப்பெற்று, அதற்கு அத்தாக்ஷிக் கடிதமும் இருந்து தளிம்பும் நன்றாக இருந்தால், இங்கு இந்தச் சடங்கிற்கு இடமேற்படாது. அதுவும் மூன்று வருஷத்திற்குட்

பட்டதாக இருக்க வேண்டும். ஒருவாறு மண்டபம் காம்பிலேயே அம்மை குத்திக் கொள்ள வேண்டிய தேற்பட்டால், அங்கு அத்தாக்ஷிப்பத்திரம் பெற்றுக் கொள்வது நலம். பிற்பொழுதிற்கு உபயோகமாகு மல்லவா?

இதற்கு அடுத்த நிகழ்ச்சி,—நீங்கள் மற்றொரு இடத்திற்கு அழைத்துச் செல்லப் பெறுவீர்கள். அந்த இடத்திற்குள் நுழைந்த பிறகு, சுற்றியுள்ள கம்பிக் காம்பவுண்டின் கதவு பூட்டப் பெற்று விடும். நினைத்த மாத்திரத்தில் இனி வெளி வருதல் சாத்தியமாகாது.

அன்று மாலை ஆறு மணிக்கே இராச் சாப்பாடு போடப் பெறும். சாப்பாடென்றால் சாப்பாடுதான்! அதைப்பற்றி இதற்கு மேல் ஒன்றும் எழுதுவதற்கில்லை! மறுநாள் காலையில் உங்கள் இடத்திற்குப் பழைய டாக்டர் வருவார். தேகநிலை சரியாக இருந்தால் புறப்பட அனுமதித்து விடுவார். அவ்வாறு அனுமதிக்கப் பெற்றவர்கள் காலை பத்து மணிக்கு அதே போன்ற மற்றொரு கம்பிக் காம்பவுண்டிற்குள் அழைத்துச் செல்லப் பெறுவார்கள். அங்கு மத்தியானச் சோறு அப்பொழுதே போடப்பெறும். இந்தச் சமயத்தில் சாப்பாட்டு அதிகாரி,—ஒரு வெள்ளைக்காரன் சாப்பாட்டின் நிலையைப்பற்றி அறிந்துகொண்டு போக வருவான். இது சிறிப்பை விளைவிக்கும் சம்பவமாகும்! தமிழன் சாப்பாட்டைப்பற்றி வெள்ளைக்காரனுக்கென்ன தெரியப் போகின்றது? ஏதோ தன் கடனைக் கழிக்க வந்துச் செல்வான் போலும்!

இனி மூட்டை முடிச்சுக்களை எடுத்துக்கொண்டு இன்னொரு காம்பவுண்டுக்குள் செல்ல வேண்டும். அங்கு இலங்கைப் போலீஸ் ஒருவர் வந்து சோதித்து ரயிலுக்கு அனுப்புவார்.

இது பரியந்தம் எழுதிய எல்லாச் சடங்குகளும் மூன்றும் வகுப்புப் பிரயாணிகளுக்குக் கண்டிப்பாக உண்டு.

பொதுவாக, மண்டபம் காம்பு சுகாதாரத்திற்கு ஏற்ற இடம். இங்குத் தனித்த அறைகளு மிருக்கின்றன. பிரயாணிகள் அவைகளைக் கூலிக்கு எடுத்துக்கொண்டு மிருக்கலாம். என்றுலும், கட்டுப்பாடும் சட்டதிட்டங்களும் தளர்த்தப் பெறுவதில்லை. ஆதலால் எல்லா இடமும் நலமே.

இனி, கொழும்புக்கு வந்துவிட்டால் கை காட்டுவதென்று ஒன்று உண்டு. அதாவது வந்த பிரயாணிகள் குவாரண்டைன் கந்தோரில், வந்த அன்றும்,—பிறகு அந்த டாக்டர் குறிப்பிடும் சிலநாட்களிலும் மொத்தம் ஆறு ஏழு தடவை, கந்தோரில் சென்று கையெழுத்திட்டு வரவேண்டும். இதில் பிரயாணிகள் பிசகு செய்தால் அவர்களுக்காக அனுமதிச் சீட்டுக்களை எடுத்து அனுப்பியவர்கள் தொந்தரவிற்குள்ளாக நேரிடும். ஆகவே பார்த்துக் கொள்ளுங்கள்.

(தொடரும்)

தொடர் நாடகம்

# 'இந்திராபாய்'

[வி. ராஜரத்தினம்]

(உரிமை ஆசிரியருடையது)

[முன் நடந்த நாடகம்:—குடிகாரனை மோகனன் சங்கரக் குருக்கள் இல்லாத சமயம், அவர் மனைவி கமலாவுடன் சுகித்திருக்க வீட்டிற்குள் நுழைகிறான். அதுசமயம் குருக்கள் வந்து கதவைத் தட்டுகிறார். அவன் நண்பன் மதனனின் சூட்சியாலும், கமலாவின் சாதுர்யத்தாலும் தப்பி ஓடுகிறான்.]

## அங்கம் 2.

காலம்: காலை, பகல்.

இடம்: யமுனைக் கரை. பவானிதேவி கோவில், சுந்தரி வீடு.

நடர்: சந்திராசிங் ஓர் இளவரசன் (கதாநாயகன்.)
ராமன் பணியாள்.

இந்திராபாய் அக்பர் சக்ரவர்த்தியாரின், குதிரைப் படை வீரன் சர்தார்காலஞ் சென்ற சுந்தர்சிங் மகள் (கதாநாயகி.)

சுந்தரி தோழி.

[கோவிலைச் சுற்றிலுமுள்ள நந்தவனத்தில் பூத்திருந்த மல்லிகை, முல்லை, சண்பகம், ரோஜா முதலிய மலர்களின்மீது இளந் தென்றல் 'சலசல' வென்று பாய்ந்து செல்ல, எங்கும் நறுமணம் 'கமகம' வென்று வீச, கோவிலினுள் இடி முழக்கம் போன்ற மேள வாத்தியங்களின் ஓசையும், கோவிலின் முன் இளங் கன்னிகைகளின் கோலாட்டமும், திரள் திரளாகக் கோவிலினுள் நுழையும் ஒவ்வொருவருடைய மனதையும் உற்சாகப் படுத்தியபடி யிருந்தது.

அச்சமயம், அழகிய குதிரை பூட்டிய வண்டி சற்றுத் தூரத்தில் வந்து நிற்க; உள்ளிருந்து சுந்தரி இறங்கினாள். பின்னிறங்கிய இந்திரா இடது கையைச் சுந்தரியின் தோள் மீதூன்றிக் கோலாட்டத்தைக் கவனித்து நின்றாள்.

அதேசமயம், இவர்களுக்கு எதிரில் சற்றுத் தூரத்தில் ‘படபட’ வென்ற சப்தத்தோடு இரண்டு குதிரைகள் வேகமாக ஓடி வந்து நின்றன. அதன்மீதிருந்த சந்திரனும், ராமனும் கீழே குதித்து நின்றார்கள்.

எதிரில் தாதியின் தோளின்மீது கையூன்றி நிற்கும் இந்திராவைக் கண்டதும் கீழிறங்கி நின்ற,

சந்திரன்:—ஹா! அடே ராமா அதோ பார். என்ன பொருமை! என்ன அழகு! என்ன காம்பீரம்! ஊம்!........................

ராமன்:—ஓஹோ! சரிதான். கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதைதான்.

[என்று தலையசைக்க அச்சமயம் தற்செயலாய்த் திரும்பிய இந்திரா! எதிரில் தன்னையே பார்த்தபடி காம்பீரமாக நிற்கும் சந்திரனைக் கண்டதும், நாணமேலிட மதி மயங்கி தோழியின் தோள்மீது தலை சாய்த்துப் பெருமூச்சு விட்டாள். சுந்தரி திரும்பிப் பார்க்க எதிரில் நிற்கும் இளவரசனைக் கண்டு புன்சிரிப்புடன் இந்திராவின் தலையைத் தடவிக் கொடுத்தாள்.

அழகியைப் பார்த்தபடி அசைவற்று நிற்கும் சந்திரனைப் பார்த்து,]

ராமன்:—இளவரசே! இதென்ன விபரீதம்? கோவிலினுள்ளிருக்கும் அம்பாளைத் தரிசிக்கவந்த நீர், வெளியில் நிற்கும் இந்த அம்மாளைத் தரிசித்து அயர்ந்து விட்டீரே?

சந்திரன்:—போடா போ! அந்த அம்பாள் தரிசனம் இந்த அணங்கின் தரிசனத்தைவிட மேலென்று நினைத்தாய்?

அடே! ராமா! உருண்டு திறண்ட இவள் கைகால்களுக்குப் பொருத்தமா யமைந்துள்ள தங்கப் பதுமை போன்ற உடலைப் பார். கருத்தடர்ந்து சுருண்டு வளர்ந்திருக்கும் அக் காரிகையின் கூந்தலிடையே, வளர்பிறை மதியைப் பழிக்கும் வதனத்தில் யௌவனப் பருவ ஒளிர் சுடர்விட்டு ஜ்வலிப்பதைப் பார்.

அடடா! கோவைக் கனியொத்த அந்த இதழ்களிடையே பிரகாசிக்கும் முத்துப் பல் வரிசைகள் ஊம்........

இது மாத்திரமா? அடே ராமா! அநேக ஆயிர வருடம் அகோரத் தவமியற்றி அனந்தங் கோடி வரங்களைப் பெற்ற அம்

முனிவனும், கிட்டாமற்கிட்டிய அவ்வரங்களனைத்தையும் இவளுக்குப் பாத காணிக்கையாகச் சமர்ப்பித்து, இவளடிபணிந்து இவளுக்குக் குற்றவேல் செய்வானென்றால் நாம் எம்மாத்திரம்? அடே! ராமா? இவ்வணங்கு யார்?

ராமன்:—அரசே! நானுங்களை என்னமோ வென்றல்லவா வெண்ணி யிருந்தேன். இவ்வித வர்ணனைகளை எப்போ! எங்கே! யாரிடம் கற்றுக் கொண்டீர்கள் பலே! 'பெண்மையும் காதலும்' மனிதரை உய்விக்க வந்தவைகளே. அதுவும் உம்போன்ற காளைகள் தங்கள் கருத்திற்கிசைந்த கன்னிகைகள் கண்ணிற் பட்டதும் 'காதல்' ஸ்திரமாகிறது. இவளோ உமது பருவம், பதவி, அழகு முதலிய யாவற்றிற்கும் தகுதியானவளே. இவள் காலஞ் சென்ற சர்தார்—சுந்தர் சிங்கின் மகள் இந்திராபாய்.

சந்திரன்:—(ஆச்சர்யத்துடன்) ஹா! அப்படியா! அடே ராமா! நானென்ன செய்வேன்? இவளைக் கண்ட நிமிஷமே காதல் என் மனத்துள் கொழுந்து விட்டெரிய ஆரம்பித்து விட்டதே!

ராமன்:—அரசே! வென்னீரில் வீடு வெந்து விடாது. அம்பிகையினருளால் சீக்கிரமே உமதெண்ணம் நிறைவேறும். பூஜை நடக்கிறது. கோவிலினுள் போவோம் வாரும்.

[ராமன் முன்னடக்க, அழகியைப் பார்த்தபடி சந்திரன் அடிமேலடி வைத்துப் பின் நடந்தான். இவர்கள் சென்றதும், தலையை நிமிர்த்தித் தோழியின் கையைப் பிடித்த,]

இந்திரா:—சகியே! என் கண் வழியிற் பாய்ந்து, கருத்திற் கலந்து என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு சென்ற அவர் யார்?

சுந்தரி:—தேவி! அவரோ சகல சம்பன்னன். சுத்த வீரன். இளவரசன். சந்திராசிங்.

இந்திரா:—ஹா! அப்படியா?........ஊம்! (பெரு மூச்சு) என் எண்ணப்படி........நிறைவேறில் நான் பெரும் பாக்கியவதியே!

ஐயோ தோழி. நானென்ன செய்வேன். ஊம்!........முன்பின் யோசியாமல்........

சுந்தரி:—அம்மணீ! கவலைப்பட வேண்டாம்.

இந்திரா:—நேசி, க்ஷத்திரியப் பெண்களின் குலதர்மம், எவளொருவள் எவனொருவனைக் கனவிற் கண்டு கருதினாலும், நேரில் கண்டு நினைத்தாலும் அந் நிமிடந்துடங்கி அவனுக்கவள் உரித்தானவளாய் விடுகிறாளே! ஐயோ என் கதி என்னவாய் முடியுமோ?

அவ்வான் சிங்கத்தைக் கண்டதும், காதலால் மயங்கித் திகைப்புண்ட என் நீலவிழிகள், அத்தோள்களிலும் அவ் வகண்ட மார்பிலும் ஊடுருவிப் பாய்ந்து நிலை நின்று விட்டதே.

சுந்தரி:—அம்மணி. அம்பாள் கடாட்சம். உன்னெண்ணப்படி கூடிய சீக்கிரம் நடந்தேறும். வா, கோவிலினுள் போவோம்.

[என்று நடந்தார்கள் அன்று மாலை சுந்தரி வீட்டின் கூடத்துள் நுழைந்த,]

ராமன்:—சுந்தரி! சுந்தரி!!

[என்று கூப்பிட்டுக்கொண்டு நாற்காலியி லுட்கார்ந்தான். சப்தத்தைக் கேட்டுப் பின் புறமாக அடிமே லடிவைத்து வந்த சுந்தரி, ராமன் தலையில் மொட்டென்று ஓங்கிக் குட்ட, 'அப்பாடா' வென்று நாற்காலியோடு தரை யிற் சாய்ந்து எழுந்த ராமன் தலையைத் தடவினான்.]

சுந்தரி:—பாவம். குட்டுப் பலமாய் விழுந்து விட்டது. வலிக்கிற தாக்கும்.

ராமன்:—ஊஹூம், யார் சொன்னது? உன் குட்டுகளால் சொட்டையான தலைதானே! என் வலிக்கும்? (நாற்காலியி லுட்கார்ந்து) அடியே சுந்தரம்! அடாடா! எவ்வளவு பொருத்த மான பேர்? அழகுக்குத் தகுந்தாப்போல்.

சுந்தரி:—ஓய்! அந்தக் கதை யெல்லாம் கட்டிவையும் ஏது அத்தி பூத்தாப்போல் இந்தப் பக்கம்?

[என்றதும் ஹ—ஹ—ஹா! வென்று சிரித் துக் கால்மேல் கால் போட்டு ஆட்டியபடி,]

ராமன்:—ஊம்! ஏண்டி சுந்தரம்! நான் காரியமாகத்தான் வருவேனென்று தெரியுமோ இல்லையோ? ஊம்! அதுவும் ஆதாயத் தோடு. இதோ பார் சுந்தரி. ஒரு முக்கியமான காரியம். தெரிஞ் சுதா! காரியம் மாத்திரங் கைகூடிவிட்டால் அடடா! ஊம், சுந்தரி! என்ன சொல்றது போ? நம்ம ரெண்டு பேருக்கும்....கொள்ளைதான். சுந்தரம் இன்னொரு சமாசாரம். இதைக் கேள். நான் ஜோஸ்யம் பார்த்தேன். காரியம் உன்னால் கண்டிப்பாய் கைகூடுமாம்.

சுந்தரி:—அடே யப்பா! என்ன அப்படிப்பட்ட காரியம்?

ராமன்:—காரிய மிருக்குதே! சுந்தரம் அந்தக் காரியம் ஊம்!....அந்தக் காரியம்....ஊம்.

சுந்தரி:—என்னய்யா அது? ஊம்! ஊம்!! என்ற ராகம்.

ராமன்:—இல்லேடி சுந்தரம். அது காரியம்....ஊம்.

சுந்தரி:—அட சீ சனியனே. சீக்கிரஞ் சொல்லித் தொலே.

[என்றதும் முகத்தி லிடிக்க, ஹா! வென்று கன்னத்தைத் தடவியபடி எழுந்த]

ராமன்:—என்னடி? செவுத்தை இடிக்கிறமாதிரி இப்படி யெல்லாம் செய்தால் பார். நான் போய்விடுவேன்.

சுந்தரி:—அடடா! ஊம் அப்பால் எப்படியப்பா. போயேன். யாருக்கு நஷ்டமோ?

ராமன்:—ஆ! ஆ! சுந்தரம்! நான் சும்மா விளையாடினேன். ஆமாம். அந்தக் காரியத்தைச் சீக்கிரஞ் சொல்லி விட்டால் உனக்கு கோபம் தீபம்........

சுந்தரி:—உமது கதையும் வேண்டாம். என்னால் அந்தக் காரியமும் ஆகவேண்டாம்.

[என்று முகத்தைச் சுளித்துச் 'சடக்' கென்று திரும்ப, அவளே வழி மறித்து, மடியி லிருந்த பணப் பையை யெடுத்து ஆட்டிக் காட்டிய,]

ராமன்:—இந்தா! இதை வைத்துக் கொள்.

[என்று கொடுத்தான். முகமலர்ச்சி யுடன் அதை வாங்கிக் கொண்ட]

சுந்தரி:—மாமா! இப்போத்தான் சரி. அது என்ன காரியம்?

ராமன்:—அது ஒண்ணும் உனக்குப் பிரமாதமானதல்ல. பிரம்மா நினைத்தால் முடியாத துண்டா என்ன? காலையில் நானும் இளவரசனும் பவானி கோவிலுக்கு வந்திருந்தோமா? நீதான் பார்த்தாயே.

சுந்தரி:—ஆமாம்.

ராமன்:—அதுதான் ஆஸ்பிதம்.

சுந்தரி:—இதென்ன இது? கோவிலுக்கு வந்திருந்தால்?

ராமன்:—அதுதானே நானுஞ் சொல்றேன். கோவிலுக்கு வந்திருந்தோமா? அங்கே ஒருத்தரை யொருத்தர் பார்த்தோமா?

சுந்தரி:—பார்த்ததாலென்ன?

ராமன்:—ஊம். அதனாலே வந்த காரியந்தானே! இல்லாவிட்டால் ஒண்ணுமில்லையே!

சுந்தரி:—மாமா! நீங்க சொல்லுவதில் எனக்கு ஒண்ணுமே புரியவில்லே.

ராமன்:—இல்லேடி. நீ என்னைப் பார்த்தாய். நான் உன்னைப் பார்த்தேன். நாம் பழய சிநேகம். மேலும் சகஜம். புதுசு புதுசா ஒருவரை யொருவர் பார்த்தால் ஒரு விசேஷம் இருக்கத்தான் செய்யும். அதுவும், தக்க வயதும் அந்தஸ்துமுள்ள காளையும் கன்னியும். இளவரசர் இந்திராவைப் பார்த்தது முதல் ஒரே........

சுந்தரி:—ஓஹோ! அதுவா. சரி. அவளும் அதே கதிதான், ஒரு காரியஞ் செய். நான் நாளைக் காலே இந்திராவைப் பூங்காவிற் கழைத்து வந்து மல்லிகைச் சோலேயில் விட்டுவிட்டுக் குளக் கரையில் நிற்கிறேன். நீ இளவரசனை யழைத்து வந்து சோலேக்குள் ளனுப்பி விட்டு என்னிடம் வந்துவிடு. காதலரிருவரும் ஏகாந்தமாய்ச் சந்தித்து ஒருமைப் படட்டும்.

ராமன்:—ஹா! பேஷ். நல்ல யுக்தி. அப்படியே செய்வோம். நான் போய் வரட்டுமா?

சுந்தரி:—ஆஹா! பேஷா. இன்னம் ஏதாவது மடியிலிருந்தால் கொடுத்துவிட்டுப் போமே!

ராமன்:—ஏண்டி, இது நியாயமா? என்னைக் காலியாகவா போகச் சொல்றே. ஒரு முத்தமாகிலும்........

சுந்தரி:—சே! யார் அப்படிச் செய்வார்கள். இதைப் பெற்றுக் கொண்டு போம்.

[என்று பளாரென்று அவன் கன்னத்திலறைந்து சென்றுள்.] (தொடரும்)

---

ஆச்சரியம்! ஆச்சரியம்!!

நமது நாட்டில் சிறு வயதிலும், நடு வயதிலும் உள்ள அழகிய ஆடவர்களுக்கும் பெண்களுக்கும் தலேயில் மயிர் முளையாமல் வழுக்கையாய்க் காணப்படுகின்றனர். அத்தகையவர்களுக்கு 15 நாளில் வழுக்கையான இடத்தில் மயிர் முளைக்கச் செய்யலாம். இதற்குக் காரண்டி யளிக்கப்படும். மற்ற விபரம் எழுதித் தெரிந்துக் கொள்ளவும்.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியனுத முதலி வீதி, சென்னே.

நமது தொடர் கதை

# வனிதா அல்லது கொலையுண்ட காரிகை

[A. வாசிமலை]

(All rights reserved with the author)

[முன்னுல் நடந்தவை:—ராம்கிருஷ்ணனும் வனிதாவும் காதலர்கள். உறவினரே. பக்கத்தூரில் ஒரு நண்பர் வீட்டு விருந்திற்குப் போகத் தீர்மானித்தனர். ராமகிருஷ்ணனின் நண்பர்களான ரங்கனும் கோவிந்தனும் இது விஷயம் அறிந்து சூட்சியால் வனிதாவைக் காரில் அழைத்துச் செல்கின்றனர். விருந்திற்குச் செல்ல வனிதாவைத் தேடுகிருன். டிரைவர் மூலம் கார் திருடப்பட்டதாக அறிகிருன். வனிதாவின் பெற்ருேர்கள் பெண்ணைப் பற்றி ராமகிருஷ்ணனிடம் விசாரிக்கின்றனர். போலீசுக்குத் தகவல் அறிவிக்கப்பட்டது. 'வனிதா கொலை செய்யப் பட்டாள்' என்று தினசரிகளில் வெளியாகிறது. போலீசார் பல சாதனங்களின் மூலம் ராமகிருஷ்ணனே கொலையாளி என்று தீர்மானித்துத் தண்டிக்கின்றனர். தப்பறியும் துளசிதாஸ் மூலம் தந்திரமாகத் தப்புவிக்கப்படுகிருன். துளசிதாஸ் அவன் தன் அனுமதியின்றி எதுவும் செய்யாதபடி உறுதி பெற்ருர். நடந்தவற்றை விளக்கிக் கூறினுர். கீழப்பட்டியில் கோவிந்தனும் ரெங்கனும் மார்வாடிபோல் நடித்து வருகின்றனர். துளசிதாஸ் உதவியால் ராமகிருஷ்ணன் ஓர் கிழவன்போல் மாறுவேட மிடப்பட்டு இருந்து வருகிருன். மார்வாடிகள் இவனையும் இவன் இருப்பிடத்தையும் நன்கு தெரிந்து கொள்கின்றனர். ஓர் நாள் தந்திரமாக ராமகிருஷ்ணன் எதிரிகள் கையில் சிக்குகிருன். கொலை செய்யப்போகும் தருணம் துளசிதாஸ் காப்பாற்றுகிருர். இருவரும் தப்பி யோடும்போது எதிரிகளால் சுடப்பட்டுத் துளசிதாஸ் இறந்தார். ராமகிருஷ்ணன் எதிரிகளைக் கொல்லத் துணிந்து வருகிருன்.]

இதே சமயத்தில் ரெங்கநாதனும் கோவிந்தனும் ராமகிருஷ்ணன் குடியிருந்த வீட்டைப்போய்ப் பார்க்க, அங்கு ஒருவரு மில்லாமற் போகவே, ஒரு வேளை போலீஸ் ஸ்டேஷனுக்கே நேராகச் சென்று விட்டாரகளோ என்றெண்ணி, அவர்களை நடு வழியிலேயே சந்தித்து எப்படியாவது கொன்றுவிட வேண்டுமென்று, வாயுவேக மனோவேகமாகத் தங்கள் காரைச் செலுத்திக் கொண்டுச் சென்றனர். சிறிது தூரம் சென்றவுடன் அவர்கள் ஒரு சிறு ரஸ்தாவைக் கடந்து சென்றனர். அப்படிக் கடந்து செல்லும் பொழுது, அதே ரோட்டில் ஒரு மோட்டார் சைகிள் வந்துக் கொண்டிருக்கும் சப்தம் அவர்கள் காதில் விழுந்தது. உடனே அவர்கள் காரை ஓர் ஓரத்தில் நிறுத்திவிட்டு, இந்த அர்த்த ராத்திரி வேளையில் இப் பாதையில் வருபவன் யாரா யிருக்கலாமென்று பார்க்க எண்ணி, காரைத் திருப்பி ராமகிருஷ்ணன் வரும் ரோட்டின்

பக்கமாக நிறுத்தப் போனர்கள். அதற்குள் ராமகிருஷ்ணன் அதி வேகமாக வந்துக்கொண் டிருந்தவனுகையால், இவர்கள் காரைத் திருப்பி நிறுத்துவதற்குள் இவர்களையே கடந்து சென்று விட்டான். காரில் ராமகிருஷ்ணன் செல்வதைக் கண்ட அச்சதிகாரர்கள், 'அதோ ராமகிருஷ்ணன்! ராமகிருஷணன்தான்!' என்று சொல்லிக் கொண்டே அவனை விரட்டிச் சென்று, துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர். இப்பொழுதுதான் ராமகிருஷ்ணனுக்கு, 'எதையும் தீர ஆலோசித்துச் செய்' என்று துளஸிதாஸ் அடிக்கடி சொல்லும் வாக்கியம் நினைவிற்கு வந்தது. பாவம்! அவன் என்ன செய்வான்! அவனுக்கு இப்பொழுது இக் கொலைக் கஞ்சாதவர்களைக் கொல்லு முன்பு, தன் உயிரை யிழந்துவிட மனம் வரவில்லை. தான் துளஸிதாஸுக்குச் செய்துக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டி, அவர்களிடமிருந்து எப்படியாவது தப்பிச் சென்றுவிட வேண்டுமென்ற நோக்கத்துடன், மோட்டாரை அதிவிரைவாக வேறு பாதையில் செலுத்தினன். பயனில்லை. பின்னல் வந்தமோட்டார் தொடர்ந்து வந்துக்கொண்டே யிருந்தது. இப்பொழுது ராமகிருஷ்ணன் முன்னிலும் அதிவேகமாகக் காரைச் செலுத்தினன்.

காவேரியில் வெள்ளம் கரை புரண்டு ஓடிக்கொண்டிருந்தது. பின்னல் சென்ற கோவிந்தனும் ரெங்கநாதனும் சிறிது தூரம் சென்றவுடன் சைகிள் மோட்டார் சத்தத்தையே கேட்கவில்லை. ஆகவே, அவர்கள் காரைச் சடுதியில் நிறுத்திவிட்டு நாலாபக்கமும் பார்த்தனர். சைகிள் மோட்டார் எப்பக்கம் போகின்றது எனறு அறிந்துக்கொள்ள முடியவில்லை. ஒரு வேளை எங்காகிலும் மரத்தில் மோதுண்டு விழுந்து கிடப்பானென்று எண்ணித் திரும்பி வந்தனர். அவர்கள் அப்படி வந்துக்கொண்டிருக்கும் பொழுதே காவேரித் தண்ணீரில் மிகவும் பிரகாசமான ஒளி வீசிக்கொண் டிருப்பதைக் கண்டனர். உடனே காரை விட்டிறங்கி அருகில் சென்றுப் பார்க்க, அந்தோ பாவம்! ராமகிருஷ்ணன் ஏறிவந்த சைகிள் மோட்டார் ஒரு செடியில் சிக்குண்டு தண்ணீரில் பாதியும் மேட்டில் பாதியுமாகக் கிடந்தது. விளக்கு எரிந்துக்கொண்டே யிருந்தது. இருவருமாகச் சேர்ந்து அதைக் கரைக்கு இழுத்து வந்து பார்த்தனர். அதன் ஜாமான்கள் பூறுவும் நொருங்கி யிருந்தன. ராமகிருஷ்ணனைக் காணேம்! எனவே கோவிந்தன் ரெங்கநாதனைப் பார்த்து, 'நாம் அனுப்பி வைப்பதற்குள் அவள் காதலியே அவனை வந்துக் கூட்டிக் கொண்டு போய்விட்டாள் போலிருக்கிறது! பையன் தன் காதலியைத் தேடிப் போய்விட்டான்! சரி; இப்பொழுது ஒரு சனியன் தொலைந்துவிட்டது. இன்னுமொரு சனியனைக் காணேமே; அதற்கென்ன செய்வது?' என்ருன். அதற்கு ரெங்கநாதன், 'கோவிந்தா! வா நாம் இருவரும்போய் போலீஸ் ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் காத்

திருப்போம். அப்படி இவன் நண்பன் வந்துச் சொல்ல வந்தாலும் பார்த்துக் கொள்ளலாம். அல்லது அவன் முதலிலேயே போய்ச் சொல்லியிருந்தாலும் போலீஸ் ஸ்டேஷனில் கான்ஸ்டேபிள்களின் நடத்தையிலிருந்து தெரிந்துக் கொள்ளலாம்' என்று சொல்லவும் இருவரும் ஸ்டேஷனை நோக்கிச் சென்றனர். அங்குப் போய்ப் பார்க்க, ஸ்டேஷனில் யாரும் வந்து ஏதொரு விஷயமும் தெரிவித்ததாகவே புலப்படவில்லை. எனவே, இருவரும் வீடு திரும்பினர். வரும்பொழுதே இனிப் பழைய வீட்டிலிருந்தால் என்றைக்காவது ஆபத்து சம்பவிக்குமென்றும், ஆகையால் அதைவிட்டு வேறு இடம் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் தீர்மானித்தனர். பின்னும், துளஸிதாஸ் இன்னும் உயிரோடு இருக்கிறானா, இல்லையா என்பதை நிச்சமாய்த் தெரிந்துக்கொள்ள வேண்டுமென்றும் எண்ணினர். பின்பு, கோவிந்தன் 'இப்பொழுது ராமகிருஷ்ணன் எத்திக்கிலிருந்து வந்தானோ, அதே திசையை நோக்கி நாமும் சைக்கிள் மோட்டார் வந்த தடத்தைப் பார்த்துக்கொண்டே சென்றால், ஒரு வேளை துளஸிதாஸ் இருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்கலாம். அநேகமாக அவனே ரமணியால் சுடப்பட்டவனாகவுமிருக்கலாம். அவன் இப்பொழுது தன் ஜாகையில்தானிருக்க வேண்டும். ஒரு வேளை ஒரு வைத்தியரை அழைத்துக்கொண்டுப் போகவே தனியாக இப்பொழுது ராமகிருஷ்ணன் வந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்' என்றான். அப்படியே சைக்கிள் மோட்டார்வந்த தடத்தைப் பார்த்துக்கொண்டே சென்று, துளஸிதாசின் ஜாகையான பாழடைந்த வீட்டைக் கண்டு பிடித்து அதனுள் சென்றுப் பார்க்க, அங்கே துளஸிதாஸ் இறந்து கிடப்பதைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தனர். அதன் பின்பே அவர்கள் மனம் நிம்மதி யடைந்தது. உடனே அவ்விடத்தில் அதிக நேரம் தாமதித்தால் ஏதாவது விபரீதம் சம்பவித்தாலும் சம்பவிக்கலாமென்று திரும்பிவந்து விட்டனர். ஆனால், மறுநாள் சென்று அவர்கள் பார்த்த பொழுது பிணத்தைக் காணோம்! அவ்வீட்டிற்குப் பக்கத்தில் ஒரு இடத்தில் பிணம் புதைக்கப்பட் டிருப்பதற்கு வேண்டிய அறிகுறிகளிருக்கக் கண்டுத் திருப்தி யடைந்தனர். அதைப் பார்த்த அவர்கள் 'யாராகிலும் வழிப்போக்கர்கள் எடுத்துப் புதைத்திருக்கலாம்' என்று எண்ணிச் சென்று விட்டனர்.

இப்பொழுது அவர்கள் வனிதாவின் நகைகளிலிருந்து பெற்ற பணமெல்லாம் செலவழிந்து விட்டது. எனவே, அவர்கள் தங்கள் ஆசை நாயகி ரமணியையும் ஏமாற்றிவிட்டு, இருந்த சொற்ப ரூபாய்களையும் எடுத்துக்கொண்டு, கீழ்ப் பட்டியைவிட்டு நீங்கிச் சென்று விட்டனர். இனி அவர்களுக்கென்ன பயம்? உருமாறித் திரிய வேண்டிய அவசியமேயில்லை. தாராளமாக எங்கும் சஞ்சரிக்கலாம்.

ராமகிருஷ்ணனும் துளஸிதாஸனும் இறந்துவிட்ட பிறகு இவர்களை யார் கவனிக்கப் போகிறார்கள்? கீழ்ப்பட்டியி லிருந்தால் கடைசி காலம்வரை சேட்டுகள் போலவே யிருந்தாக வேண்டும். திடீரென்று தமிழர்களாக மாறிவிட்டால் கீழப்பட்டி ஜனங்கள் தான் நம்புவார்களா? ஆனால் இனிமேல் இருவரும் தனித்தனியே பிரிந்து சென்று வாழவேண்டுமென்றும், ஒருவன் அதிகப் பணம் சம்பாதித்தால் மற்றவனுக்கும் அதில் பங்கு கொடுத்து உதவிசெய்ய வேண்டுமென்றும் ஒப்பந்தம் செய்துகொண்டனர். நயவஞ்சகர்கள் வலையில் சிக்கிக் கஷ்டப்பட இன்னும் எத்தனை குடும்பங்கள் காத்துக்கொண்டிருக்கின்றனவோ? யாரால் சொல்ல முடியும்? இவ்வுலகத்திலுள்ள மனிதர்களை ஒரு வேளை அவர்கள் ஏமாற்றிவிடலாம். ஆனால் எங்கும் நிறைந்து விளங்கும் ஜோதியான பரமனை ஏமாற்ற, பாவங்களையே அணிகலமாகக் கொண்ட மனிதஜென்மங்களாகிய இவர்களால் எப்படி முடியும்?

## அத்தியாயம் 10.

ஸ்ரீநகர் என்பது தென்னாட்டிலுள்ள ஓர் அழகிய பெரிய கிராமம். இது மிகவும் வளப்பம் பொருந்திய ஊரும்கூட. இதில் பலவகைப்பட்ட ஜாதியார் வசித்து வந்தாலும், பிராமணரே அதிகமா யிருந்தனர். அவர்களில் சீனுவையர் என்று ஒருவரிருந்தார். அவர் ஒரு பெரிய மிராசுதார். இரண்டே குழந்தைகள். அவர்களில் மூத்தவன் பெயர் வெங்கடேசன். சீனுவையருக்குத் தன் மூத்த குமாரனுக்குக் கல்யாணம் செய்துவைத்துக் கண்குளிரக் காண வேண்டுமென்ற ஒரு அவா வெகு நாளாக இருந்து வந்தது. ஆனாலும் வரன் வீட்டார் பெண் தேடிப் போகக் கூடாதல்லவா?

இவருடைய மைத்துனர் ஒருவர் இருந்தார். அவர் இவரைக் காட்டிலும் செல்வம் அதிகமாகப் படைத்தவர். செல்வப் பெருக்கில் அவரை அவ்வூருக்கு இரண்டாவது அல்லது மூன்றாவதாகச் சொல்லலாம். இவருக்குப் பத்தே வயது நிரம்பப் பெற்ற ஒரே ஒரு புத்திரியுண்டு. பெயர் வனஜா. இவர் செல்வச் செருக்குப் பிடித்தவரா யிருந்தாலும், புத்திரியும் ஒரே பிள்ளையா யிருந்தாலும், தன் உயிரிருக்கும்போதே குழந்தைக்குக் கல்யாணம் முடித்துவிட வேண்டும் என்று அவள் பிறந்தது முதற்கொண்டு எண்ணிக்கொண்டிருந்தார்.

மைத்துனர்களிருவரும் ஒரே எண்ணமுடையவர்களா யிருக்கும்போது கல்யாணம் நடப்பதற்கு எவ்வளவு நாளாகப் போகிறது? கல்யாணப் பேச்சும் நடந்தது. வனஜாவின் பிதாவாகிய சுப்பையர் சீனுவையரிடம் சென்று, வெங்கடேசனுக்கும் வனஜா

வுக்கும் கல்யாணம் முடித்து வைத்துவிட வேண்டுமென்றும், வரதக்ஷிணை ரூபாய் பத்தாயிரம் சாந்தி முகூர்த்தத்தன்று தந்து விடுவதாகவும் கூறவே, பார்க்க வேண்டுமே சீனுவையருக்கு உண்டான ஆனந்தத்தை! மனதிற்குள்தான். வெளிக்கு வரதக்ஷிணை கொஞ்சமென்று முணுமுணுப்பவர் போலவே முகத்தை வைத்துக் கொண்டிருந்தார்.

முகூர்த்த நாளும் நிச்சயமாகிவிட்டது. பெண்ணுக்குத் தற்சமயம் வயது பத்து. மாப்பிள்ளைக்கு வயது பன்னிரெண்டு. இவர்களுக்குக் கல்யாணம் அவசியம் செய்து வைத்துத்தான் ஆக வேண்டுமோ? அது இல்லாமல்தான் அவர்கள் வீட்டில் அன்னம் கூட அருந்தாமல் சதா வருந்திக்கொண் டிருந்தனரோ? என்ன பதிலைக் காணோம்? நேயர்களே! பால்ய விவாஹத்தால் உண்டாகும் தீமைகளைப்பற்றி எத்தனையோ பெரியோர்கள் சொற்பொழிவு நிகழ்த்தி வருகின்றனர், வந்திருக்கின்றனர். நூல்களில் வரைந்தும் வைத்திருக்கின்றனர். அதற்கெல்லாம் அசையாத இந்த வைதீகக் குடும்பமா, நாம் சொல்வதைச் செவி சாய்த்துக் கேட்கப் போகின்றது? ஒருவனுக்குத் தன் புத்தி யிருக்க வேண்டும். அல்லது அவன் பிறர் கூறும் புத்திமதியையாவது கேட்டு நடக்க வேண்டும். இரண்டுமில்லாத இந்த வைதீகக் கிழப் பெருச்சாளிகளுக்கா நாம் சொல்வது காதில் விழப் போகிறது? அது இல்லை. நம் இந்தியா ஆதி காலத்தில் மற்றைய நாடுகள் எல்லாவற்றைக் காட்டிலும் நாகரீகத்தில் சிறந்து விளங்கிற்று என்று கூறி யிருக்கின்றார்களே; ஒருவேளை இப்படிப்பட்ட நாகரிகத்தில்தான் சிறந்து விளங்கிற்றோ? இல்லை; அப்படி யிருக்காது. இப்பால்ய விவாஹம் அக்காலத்திற்குப் பின்புதான் ஆதரிக்கப்பட்டு வந்திருக்க வேண்டும். இல்லாவிடில் புராணங்களில் யாருக்காவது பால்ய விவாஹம் நடந்ததாகக் கூறப்பட்டிருக்க வேண்டுமே. அக்காலத்தில் காதல் மணம், களவு மணம் என்றெல்லாம் இருந்திருக்கிறது. இக்காலத்தில்.........?

பால்ய விவாஹத்தின் பெருமையே பெருமை! பெண் ருதுவாவதற்கு முன்பே கல்யாணம். ருதுவான மறு வருஷத்தில் ஒரு குழந்தை. பதினைந்து அல்லது பதினாறு வயது நிரம்பப் பெற்ற ஒரு சிறுவன் ஒரு குழந்தைக்குத் தகப்பன். குழந்தை பிற்காலத்தில் எவ்வளவு பலம் படைத்தவனா யிருப்பான் என்பது சொல்ல வேண்டியதில்லை. சரியாய் முற்றாத ஒரு பிஞ்சுக்காயின் விதையை எடுத்துப் பூமியில் நட்டதும், அதிலிருந்து ஒரு செடி முளைக்கிறது. செடியும் நன்றாய் வளர்ந்து வருகிறது. ஆனால் பூப்பூத்துப் பிஞ்சு விட்டபொழுது, அது முற்றக் காயாக மாறுவதற்குள் அழுகிப் போய் விடுகிறது. இதே மாதிரிதான் மானிடப் பிறவிகளும். இந்தியாவிலுள்ளவர்களில் பெரும்பாலோர் இவ்வுலகில் அநேகநாள்

ஜீவித்திருப்பதில்லை. பால்ய விவாஹமும் அதற்கு ஒரு காரணம். இன்னும் சில பிரகஸ்பதிகளிருக்கின்றனர். அவர்கள் மேடைமீது நின்று பால்ய விவாஹம் உதவாதென்று பிரசங்கம் செய்வர். பள்ளிக்கூடங்களில் படிக்குங் காலத்து அங்கு நடக்கும் கூட்டங்களில் பால்ய விவாஹத்தால் உண்டாகும் தீமைகளைப்பற்றி வெகு நேரம் மேஜையின்மீது கையால் குத்தியும், காலால் தரையை உதைத்தும் பேசுவர். பள்ளிக்கூடம் விட்டு நீங்கிக் கல்யாணம் செய்துகொண்டு வாழும்பொழுது ஒரு குழந்தை பிறந்துவிட்டால், உடனே பிள்ளைக்குக் கல்யாணம் செய்து வைக்க வேண்டுமென்ற நினைவு வந்துவிடும். பிள்ளைக்கு மூன்று அல்லது நான்கு வயதாவதற்குள் கல்யாணம் நடந்துவிடும். நான் இதை நன்கு கண்டறிந்தே உங்களுக்குச் சொல்லுகிறேன். உதாரணமாக வக்கீல், பாரிஸ்டர் ஆகிய பெரிய உத்தியோகஸ்தர்களெல்லாம் கொஞ்சமாகப் படித்தவர்களா?

வனஜாவுக்கும் வெங்கடேசனுக்கும் விவாஹம் காலையில் நடக்கவிருந்தது. மேளவாத்தியத்தின் ஒலி காதைத் துளைத்தது. பந்தல் அலங்காரமெல்லாம் மிகவும் மெச்சத்தக்க வகையிலேயே அமைத்திருந்தது. வீட்டிலிருக்கும் பணத்திற்கு வேறு வேலை? மணியும் ஒன்பதானது. வெங்கடேசன் கையிலிருந்த மாங்கல்யமும் வனஜாவின் கழுத்தில் கட்டப்பட்டது. பின்பு வெங்கடேசனைப் புது மாப்பிள்ளை, புது மாப்பிள்ளை என்று கேலி செய்து அழவைத்த சிறுவர்களின் மேலும் சிறுமிகளின் மேலும் சீனுவையர் சீறி விழுந்ததைப் பார்க்க வேண்டுமே!

இரவில் விருந்து இனிதே முடிந்தது. அது முடிந்தவுடன் சுப்பையர், சீனுவையர், இன்னும் மற்ற இனபந்துக்கள் யாவரும் அமர்ந்து வெற்றிலை மெல்லத் தொடங்கினர். அப்பொழுது ராமன் என்ற இளைஞன் சுப்பையர் முகத்தையே பார்த்துக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தான். அவனுக்குச் சுமார் 27 வயதிருக்கலாம். தாடி மீசை ஆகியவற்றிற்கெல்லாம் குறைவில்லை. அவன் ஒரு நித்திய பிரமச்சாரிபோல் தோன்றினன். கையில் ஜெபமாலை யிருந்தது. தூயவெண்மையான வஸ்திர மணிந்திருந்தான்.

வெகு நேரமாகத் தன் முகத்தையே அவ்விளைஞன் பார்த்துக் கண்ணீர் விடுவதைக் கண்ட சுப்பையர், 'எல்லோரும் சந்தோஷமாயிருக்கும்பொழுது நீர்மட்டும் ஏங்காணும் கண்ணீர்விடுரீர்? இது கல்யாண வீடென்று உமக்குத் தெரியாதா?' என்ருர்.

இளைஞர்:—அப்படி யொன்றும் விசேஷமில்லை. உங்களுடைய முகத்தைப் பார்த்தபொழுது அது என்னுடைய தாயாரின் முகச் சாயலை ஒத்திருந்தது. உடனே என்னைத் தனியாக விட்டு இறந்த விதவைத் தாயாரின் ஞாபகம் வந்துவிட்டது. அப்படி அவளை

நினைத்தவுடன் என்னை யறியாமலே என் கண்களிலிருந்து கண்ணீர் வந்துவிட்டது. தங்கள் முகத்தைப் பார்த்தவுடன், என் தாயாரே ஆண் உருவெடுத்து வந்ததுபோல் தோன்றிற்று. அதுவுமன்றி அதோ அந்தப் புகைப்படத்திலிருக்கும் அம்மாளைப் பார்த்தால் அவர்கள் முகமும் என் தாயார் முகம் போலவே யிருக்கிறது.

சுப்பையர்:—அப்படியானல் உன் தாயார் பெயரென்ன?

இளைஞன்:—அவள் பெயர் ரெங்கம்மாள். அவள்கூட எங்கோ ஒரு ஊரில் அவளுடைய அண்ணன் ஒருவர் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறுள். ஆனல் அவர் எந்தவூரென்று தெரியவில்லை. அவள் என்னிடம் ஒன்றும் சொல்லாமலே நான் பனிரெண்டு வயதுப் பையன யிருந்தபொழுது என்னை அனுதையாக விட்டுவிட்டு இறந்து விட்டாள். (தொடரும்)

---

வண்டிக்காரன்:—ஐயா என் வண்டியில் ஏறுங்கள். காசில்லாமல் செல்லலாம். (கொஞ்சதூரம் சென்று) எடுங்கள் காசை.

பிரயாணி:—ஏனய்யா ! காசில்லாமல் வீடு செல்லலாமென்றீரே?

வண்டிக்காரன்:—அதுதான். உங்ககிட்ட இருக்கிற காசையெல்லாம் இப்போ எங்கிட்டே கொடுத்துட்டுத் தானே வூட்டுக்குப் போகணும். இல்லாவிட்டா........ —S. சேதுராமலிங்கம்

---

## மிகவும் குறைந்த விலை

# திருவாசக விரிவுரை

சமயாசாரியார் மாணிக்கவாசக சுவாமிகள் இயற்றிய திருவாசகத்திற்கு ஸ்ரீலஸ்ரீ சுந்தரமாணிக்க யோகிகளால் எழுதப்பட்ட பொழிப்புரை, விரிவுரை, திருமந்திர மேற்கோள்களுடன் கூடிய உண்மை ஞான விளக்க உரை அடங்கிய அரிய புத்தகம்.

காலிகோ பைண்டு. பக்கங்கள் 878.

முன் விலை ரூ. 10. இப்பொழுது விலை ரூ. 3.

தபால் சார்ஜ் வேறு

'தமிழரசு' ஆபீசு,

சென்னை.

## முதல் தரமான

# உயர்ந்த சந்தனக் கட்டை

எங்களிடம் முதல்தரமான உயர்ந்த சந்தனக்கட்டையும், சந்தனத் தூளும், சந்தனச் சக்கையும், வேரும் கிடைக்கும். உலகத்திலேயே வாசனையில் சிறந்த முதல்தர சந்தனக் கட்டையை நாங்கள் வர வழைத்து வியாபாரம் செய்வதால், உயர்தர சந்தனக்கட்டை வேண்டியவர்கள் எங்களிடம் வந்து பார்த்து வாங்கவும். சில்லரையிலும் மொத்தத்திலும் கிடைக்கும்.

| | | |
|---|---|---|
| சந்தனத் தூள் 1 பவுன் பெட்டி | | 0—9—0. |
| ,, ½ | ,, | 0—5—0. |
| ,, ¼ | ,, | 0—3—0. |

**பழனியாண்டவர் கம்பெனி,**

சந்தன வியாபாரம்,

220, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

---

வெளி வந்து விட்டது ! வெளி வந்து விட்டது !!

# தாசிகளும் தாசிகாந்தர்களும்

## (ஓர் அரிய புதிய நாடக நூல்)

தமிழ்ப் புலவர் ஏ. சொக்கலிங்கம் பிள்ளை எழுதியது.

இந்நூல் தமிழர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாகவும், அநுபவ பொக்கிஷமாகவும், அறிவு புகட்டும் அருமை நண்பனாகவும் விளங்கும். இந் நூலைச் சில பக்கங்கள் வரையில் படித்தால் கடைசி வரையில் படித்து முடிக்கும்படித் தூண்டுமென்பதற் கையமில்லை. நல்ல கிளேஸ் காகிதத்தில் சித்திரப் படங்களோடு கூடிய அழகிய இப்புத்தகத்தின் விலை எட்டணா தான். தபால் செலவு அணா 2. 10 அணா ஸ்டாம்ப் அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

கிடைக்குமிடம் :

**'தமிழரசு' புத்தகாலயம்,**

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# கோல்ட்ஞல்

நண்பர்களே! இந்த மருந்தானது தங்கம் முதலான விலை யுயர்ந்த வஸ்துக்களினுல் தயார் செய்யப்பட்டது. இதனை அநேகர் உபயோகித்து வருகின்றனர். இதன் உயர்ந்த குணத்தைப் பலரும் புகழ்கின்றனர். சிறுவர்கள் முதல் வயோதிகர் வரையில் நிர்ப் பயமாய் உபயோகிக்கலாம். தாது விருத்திக்கு நல்ல மருந்து. மலேரியா என்னும் விஷ சுரத்திஞலாவது அல்லது வேறு எந்த சுரத்திஞலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வமெனவே சொல்ல வேண்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசி யின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாது விருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி அதிகரிக்கும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்தபாண்டு, ஊதுகாமாலை, எலும்புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர் களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பால்யர் முதல் வயோதிகர் வரை ஆண் பெண் இரு பாலர்களும் எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம்.

இம் மருந்தை ஒரு மாதம் சாப்பிட்டால் பலசாலிகளான புத்திரர்களைப் பெறலாம் புத்திர சந்தானம் உண்டாவதற்கு இம் மருந்தை ஆண் பெண் இருபாலர்களும் சாப்பிட வேண்டும்.

**புட்டி 1-க்கு விலை ரூபா 1—4—0.**

## கர்ணபிந்து

சகலவிதமான காது நோய்களுக்கும் இலேசாக அனல் காட்டி காதில் 3 துளி விட்டு, பஞ்சு வைக்கவும். மருந்து உபயோகிக்கும் போது, காதில் சீழ்வடிந்தால் சுத்தம் செய்த பிறகு உபயோகிக்கவும்.

தீரும் வியாதிகள்:—காது குத்தல், சீழ்வடிதல், ஆறாத இரணங்களுக்கு முக்கியமானது.

**புட்டி 1-க்கு விலை அணு 8.**

# கார்டோலின்

## (ஆஸ்தமாவுக்கு அரிய ஔடதம்)

அநேக மருந்துகளால் தீராதெனக் கைவிட்ட நோயைத் தீர்த்திருக்கிறது. ஈளை இருமல், சுவாசகாசம், காச இருமல், மந்தாரகாசம் முதலிய நோய்களுக்குச் சிறந்த மருந்து.

மக்கள் சுவாசக் குழாயினுண்டாகும் வீக்கத்தினாலும், இரணத்தாலும், சுவாசம் விடுவதற்கு ஆயாசப்பட்டும், இழுப்பு இருமலினால் துன்பப்பட்டும் வாடி வருந்துகிறார்கள். ஆங்கிலர்கள் இவ்வியாதியை இரண்டு விதமாகக் கொள்கின்றார்கள். அவையாவையெனில் பிரான்கயடிஸ், ஆஸ்தமா என்பவையாம். இந்தியர்கள் இதை எட்டுவிதமாகப் பிரிக்கிறார்கள். ஈளை இருமல், காச இருமல், சுவாசகாசம், மந்தாரகாசம் என்பனவாகிய பெயர்களால் நோயைக் கணிக்கின்றார்கள். இந்நோயானது மழைக் காலங்களில் பெரும்பான்மையும், துன்பத்தை உண்டுபண்ணுகின்றது. சிற்சிலருக்கு அதிக வெப்பமான காலத்திலும் துன்பம் தருகின்றது.

இந்த நோயால் துன்பமடைவோர்கள் எத்தனையோவிதமான மருந்துகளை சாப்பிட்டும் நோய் நிவர்த்தி ஆகாமையால் மருந்துகளில் நம்பிக்கை இழக்கின்றார்கள்.

வைத்தியர்கள் தங்களால் இயன்ற மருந்துகளை உபயோகித்துப் பார்த்தும் குணமடையாமையைக் கண்டு இந்நோயானது கர்மத்தால் வந்ததெனக் கூறிவிடுகின்றார்கள்.

இத்தகையர்களின் மனதை மாற்றுவான் வேண்டியே நமது கார்டோலின் என்னும் மருந்து வெளிவந்திருக்கிறது. இம்மருந்தால் சுமார் 30, 40 வருடங்களாகக் கஷ்டப்பட்டிருந்த காசநோய் இருந்த அநேகர் சுகப்பட்டிருக்கின்றனர். அஸ்தமா இருமலானது எந்த நிலைமையில் இருந்தாலும் இம் மருந்தானது குணப்படுத்திவிடும். ஆஸ்தமா என்னும் சுவாச ரோகத்தால் துன்பப்படுபவர்கள் அவநம்பிக்கையன்றி இம் மருந்தை வாங்கி உபயோகித்துப் பாருங்கள்.

---

அன்புள்ள, டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, தாங்கள் எனது குமாரனுக்கு ஏற்பட்டிருந்த அஸ்தமா வியாதிக்குக் கொடுத்த கார்டோலினால் என்னும் மருந்தை உபயோகித்ததிலிருந்து இழுப்பு இருமல் நின்றுவிட்டது. இப்பொழுது என்னுடைய மகன் சுகமா இருக்கின்றான்.

சென்னை பேரியமேட்டு கண்டிராக்டர் நா. கணபதி முதலியார்.

**இதன் விலை புட்டி 1-க்கு ரூபா 10.**

# கூழ்ப்பாண்ட லேகியம்

இந்த லேகியத்தில் ஒரு கெச்சக்காய் அளவு காலை மாலைகளில் சாப்பிட பலம் தரும், மலம் தள்ளும், சரீர உஷ்ணம் நீங்கும். மலச்சிக்கல் நீங்குவதும் கணச்சூடு விலகுவதும் இம்மருந்தின் முக்கிய குணம். எலும்புருக்கி நோயால் இளைக்கும் தேகத்தைப் பலப்படுத்தும். குழந்தைகள் முதல் யாவரும் சாப்பிடலாம். யாதொரு பத்தியமும் இல்லை. எண்ணெய் ஸ்நானம் செய்யும் தினம் மருந்தை நிறுத்த வேண்டும். சுரம், தலைவலி யிருக்கும் காலத்தில் மருந்து சாப்பிடலாகாது. மருந்து குளிர்ச்சியைத் தரக்கூடியது.

## சில அபிப்பிராயங்கள்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

என்னுடைய பேத்திக்குக் கொடுத்த கூழ்ப்பாண்ட லேகியம் 6 மாதமாய்க் கொடுத்து வந்ததில் தேகம் மேனியும் சதையும் பிடித்திருக்கின்றது. இனி மீன் எண்ணெயை உபயோகிக்கவே மாட்டோம். இன்னும் 10 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் அனுப்பவும். என்னுடைய குமாரன் வக்கீலுக்குப் படிப்பதால் அவனுக்கும் இதைக் கொடுத்து வருகிறேன். இதனால் சரீரத்தில் உஷ்ணம் ஏற்படாமலும், மலச்சிக்கலில்லாமலும், சாப்பிட வாய்க்கு ருசியாயும் இருப்பதால் அதிகமாய்ச் சாப்பிட்டு வருகிறான்.

எங்கள் குடும்பத்திற்காகக் கூழ்ப்பாண்ட லேகியத்தை ஒரு ஜாடி செய்து கொடுத்தால் நலமாய் இருக்கும்.

என்னுடைய ஜூனியர் மாயவரம் பார்த்தசாரதி ஐயங்காரும், இந்த லேகியத்தை அடிக்கடி கேட்டுக்கொண் டிருக்கிறபடியால் அவருக்காகக் கொஞ்சம் தயார் செய்யவும். இந்தக் காலத்துப் பையன்களுக்கு இது மிகவும் அவசியமானது.

R. சடகோபாச்சாரியார், B. A. B. L. ஐகோர்ட் வக்கீல்.

---

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தங்களைப் பார்த்து வெகுநாளாய் விட்டது. நான் இளையாளை மணந்த பிறகு 'டனுக்கு' என்னும் ஊருக்கு ஜில்லா முனிசிப்பாக இருக்கிறேன். தங்கள் கூழ்ப்பாண்ட லேகியத்தினால்தான் என் குழந்தைபெருத்து நன்றாக பலத்து இருந்தது. இப்போது எனக்குக் கூழ்ப்பாண்ட லேகியம் 5 பவுன் வி. பி. யில் அனுப்ப வேண்டியது.

இப்படிக்கு,

C. ராஜகோபாலாசாரியார் B. A. B. L.

District Munsiff, Tanuku.

ஒரு பவுன் புட்டி விலை ரூ. 2.

# காஸ்டோலின்

## (இது சர்வ படையையும் சம்மரிக்கும்)



சரீரத்தில் இடுப்பிலும், கழுத்துப் பட்டைகளிலும், துடையின் இடுக்கிலும், சாமான் கூட்டின் மேலும் படரும் படையானது இரவு பகலாக மானாபிமானம் விட்டு பலர் முன்னிலையில் சாமான் கூட்டில் கையை வைத்து நமை நீங்க சொரிந்து கொள்ளச் செய்கின்றது.

சிலர்க்கு முகத்திலும் கழுத்திலும் படர்ந்து விகாரத்தை உண்டு பண்ணுகின்றது. சிற்சிலருக்கு முழங்காலுக்கு கீழ், கணுக்காலுக்குமேல் படர்ந்து எந்நேரமும் நீர் கசிந்து கொண்டு இரணமாய் இருக்கின்றது.

இத்தகைய வியாதிக்கு இங்கிலீஷ் மருந்தில் ஆசிட்சாலிசிலிக் என்னும் பவுடரை மெதிலேடட் ஸ்பிரிட் என்னும் திரவத்துடன் கலந்து பலர் படை மருந்து என்று விற்கின்றார்கள். இம் மருந்தை வாங்கி பூசினவுடன் எரிச்சல் கொடுத்து உதிர்வதுபோல் காணப்பட்டு மீண்டும் திரும்பி விடுகின்றது. எரிச்சலும் பொறுப்பது கஷ்டமாகின்றது. சிலருக்குக் குணமே கிடைப்பதில்லை. ஆதலால் அத்தகைய மருந்தைக் காட்டிலும் தமிழ் மருந்தே வேருடன் களையக் கூடியது. ஆகையால் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ள காஸ்டோலின் என்னும் விளக்கெண்ணெயினால் தயார் செய்த படை மருந்தை உபயோகித்துப் பாருங்கள்.

எவ்வித படைகளையும் நொடியில் போக்கும் தன்மை வாய்ந்தது. உபயோகிக்கும்போது எரிச்சல் உண்டாகாது. வேஷ்டியில் கரை பிடிக்காது. எத்தனை வருஷமாக இருக்கப்பட்ட இரணமானாலும் போக்கக் கூடியது.

இதனை உபயோகித்தவர்கள் உங்களுக்கு இதன் பெருமையைச் சொல்லுவார்கள்.

**வேண்டுவோர் 6 அணா தபால் தலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.**

## நற்சாட்சி பத்திரம்

வைத்திய ஆசிரியர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

என் குடும்பத்தில் ஒருவருக்கு சரீரம் முழுதும் 'எச்சிற்றழும்பு'போல் ஒருவித படை உண்டாகி இருந்தது. அதற்கு வேண்டிய வைத்தியங்கள் செய்தோம். ஒன்றும் குணப்பட்டு வரவில்லை. இறுதியில் அவர் கஷ்டம் தாங்க முடியாது பாயும் படுக்கையுமானார்.

இப்படி யிருக்கையில் சென்னை சென்று வந்த என் நண்பரொருவர் தன்னிடம் தங்களால் தயாரிக்கப்பட்ட 'காஸ்டோலின்' என்ற படை மருந்து இருக்கிறதென்றும், ஒரு சமயம் இந்த மருந்தினால் மேற்கூறப்பட்டவரின் படை வியாதி நீங்கினாலும் நீங்கக் கூடும் என்றும் கூறி என்னிடம் மேற்படி மருந்தைக் கொடுத்தார்.

அதைப் பாயும் படுக்கையுமாகக் கிடந்த படை வியாதியினருக்கு நான் அதில் கூறிய முறைப்படி போட்டதில் மிகுந்த ஆச்சர்யமான குணத்தைக் கொடுத்தது. அவர் உங்களை வாழ்த்தாத நேரமில்லை. இப்போது அவருக்கு 3, 4, மாதங்களாக தேகத்தில் ஒருவித வியாதியும் இல்லாமல் இருந்து வருகிறது. நமது இந்தியர்கள் தங்களின் 'காஸ்டோலின்' மருந்தை வாங்கி உபயோகிப்பார்களானால் எவ்வளவோ நன்மை யடைவார்கள். வேறு மருந்துகளுக்குப் பணத்தை வீணில் கொடுத்து தேகத்தையும் அனியாயமாகக் கெடுத்துக் கொள்வதினின்றும் காக்கப்படுவார்கள். தங்களின் 'காஸ்டோலின்' ஒரு சிறந்த ஔடதம் என்பதை மனமுழு உண்மையுடன் கூறுகிறேன். தங்களின் வைத்தியம் சிறப்பதாக!

அன்புள்ள,

G. M. அலிஹுஸைன் M. H. A.,

கௌரவ காரியதரிசி, 'ஹுஸைனியா சங்கம்'

ஜெனரல் அட்வர்ட்டைசர், ஆர்டிகலிஸ்ட் நாகூர் 26-12-34.

---

ம-ா-ா-ஸ்ரீ டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

ஹெட்மாஸ்டர் D. S. ரங்கா ராவ் வணக்கமாய் எழுதிக் கொண்டது. இப்பவும் நான் இரண்டு வருஷகாலமாகத் தங்கள் மருந்து (காஸ்டோலின்) வரவழைத்து என் சிநேகிதர்கள் படை சௌக்கியமா யிருப்பதைக் காண எனக்கு கணக்கில்லாத ஆனந்தம் ஏற்பட்டிருக்கிறதை இக்கடித மூலம் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். என் அநுபோகத்தில் இம்மருந்தை மிகவும் சிலாக்யமாய்க் கருதுகிறேன். எனக்குப் படை ஏற்பட்ட இடத்தின் அடையாளமே இல்லாமல் வேறு தோல் வளர்ந்தது. ஆகையால் தாங்கள் தயவு செய்து இந்த லெட்டர் கண்டவுடன் இதில் அனுப்பிய 7 அணு ஸ்டாம்பைப் பெற்றுக்கொண்டு உடனே இன்னுமொரு காஸ்டோலின் மருந்து பாட்டிலை அடியில் கண்ட விலாசத்திற்கு அனுப்பக் கோருகிறேன்.

இப்படிக்கு,

D. S. ரங்கா ராவ், ஹெட்மாஸ்டர்.

பசுபதிபாளையம், எலிமெண்டரி ஸ்கூல்,

மேலபாளையம் போஸ்டு, வையா கரூர்.

# காங்க்ரீன் என்னும் இரண சஞ்சீவி

இம் மருந்தானது எல்லாவித இரணங்களையும், கட்டிகளையும் ஆற்றும். மதுமேக நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்குக் காணும் இராஜக் கட்டியானது எவ்வளவு அபாய நிலையில் இருந்தாலும் குணமாய் விடும். ஆஸ்பத்திரிகளில் பார்த்து தீராதென அனுப்பி விட்ட கேசுகளை ஆச்சரியகரமாய் குணம் செய்யும். அநேக ஆங்கில வைத்தியர்கள் இதை உபயோகிக்கின்றனர்.

ஆஸ்பத்திரிகளில் பெரிய டாக்டர்களாக இருக்கும் என் சகோதர வைத்தியர்களுக்குத் தெரிவிப்பது: உங்கள் ஆஸ்பத்திரி களிலாவது அல்லது தனிப்பட்டாவது பார்க்கப்பட்ட ராஜகட்டி கள் (சைன்ஸ்) வைத்து (டையபடிக் கோமா) வந்து இனி இக்கேசு பிழைக்காது என்று நினைக்கும் சமயம் நீங்கள் கைவிட்ட சமயம் உங்கள் (இன்சொலின்) குணம் தராத காலத்திலாவது இதை உபயோகித்து உயிரைக் காப்பாற்றுங்கள். ஆஸ்பத்திரிகளில் ஆப்ப ரேஷன் செய்யாமல் இரணங்களை ஆற்றி விடுங்கள். உங்களுக்கு இதன் குணம் தெரிந்துக்கொள்ளும் வரையில் உங்களால் முடியாது என்றபோது இதை உபயோகித்துப் பாருங்கள். முக்கியமாய் ஜெனரல் ஆஸ்பத்திரி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரி, டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளிலிருக்கும் டாக்டர்களுக்கும், இந்தியன் மெடிகல் ஸ்கூல் பிரின்சிபால் அவர்களுக்கும் வற்புறுத்தி மறுமுறையும் கேட்டுக் கொள்வதாவது உங்களால் முடியாது என்று எண்ணிய பிறகாவது எங்கள் இரண சஞ்சீவியை உபயோகித்துப் பாருங்கள்.

கண்டமாலை, அறையாப்புக் கட்டி இவைகளையும், எத்தகைய ராஜ கட்டிகளையும், புரைப் புண்களையும் ஆற்றிவிடும்.

இம்மருந்து சேர்த்துப்புண், சொரி சிரங்கு, முகத்தில் காணும் மோகப்பருவு இவைகளை நீக்கும்.

ஆராத மேகப்புண், மேகப்படை கட்டி இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். பவுத்திர வியாதிக்கு மேல் பூசினால் இரணம் ஆறிவிடும்.

## சில அபிப்பிராயங்கள்

சென்னை கந்தப்ப முதலித் தெருவு, நெ. 21, P. சோமசுந்திர செட்டியார் தெரிவிப்பது:—நான் என் தாயாருக்கு ஏற்பட்டிருந்த ராஜகட்டிக்காக டாக்டர் மல்லய்யாவிடமும், ரங்காசாரியாரிடமும் இராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலும் காட்டி குணமடையாமல் சாகும் நிலையில் இருந்தபோது துரைசாமி ஐயங்கார் சொல்லியபடி

தங்களிடம் வந்து மருந்து கேட்டேன். தாங்கள் கொடுத்த இரண சஞ்சீவியால் முள்ளந்தண்டிலும் மார்பிலும் வயிற்றிலும் இருந்த கட்டிகள் சுகமாய்விட்டன. பிறகு இன்பசாரம் சாப்பிட்டதில் இரத்தம் விருத்தியடைந்தது. நீரில் சர்க்கரை அதிகமாய் இருந்ததும் மறைந்து விட்டது. 12—12—33.

---

தே. வ. இ. சோமசுந்திரம் செட்டியார், கல்லல். தெரிவிப்பது:—

எனக்கு முதுகில் ஏற்பட்டிருந்த ராஜகட்டிகளை ஒரு தரம் திருப்பத்தூர் ஆஸ்பத்திரியில் ஆப்பரேஷன் செய்து ஒரு வருடமாய் ஆராமல் நீர் வந்துகொண்டே இருந்ததும் தவிர மேல்கொண்டு பல கட்டிகளும் முதுகு பூராவும் சல்லடைக் கண்கள் போல் உண்டாய் விட்டன. பாதை பொறுக்க முடியாமல் கஷ்டப்பட்டிருக்கும் சமயத்தில் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் கல்லல் ஆ. மு. ஆ. வீட்டுக்கு வந்தபோது காண்பித்தேன். அவர் பட்டணம் வந்தால் பூரணமாய்க் குணப்படுத்தலாம் என்று சொல்லி இரண சஞ்சீவியைப் போடக் கொடுத்தார். கொஞ்சம் வலி குறைவாயிருந்தது. அதுசமயம் ஆ. மு. ஆ. முருகப்ப செட்டியார் அவர்கள் இந்தக் கேசை உங்களால் குணப்படுத்த முடியுமானால் பட்டணம் அனுப்பலாம், இல்லாவிடில் திருப்பத்தூரிலேயே பார்க்கலாம், என் மகன் இந்த வியாதியால் இறந்து போனான் என்று சொன்னதைக் கேட்டபின் உறுதி சொன்னதின் மேல் நான் பட்டணம் வந்து ஒரு மாதம் மருந்தைப் போட்டதில் சகல கட்டிகளும் ஆச்சரியமான வகையில் இரண சஞ்சீவியால் குணமாய் விட்டது. என்னிடம் ஒரு டஜன் இரண சஞ்சீவியை வைத்துக்கொண்டு ஏழைகளுக்குக் கொடுத்து சுகப்படுத்தி வருகிறேன். இரண சஞ்சீவியை ஒவ்வொரு வீட்டிலும் கையிருப்பாக வைத்திருப்பது அவசியம். 10—9—33.

குறிப்பு:—இன்னும் கணக்கற்ற இரணங்களும் இராஜகட்டிகளும் குணமான நற்சாட்சி பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் இடமில்லாமையால் இரண்டு மாத்திரம் இங்கு குறிப்பிட்டோம்.

**விலை புட்டி 1-க்கு ரூபா 1.**

807679

எமது விலாசம்:

**டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,**

**31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.**

சென்னை 600